காங்கிரஸ் மகாசபை

32-வது கூட்டம்



அக்கிராசனாதிபதி

...ளராதுஸ்ரீ அனி பெஸண்டம்மை

...ரசங்கத்தின் மொழிபெயர்ப்பு.

32-வது காங்கிரஸ் மகாசபை.

கல்கத்தா, 1917.

அக்கிராசனாதிபதி மாதா ஸ்ரீ அனி பெஸண்டின் ஆரம்பப் பிரசங்கம்.

முன்னுரை.

சகோதரப் பிரதிநிதிகளே! நண்பர்களே!

இச் சபைத்தலைமை, இந்தியா நாட்டுடையவைகள் எல்லாவற்றிலும் ஒப்புயர்வற்று விளங்குவது என்னும் உண்மையான மதிப்பைப்பெற்றது. எனக்கு முன் இதை வகித்தோர் தமது நன்றியைத் தக்க சொற்களால் வெளிப்படுத்தினர். ஒருவர் பால் இந்நாடு முழுவதும் அன்பும் பூரண நம்பிக்கையும் திருப்தியும் கொண்டிருக்கிறது என்பதற்கு இச்சபைத் தலைமையை அவர்க்குத் தருதல் அறிகுறியாம். இவ்வாறு ஒருவருக்கும் இவ்வக்கிராசனத்து அமர்வோர் ஒரு ஆண்டிற்கு இத்தேசத்தவர் தேர்ந்தெடுத்த தலைவராவர். எனக்கு முன்பு இங்கமர்ந்தவர்கள் தங்கள் நன்றியை ஏற்ற மொழிகளால் புலப்படுத்தினார்களானாலும், அவர்களைவிடப் பன்மடங்கு அதிகமாக உங்களுக்குக் கடமைப்பட்டுள்ள யான் எம்மொழிகளால் எனது நன்றியை வெளியிடுவேன்? அரசாங்கத்தாரது கொடிய கோபத்திற்கு இலக்காகி, நாட்டின் அமைதியைக் கெடுப்பவளென்று சிறைப்படுத்தப் பட்டுக் கிடந்த ஒருத்தியை உங்கள் சபைத் தலைமை வகிக்க நீங்கள் தேர்ந்தெடுத்தது, காங்கிரஸ் சரித்திரத்தில் இது தான் முதல் தடவையாகும். யான் அவமதிக்கப்பட்டுக் கிடந்த காலத்தில் எனக்கு நீங்கள் பெருமதிப்பு தந்தீர்கள். என்னைப் பிறர் அலர் தூற்றிய போது யான் நேர்மையிலும் சத்தியத்திலும் தவறாதவள் என்று நம்பினீர்கள். குடிகளுக்கு உத்தரவாதிகளாகாத வலிமை பொருந்திய அதிகாரிகள் என் ஆற்றலை ஒடுக்கி முடக்கிக் கிடத்திய சமயத்தில், நீங்கள் எனக்கு சனத்தலைமையைத் தந்தீர்கள். யானே பேசி என்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாதிருந்த காலத்தில் எனக்காக நீங்கள் பரிந்துவந்து பேசி என்னைச் சிறையினின்றும் விடுவித்தீர்கள். மிக சாதாரண நிலையிலிருந்த இந்நாட்டுக்குப் பாடுபவளைப் பெருமையா யெண்ணியிருந்த என்னை, உலகறிய உங்கள் பிரதிநிதி யென்று உயர்த்தினீர்கள். சொல்லால், வாக்கு சாதுர்யத்தால் உங்களுக்கு நான் கைம்மாறு செய்ய முடியாது, என் செய்கைகள் தாம் எனது நன்றியை வெளியிட வேண்

டும், சொற்களுக்கு அவ்வாற்றல் சிறிது மில்லை. நீங்கள் கொடுத்த பரி தாய் நாட்டின் ஊழியத்திற்காக உபயோகப் படுத்திக் கொள்கிறேன். நம்மிந் திய மாதாவை என் ஊழியத்தால் வழிபடும் பொருட்டு என் ஜீவியத்தை மீண்டும் அர்ப்பணஞ் செய்கின்றேன். என்னுடைமைகளையும் என்னையும் நமது தாய்க்கு நிவேதிக்கின்றேன். யாமியாவரும் ஒருங்கு சேர்ந்து வெறுஞ் சொல்லாலன்றிச் செய்கையால் 'வந்தேமாதரம்' என்று உரத்துக் கூறுவோ மாக.

இந்தியாவின் கதி சாசுவதமாய் நிர்ணயிக்கப்படவிருக்கும் இச்சந்தர்ப்பத் தில் என்னை நீங்கள் தெரிந்தெடுத்ததில் ஒரு விசேஷமுண்டு. இந்தியாவில் பிறக்க நான் கொடுத்து வைத்திருக்கவில்லை. மேற்குலகில் வடசமுத்திர மூலை யில் கிடக்கும் சுதந்திரக்கிளர்ச்சி பிறந்த விடமாகிய ஒரு சிறிய தீவில் நான் பிறந்தேன். ஐரோப்பா வெங்கும் வியாபிக்கலான ஆரிய குலத்தார் தங் கள் ஜன்ம தேசமாகிய ஆசியாவிலிருந்து எங்குபோனாலும் சுயேச்சை என் பதன் விதையைக் கொண்டுபோனார்கள். மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள், ஆங்கில கிராமங்களின் சுய ஆட்சி ஸ்தாபனங்கள் கீழ் நாட்டு ஸ்தாபனங்களின் உருவமைந்தவையென்றும், கீழ் நாட்டு ஆரி யர்களின் சுயேச்சையே இங்கிலாந்தில் வளரலாயிற்றென்றும் சுதந்திரக் கிள ர்ச்சியின் வம்சாவளியில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தியாவில் ஆதிகாலம் தொட்டு வழங்கிவந்த சுயேச்சை உணர்ச்சியா னது ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் அடிவைத்ததும் எப்படி நசித்துப் போயிற்றோ, அப்படியே தான் இங்கிலாந்திலும் நார்மன் ஜாதியார் ஜெய பேரிகையுடன் வந்தபோது சுதந்திர உணர்ச்சியின் வளர்ச்சி ஒடுங்கிப்போய் விட்டது. என்றாலும் அந்தவிலங்கை யறுத்துக் கொண்டு இங்கிலாந்தில் சுயே ச்சை அபிமானம் பெருகிக்கொண்டே வந்தது. காமன்ஸ் சபையும் சிறிது காலத்துக்குப் பின் ஏற்பட்டு விட்டது. இந்தியாவிலும் காங்கிரஸ் மகாசபையும் சமீபகாலந்தொட்டு மூஸ்லீம் லீக்கும் இதே சுயேச்சாபிலாஷையி லிருந்து உதித்தனவென்று சொல்வது மிகையாகாது. இரண்டும்கடைசியில் சுயஆட்சிப் பிரச்சினையில் இப்பொழுது வந்து முடிந்தன. மில்டன், கிராம்வெல், விட்னி பர்க், பெயின், ஷெல்லி, வில்பர்போர்ஸ், கிளாட்ஸ்டன் ஆகிய மகத்தான மகான்கள் பிறந்த விடமும், மாஜினி, கோஸ்த் குரோபட்கின், ஸ்டெப்னியக், கரிபால்டி ஆகிய தேசாபிமானிகளை ரக்ஷித்த தேசமும், சுயேச்சாபத்தியம், கொடுங்கோல் ஆட்சி இவைகளை வெறுத்து சுயேச்சையே உருவாயிருப்பது மான இங்கிலாந்தின் பிரதிநிதியாய் இன்று நான் உங்கள் முன் தோன்ற ஆவல்கொண்டுள்ளேன். தன் மதிப்பும் தன் நம்பிக்கையும் சுயேச்சை உணர்ச் சியும் தோன்றி, ஜாதீய ஐக்கியம் ஏற்பட்டிருக்கும் இவ்விந்தியா கிரேட் பிரிட்ட னுடு வேலுவில் சகோதரத்துவம் பாராட்டி ஒத்துழைக்கின்ற இச்சந்தர்ப்பத் தில் அவ்விரு தேசங்களின் சா[illegible]க்கு அறிகுறியாய் என்

னை நீங்கள் பாவிக்கும்படி வேண்டுகிறேன். ஈசன் அருளால் இப்பந்தம் ஏற்பட்டிருப்பதால் அதன் மூலமாய் பரஸ்பரம் நன்மை யுண்டாகாமற் போகாது.

பரகதி அடைந்த தேசசேவகர்.

இந்தியாவின் தலைவர்களில் முதன்மை பெற்ற ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி பரகதி யடைந்து திருவடி நிழலில் அமர்ந்து இந்தியாவின் முன்னேற்றத்தைக் கவனித்து வருகிறார். உமேச்சந்திர பானர்ஜி, எ. ஓ. ஹியூம், ரானடே, ஹென்ரி காட்டன், பெரோஸ்ஷா மேடா, கோபால கிருஷ்ண கோகலே ஆகிய மற்றும் சுயேச்சைக்கு வழிகாட்டியாய் நின்ற தேவர்களுடன் ஸ்ரீ தாதாபாய் சேர்ந்து நிற்கிறார். அவருக்கு செலுத்தவேண்டிய நன்றியை என்னால் சொல்லித்தீராது. அவர் செய்துள்ள காரியங்களிலேயே அவருடைய கீர்த்தி நின்று நிலவுகின்றது. தேச ஊழியத்திலும் தைரியத்திலும் அவரைப் பின்பற்றி அவருடைய தேசத்தினர் அனைவரும் நடப்பார்களானால் அதுவே அவருக்குப் போதிய நன்றி செலுத்தியதாகும். அங்ஙனம்செய்தால், அவர் உயிரோடிக்கிருக்கும்போதே காண விரும்பியதும், சின்னாட்களில் மேனுலகிலிருந்து அவர் காணக் கிடைப்பதுமான சுய ஆட்சியை நாம் பெற்றுவிடுவோம்.

யுத்தமும் இந்தியாவும்.

மகா யுத்தம் ஆரம்பித்து மூன்று வருஷங்களாய் விட்டன. நான்காவது வருஷமும் நடந்து வருகிறது. தேசத்துக்குப்பின் தேசமாக யுத்தச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு உழலுகின்றது. யுத்தப் போக்கைப் பற்றிய உண்மை வெளிவராதபடி அதிகாரிகள் கடுமையாய் கவனித்து வருவதால் கவர்ன்மெண்டாருக்கு மட்டுமே அது இத்தனை காலம்நீடித்திருக்கு மென்பதை யூகிப்பது சாத்தியமாகும். ஆனாலும் யுத்தத்தின் முடிவை காலத்தைத் யூகிக்க ராஜதந்திரம் அவ்வளவாய் வேண்டியதில்லை. பாரமார்த்திக தத்துவங்களை யுணர்ந்த எனக்கு அதன் முடிவு காலம் நிச்சயமாய் தெரியும். எல்லாத்தேசங்களின் அடிமைத்தனத்தையும், கொடுங்கோல் ஆட்சியையும் வேருடன் அறுத்து, கடவுளால் அநுக்ரகிக்கப்பட்ட நியாயபிவிருத்தி, சுய ஆட்சி யென்ற சுதந்திரங்களுக்கு பலமான அஸ்திவாரம் போடவே இந்த யுத்தம் நடந்துவருகிறது. இதுதான் யுத்தம் நடந்து வருவதன் உண்மையான நோக்கம். அரசர்களின் சுயேச்சாபத்தியமும் அதிலும் கேடான அதிகாரி வர்க்கத்தினரின் ஊழல்களும் பழைய நாட்களில் ராவணாதிகளிடம் குடிகொண்டிருந்தது போல் இப்போது சத்துரு தேசங்களடங்கிய மத்திய ஐரோப்பாவில் வேரூன்றி ஆழ்ந்து கிடக்கின்றன அவை அழிந்தாலன்றி புதிய நாகரீகத்தை நாம் அடைந்தவர்களாகமாட்டோம். சத்தியம் தர்மம் சகோதரத்வம் என்ற கொள்கைகளின் மேல் தான் சுயேச்சை, சாவதானம், சுபிக்ஷம் ஆகிய மூன்றும் வளர்க்கக்கூடும். இவையடங்காத பழைய நாகரீகந்தான் இப்போது அழியுந்தருவாயிலிருக்கிறது. ஆகை

யால் இந்நோக்கங்கள் ஈடேறும் வரையில் யுத்தத்தை நடத்தியே தீரவேண்டும். அரைகுறையாய்ச் சமாதானம் செய்து கொண்டால் எண்ணிய எண்ணங்கள் அனைத்தும் கைகூடாமற் போய்விடும். கீழ் நாட்டிலாகட்டும், மேனாடுகளிலாகட்டும் அதிகார வர்க்கத்தினரின் ஆட்சியும் சுயேச்சாபத்தியமும் அறவே ஒழிந்து போகவேண்டும். அழிந்த விடத்தில் மீண்டும் குருத்துக் கிளம்பாமலிருக்கும்படி மனிதர்களின் மனதில் அம்முறைகளின் கேடுகள் நன்கு பதில் வேண்டும். ஜன நாயக ஆட்சியே உத்தமமான தென்ற விஷயம் உலகத்தாரின் மனதில் தெளிவாய் தோன்றவேண்டும். வெளித் தோற்றத்துக்கு பகட்டாயிருப்பினும் வெறும் ஆடம்பரங்களில் பலம் காட்டினும் சுயேச்சாபத்தியம் தழைத்து ஓங்காது. குடியாட்சிக் காரர்களின் வேலைகள்தான் நின்று நிலவும். பழைய வழக்கங்கள் தற்கால ரீதிக்கு ஒவ்வா. பழைய ஆட்சி முறைகள் காலகதி யடைய சமயம் வந்து விட்டது.

உடன் படிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு ஒரு சிறிய தேசத்தைக் காப்பாற்ற முன் வந்ததனால்தான் கிரேட்பிரிட்டனைக்கண்டு இந்தியாவுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் பிரமாதமான உத்ஸாகமும் உணர்ச்சியும் பிறந்தது. சற்றும் யோசியாமல் அவை கிரேட்பிரிட்டனுக்குத் துணையாய் உடனே நின்றன. சுயேச்சையின் காவற் புருஷனாகிய இங்கிலாந்தின் பேரைக் கேட்டதும் அவைகளுக்கு உத்வேகம் முண்டாய் விட்டது. யாரும் எதிர்பாராத சமயத்தில் யுத்தம் தொடங்கியபோது கிரேட்பிரிட்டனில் சொற்ப சைன்ய மொன்றுதான் தயாராயிருந்தது. அதுவும் லார்ட்ஹால் டேனுடைய முன் யோசனையினால் ஏற்பட்டது. இந்தியாவில் யுத்தத்துக்கு ஆயத்தமாயிருந்த சைன்யமும் லார்டு ஹார்டிஞ்சின் தீர்மானப்படி போருக்குக் கிளம்பிற்று. இந்தியர் பிரான்ஸில் காலடி வைக்கும் வரையில் சொற்பத் தொகையினரடங்கிய பிரிட்டிஷ் சைன்யம் விடேன் தொடேனென்று இழுத்துக்கொண்டு நின்றது. அப்பால் இந்தியத் துருப்புகள் சளைத்த பட்டாளங்களைத் தாண்டிச் சென்று இரண்டு வருஷம் போல் முஷ்டி யுத்தத்துக்கு நின்று இடுப்புவரை சேற்றில் அழுந்தியும் பின்வாங்காமல் போர்புரிந்தனர்.

ஆதிமுதல் இந்தியர், தெளிவான திருஷ்டி படைத்தவரை யொப்ப சுதந்திரத்தை நிலைநாட்ட மார்தட்டி நிற்கும் கிரேட் பிரிட்டனை ஆதரித்து துஷ்டர்களாகிய ஜெர்மானியரை வெறுக்கத் தலைப்பட்டனர்; ஜெர்மானியரைவிட மோசமாய் சுயேச்சாபத்தியம் செலுத்தி அடக்கு முறைகளைக் கையாண்டுவந்த கிரேட் பிரிட்டனை எதற்காக இந்தியர் ஆதரித்தனர் என்று கேட்கலாம். இந்தியாவில் அனுஷ்டிக்கப்படும் முறைகள் பிரிட்டிஷாரின் இயற்கையான குணங்களைப் பொறுத்தவை யல்லாததால் அவை என்றும் நிலைத்திரா தென்பதை இந்தியர் நன்றாய்உணர்ந்து, ஜெர்மானியரின் மோசக் கருத்துக் குட்படாமல், சகல விதமான தியாகங்களும் செய்ய மார்தட்டி நின்றார்கள். பணமோ மனிதரோ கொடுக்கப் பின் வாங்கவில்லை. படித்த வகுப்

பினரும் வக்கீல்களும் தங்களை வாலண்டியர்களாக எடுத்துக் கொள்ளக் கூடாதா வென்று கெஞ்சிக் கேட்டார்கள். ஆனால் என்றைக்கும் இந்தியரை நம்பாத ஆங்கிலோ இந்தியர்கள் "பணத்தை மட்டும் கொடுங்கள்; மனிதர்கள் வேண்டாம்" என்றனர். எனவே படித்த இந்தியர் மனம் நொந்து மிகவும் அதைரியம் அடைந்தனர்; பிரிட்டிஷ் இந்திய சமூகங்கள் ஐக்கியப்பட மிகச் சௌகர்யமான சந்தர்ப்பம் இவ்விதம் வீணாய்விட்டது.

யுத்தம் எப்பொழுது முடியும்?

அதிகாரி வர்க்கத்தினரின் ஆட்சி முறையும் சுயேச்சாபத்தியமும் அதாவது இந்தியாவிலும் எப்பொழுது ஒழியுமோ அப்பொழுது தான் இம்மகா யுத்தமும் முடியக்கூடும் என்று நான் யுத்தம் ஆரம்பமானதும் சொல்லியிருக்கிறேன். சுயேச்சை ஆகிய காற்றுவீசப்பிறந்து வளர்ந்த தைரியசாலிகளையொப்ப, கல்கத்தா பிஷப் (ஐரோப்பாவிலும் கிறிஸ்தவமத அத்தியட்ச குரு) சமீபத்தில் பேசியபோது, கட்டுக் கடங்காத ஆட்சியை ஐரோப்பாவில் ஒழிக்க விரும்புவோர் இந்தியாவில் மட்டும் அது நிலைத்திருக்கச்செய்ய வழிதேடினால் அவர்களை ஜனங்கள் வெகு கேவலமாய் மதிப்பார்கள், என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். அவருடைய பெருந்தன்மையே அவரை அவ்வாறு பேசும்படி தூண்டிற்று. அது எப்படியிருந்தபோதிலும் 'இந்தியாவுக்குச் சுய ஆட்சி கொடுப்பதே பிரிட்டிஷ ஆட்சியின் முதல் லட்சியம் என்றும், அதற்கடிப்படையான சீர்திருத்தங்கள் உடனே செய்யப்படுமென்றும் பகிரங்கமாய் அறிவிக்கப்பட்டுப்போயிற்று. சென்ற வருஷம் லக்ஷ்மணபுரி காங்கிரஸ் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தப் பிரேரணைகள் இப்போது பூர்த்தியாகுமானால் யுத்தத்தின் முடிவை சீக்கிரத்தில் எதிர்பார்க்கலாம். ஏனெனில் சுயேச்சா பத்தியற்குச் சாவுமணியடிக்கப்படும் வரையில் யுத்தம் முடிவடைய நியாயமில்லை,

இந்தியாவின் ராணுவ பலமும் யுத்தச் செலவுகளும்.

யுத்த ஆரம்பத்தில் இந்தியர் பிரிட்டிஷாரின் யுத்த சோக்கத்தில் ஈடுபட்டுத் தங்கள் அனுதாபத்தைக்காட்டிலும் தங்களால் இயன்ற உதவியை புரிந்தும் ஒருமனதாய் செய்துவந்தார்களாயினும் பிறகு தங்கள் கட்டுக்கடங்காத பலவேறு காரணங்களின் பலனாக ஏகாதிபத்தியத்தில் தங்கள் பிற்கால நிலைமையைப்பற்றி சிறிது கவலை கொள்ளலாயினர். ஆயினும் அதுபற்றி இந்தியர் உதவி புரியாமலிருந்து விடவில்லை. இன்றைக்கும் இந்தியர் எவ்வளவோ தியாகங்கள் செய்து வருகிறார்கள். 1885-ம் வருஷமுதல் காங்கிரஸ் மகாசபை கண்டனம்செய்ய ஆரம்பித்தும் அனாவசியமான யுத்தச்செலவுகளை இந்தியா சுமந்துகொண்டு தான் வந்தது. 1859ம் வருஷத்திலிருந்து 1904ம் வருஷம் வரையில், அதாவது சுமார் 45 வருஷகாலத்திற்குள் 37 யுத்தங்களிலும் படையெழுச்சிகளிலும் இந்தியத்துருப்புகள் உதவியாயிருந்தனர். இவ்வ காரண

மாக இந்தியாவின் ராணுவச்செலவு பெருகிக்கொண்டே போயிற்று. 1878-ல் மால்டாவுக்கும் சைப்ரஸுக்கும் இந்தியத் துருப்புகள் வீண் ஆடம்பரமாக அனுப்பப்பட்டன. 1884-ல் ருஷ்யா இந்தியாவில் ஆக்கிரமிக்குமோ வென்று திகிலடைந்து 20 லட்சம் பவுன் இந்தியத்திரவியத்தைச் செலவிட்டார்கள். இதெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தை யனுசரித்துச் செய்யப்பட்டதென்றே சொல்லவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார் ஒவ்வோர் சமயத்தில் ஆட்சேபித்ததைக்கூடயாரும்பொருட்படுத்தவில்லை. பல போராசை பிடித்த ராஜப்பிரதிநிதிகள் ஏகாதிபத்தியப் பெருமையையும் போக்கையும் ஆதரித்து வந்தார்கள். இதோடு நின்றுவிடவில்லை.

இந்தியாவானது ஈஸ்ட் இந்தியா கம்பெனியென்னும் பிரிட்டிஷ் வர்த்தக சங்கத்தாரின் ஆதீனத்திலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நேரான ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது முதல் அதனைப்பெரிய ராணுவ பக்க பலம் என்று மதித்து வருகிறார்கள். அதற்கு முன்னர் இந்தியப் பணத்தைக்கொண்டு சம்ரட்சிக்கப்படும் சைனியத்தை இந்தியாவின் காப்புக்கே உபயோகப்படுத்த வேண்டுமென்று ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் சுய நலங்கருதி வற்புறுத்தி வந்தார்கள். அவர்களின் நோக்கம் எதுவாயினும் அதன் பலனாக இந்தியாவுக்கு இருந்துவந்த சாதகமானது அவர்களின் ஆட்சியோடு போய்விட்டது. தவிர, பிரிட்டிஷ் ஏகாதியத்தியத்தின் நேரான ஆட்சிக்குட்பட்ட 20 வருஷங்களுக்குப்பின் போர்புரியும் வகுப்பினரென்றும் போருக்கு லாயக்கில்லாத வகுப்பினரென்றும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அனாவசியமான பிரிவினை செய்து காரியத்தைக் கெடுத்து விட்டனர். சுயமாய் இந்தியருக்குள்ள போர்புரியுந் தன்மையை வளர்க்க அன்னார் கவலை கொள்ளவில்லை. ராணுவ விஷயங்களில் இந்தியாவின் பழைய பெருமையும் திரவிய ஆதாய மூலமும் அதன் பலனாகப் பெரிதும் பாதிக்கப்பட்டு, வங்காளிகள் மதராஸ் வாசிகள் மராட்டியர் ஆகியவர்களின் தேக பலம் காலடைவில் குன்றிப் போய்விட்டது. சைனியத்துக்கு ஆள்சேர்க்க வட மேற்குஇந்தியா தான் ஏற்றதென்று சொல்லி மற்றவர்களைப் புறக்கணித்து விட்டார்கள். பஞ்சாப் மாகாணத்தின் ராணுவ மனித பலத்தைக் குறித்து அம்மாகாணத் தலைவராகிய ஸர் மைக்கேல் ஓட்வியர் பிரமாதமாய் சிலாகித்துப் பேசியதற்கும் இம்முறையே முக்கிய காரணமென்று சொல்லலாம். ஆயினும் சமீப காலந் தொட்டு வங்காளிகளுக்கு மட்டும் போர்புரியும் உணர்ச்சி மறுபடியும் பிறந்திருக்கிறதெனலாம். லார்டுகர்ஸனுடைய அதிக்கிரமமான நடத்தையும் வங்காளப் பிரிவினையுமே இதற்கு மூலகாரணமாகும். இதை யொட்டி மிஸ்டர் கோகலே ஒரு சமயம் பேசியபோது "கட்டுக்கடங்காத அதிகாரி வர்க்கத்தினரின் சகிக்கக்கூடாத கொடுமையை வங்காளிகள் தைரியமாய் எதிர்த்து நின்றதைக் கண்டு இந்தியர்களெல்லோரும் ஆச்சரியத்தையும் ஆறுதலையும் அடைந்தார்கள். என்று குறிப்பிட்டதை இங் கெடுத்துக் காட்டல் பொருந்தும். ஆனால்

இங்கு இந்த உத்யோக உணர்ச்சி காலநிலைமையின் பலனாக விபரீதமாய் விருத்தி பெறத் தொடங்கிற்று லார்டு கர்ஸனுடைய நடத்தையினால் வங்காள மெங்கும் கலகாஸ்பதக்குறிகள் காணத்தலைப்பட்டன. தலைவர்களும் சிறுவர்களும் சேர்ந்து 'சுதேசி' சபதம் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் ஒவ்வோர் சமயத்தில் தலைவர்களை மீறிக் கொலைகளும் கொள்ளைகளும் சதிச் செயல்களும் நடந்தன. வங்காளக் கலகங்களுக்குப் பின் வந்த லார்டு ஹார்டிஞ்சும் லார்டு கார்மைக்கேலும் மிகுதியும் சங்கடப்பட வேண்டி யிருந்தது. இது ஒரு பக்கம் நிற்க, வங்காளிகளின் பொறுமைக்கு எவ்வளவோ திருஷ்டாந்தங்கள் சொல்லலாம். பஞ்சமும் வெள்ளமும் வங்காளத்தில் தோன்றியபோது வங்காளிச் சிறுவர்கள் அபார உதவி செய்தனர். இம்மகா யுத்தத்திலும் அவர்களுடைய சௌரியம் சிலாகிக்கத் தக்கது. கட்டுக்கு மீறி விட்டபோதிலும் ஈசன் அருளால் நல்ல ஆத்மாக்களை துஷ்ட சேஷ்டைகளிலிருந்து காப்பாற்ற இவை திருஷ்டாந்தமல்லவா.

இங்கிலாந்தில் நடந்த இதே மாதிரியான ஒரு சம்பவத்தையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம். யுத்தம் ஆரம்பித்தபோது சிறையிலடைபட்டிருந்த ஒருவர் போர்புரிய அநுமதி கொடுக்கப் பட்டபோது போர்முனைக்குச் சென்று 'விக்டோரியா கிராஸ்' என்றபதக்கம் அணியப்பெற்றார். இந்தியாவிலோ பெரும்பாலும் ராஜீயக் கைதிகள் சிறுவர்கள். அவர்களை இந்த யுத்த காலத்தில் விடுதலை செய்து ஏகாதிபத்தியத்தார் குழைக்க விட்டுப் பார்க்க வேண்டும். வேண்டுமானால் அவர்களைத் தனியே ஒரு பட்டாளமாகச் சேர்த்து தகுந்த பந்தோபஸ்துடனாவது அவர்கள் இழந்து விட்ட பெயரை மீட்கச் சமயம் கொடுப்பதே ராஜதந்திரமாகும்.

இந்தியா கவர்ன்மெண்டின் யுத்தச் செலவுகள் இந்தியருடைய அநுமதியைக் கொண்டே செய்யப்பட்டாலாவது ஓர் ஆறுதலாயிருந்திருக்கும், இந்தியருக்கும் ராணுவப் பயிற்சி கொடுத்திருந்தால் வெகு விசேஷமாயிருந்திருக்கும். ஆனால் பழைய புராணத்தைப் பார்த்தாலோ ஏகாதிபத்தியத்தின் மூட்டையைச் சுமக்க மட்டும் இந்தியர் பங்கு பெற்றாரேயன்றி தேச நிர்வாகத்திலாவது பிரிட்டிஷ் பிரஜைகளின் உரிமைகளிலாவது பங்கு பெற்றதாகத் தெரியவில்லை. இந்தியாவானது பிரிட்டிஷ் பட்டாளங்களுக்கே பயிற்சி ஸ்தலமாயிருந்தது. செலவெல்லாம் இந்தியருக்கு, பலன் மட்டும் கிரேட் பிரிட்டனுக்கே. இந்தியாவில் வரி செலுத்துவோர்களின் கஷ்டத்தைக் கவனித்தாகத்தோன்றவில்லை யென்று ஸிம்லா ராணுவக் கமிஷன் கூட அபிப்பிராயப்பட்டது ஞாபக மிருக்கலாம். அடிக்கடி பிரிட்டிஷ் பட்டாளங்கள் இந்தியாவுக்கு வருவதும்போவதுமாயிருந்தால் எவ்வளவுசெலவுபிடிக்குமென்பதைச் சுலபமாய் யூகிக்கலாம். அவ்வாறு பயிற்சி பெறும் படைகள் 5 வருஷ காலமே இந்தியாவில் தாமதிப்பதால், அதன் முழுப்பலனையும் இங்கிலாந்தே கடைசியில் அனுபவிக்கிறது. சுமார் 4 லட்சம் பேர் இந்தியச் செலவில் இவ்விதம் பயிற்சிபெற்று

பிரிட்டிஷ் மூலபலப் படையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். 1863 ம் வருஷம் இந்தியச் சைன்யத்தில் லட்சத்து 40 ஆயிரம் பேரே யிருந்தார்கள். அதில் 65 ஆயிரம் பேர் பிரிட்டிஷார்கள் இருந்தனர். காலக்கிரமத்தில் அது பெருக்கப்பட்டு 1902 ல் லார்டு கிச்சனருடைய சேனாதிபத்தியத்தின் கீழ் மீண்டும் திருத்தி யமைக்கப்பட்டது. இனி, சைன்யத்துக்கு வேண்டியிருந்த சாமான்கள் இந்தியாவிலேயே சுலபமாய்க் கிடைக்கும்படி செய்திருக்கலாம்; ஆனால் அப்படிச் செய்யப்படவில்லை. இங்கிலாந்திலிருந்தே சகல சாமான்களும் தருவிக்கப்பட்டு வந்தன. எனவே அனாவசியமான செலவுகள் அதிகரித்தன. இந்தியாவில் எத்தனையோ தொழிற் சாலைகள் இருக்கின்றன. யுத்தத்துக்கு முந்தியே அவைகளில் சிலவற்றைத் தளவாடச் சாலைகளாகச் செய்திருத்தல் கூடாதா? இப்போது தான் யுத்த அவசரத்தின் நிர்ப்பந்தத்தினால் அவ்வாறு செய்ய வாரம்பித்தார்கள். இந்தியாவுக்குச் சுய ஆட்சி கிடைத்திருந்தால் அதன் சுரங்கப் பொருள்களை ஜெர்மானியர் கொள்ளை கொண்டு போகும்படி விட்டிருக்குமா? இந்தியர் கீழ்ப்பட்டுக் கிடக்காமல் சுயேச்சை பெற்றிருந்தால் ஏகாதிபத்தியத்தின் க்ஷேமத்துக்கும் இந்தியாவின் சுபிக்ஷத்துக்கும் மூலாதாரமாயிருந்திருக்குமல்லவா யுத்தத்துக்குப் பிந்தியாவது இந்தியத் தொழிற் சாலைகளை கவர்ன்மெண்டார் ஆதரித்து வருவார்கள் என்று நம்புவோம்? இவ்விதம் பலகாரணங்களின் பலனாக ராணுவச் செலவு வருஷாவருஷம் அதிகமாகிக் கொண்டுவந்தது. மகா யுத்தத்துக்கு முந்தின வருஷத்தில் கணக்கிட்டுப் பார்த்ததில் 2 கோடியே 10 லட்சம் பவுன் இந்தியாவின் ராணுவச் செலவு. 2 கோடியே 8 0லட்சம் பவுன் இங்கிலாந்திலேயே ராணுவச் செலவான தாகத் தெரிய வருகிறது. பணக்கார குடியேற்ற நாடுகளாகிய கானடாவும் ஆஸ்திரேலியாவும் சேர்ந்து 27½ லட்சம் பவுனே செலவு செய்திருக்கின்றன!! பிரிட்டிஷ் ராச்சியத்திற்கு 5 கோடியே 10 லட்சம் பவுன் கடற்படைச் செலவு ஆகிவருவதை நான் மறந்து விடவில்லை. அதனில் 5 லட்சமே இந்தியாவின் பங்கு. ஆனால் அதைப் பற்றி இங்கே நான் விஸ்தரிக்க வேண்டிய தில்லை. ராணுவச் செலவை நான் குறிப்பிடுகிறேன்.

ராணுவச் செலவுகள் வருஷா வருஷம் உயர்ந்துகொண்டே போவதைப் பற்றி 1885-ம் வருஷ முதல் காங்கிரஸ் மகாசபை ஆட்சேபம் செய்தும் பிரயோஜன முண்டாகவில்லை. 1857-ம் வருஷத்தில் ஒருகோடியே 14-லட்சம் பவுனாகவிருந்த ராணுவச் செலவு 1884-ம் வருஷத்தில் ஒருகோடியே 69-லட்சம் பவுனாக உயர்ந்துவிட்டதென்பதை மிஸ்டர் ரங்கய்யா நாயுடு முதல் காங்கிரஸிலேயே எடுத்துக் காட்டினார். ராணுவச் செலவு உயர்ந்துவிட்டதற்குக் காரணம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சேனையையும் இந்தியா கவர்ன்மெண்டின் சேனையையும் சம்பந்தப் படுத்தி விட்டதே என்று மிஸ்டர் டின்ஷா வாச்சா அபிப்பிராயப்பட்டார். 1858-ம் வருஷத்தில் ஈஸ்டு இந்திய

கம்பெனியாருக்குட்பட்டு தேசம் இருந்த பொழுது சேனையில் இரண்டு லட்சத்து 54 ஆயிரம் ஜனங்கள் இருந்தார்கள். அப்பொழுது ஒருகோடியே 15-லட்சம் பவுன் செலவாயிற்று. ஆனால் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குட்பட்ட பிறகு 1884-ம் வருஷத்தில் ஒரு லட்சத்து 81 ஆயிரம் ஜனங்களே சேனையில் இருந்தபோதிலும் ஒருகோடியே 70 லட்சம் பவுன் செலவாய் விட்டதென்று மிஸ்டர் வாச்சா எடுத்துக் காட்டினார். அதிகச் செலவுக்குக் காரணம் ஐரோப்பியப் பட்டாளங்களும், பென்ஷன்களும், ரஜாப் படிகளும், அவை இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் போகும் செலவுகளுமே யாகும். இச் செலவுகளைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டு ஆட்சேபம் செய்தும், பயன்படவில்லை. இராணுவத்தின் பொருட்டு செய்யப்படும் செலவு வரவர விருத்தி யடைந்து கொண்டே வந்திருக்கும் விதத்தை மிஸ்டர் வாச்சா தெளிவுற எடுத்துக் காட்டி யிருக்கின்றார். அவை யனைத்தையும் நான் மீண்டும் எடுத்துக் கூற வேண்டியதில்லை.

இந்தியாவின் ஆட்சியை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார், ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரிட மிருந்து எடுத்து நேராக ஆட்சி செய்யப் புறப்பட்டவுடன் இந்தியாவின் ஆட்சிக்கு பிரிட்டிஷ் ஜனங்கள் நேரான உத்தரவாதிகளாய் விட்டார்களாயினும், பிரிட்டிஷ் ஜனங்கள் தங்கள்மீது சுமத்தப்பட்ட பொறுப்பை சரிவர வகித்து வரவில்லை யென்றும், கம்பெனியாரின் ஆட்சியை விட நேரான ஆட்சி இந்தியாவுக்கு அதிகப்பிரதிகூலமா யிருக்கின்றதென்றும் மிஸ்டர் பாஸெட் என்ற பிரிட்டிஷ் ராஜதந்திரி சொன்னார். கம்பெனியாரின் ஆட்சியிலிருக்கும்போது இந்தியாவின் வரவுசெலவு தணிக்கை செய்யப்பட்டு வந்ததுபோல பிறகு தணிக்கை செய்யப்பட்டு வரவில்லை யென்பதையும் அவர் எடுத்துக் காட்டினார்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவில் நேரில் ஆட்சி செய்யப் புறப்பட்டவுடன் மிஸ்டர் டிஸ்ரேலி காமன்ஸ் சபையில் பேசியபோது, இந்தியா கடவுளால் பிரிடிஷாரிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டு வந்ததெனக் கருதி நடக்கும்படி சபையோரைக் கேட்டுக்கொண்டார். இந்தப் பொறுப்பு எப்படி வகிக்கப்பட்டது? நான்காவது காங்கிரஸ் மஹாசபைக் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த மிஸ்டர் ஜார்ஜ் யூல் கடவுளால் அடைக்கலமாக பிரிட்டிஷ் ஜனங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தியாவை காமன்ஸ் சபை மெம்பர்கள் கடவுளிடமே திரும்ப ஒப்படைத்து கையைக்கழுவி விட்டார்கள் என்று சொன்னார். சுயமாய் பாடுபடுகிறவர்களுக்குத் தான் கடவுள் உதவி புரிவாரென்பதை நாம் எல்லோரும் மனதில் வைக்கவேண்டிய காலம் வந்து விட்டது.

சைனியத்தின் பொருட்டு செய்யப்படும் செலவு வருஷா வருஷம் அதிகரித்துக் கொண்டே வருவதை காங்கிரஸ் ஆக்ஷேபித்துக் கொண்டே ஒருபுறம் வர இப்படி அதிகச் செலவு செய்வது போதாதென்று, 1902ம் வருஷத்தில்

இந்தியா கவர்ன்மெண்டார் இன்னொரு ஏற்பாடு செய்தார்கள். இந்தியாவின் வருமானத்திலிருந்து புதிதாய் வருஷந்தோறும் 786,000 பவுனை எடுத்து, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சம்பளத்தை அதிகப்படுத்திப் பங்கிட்டுக் கொடுக்கத் தீர்மானித்தார்கள். மிதத்துக்கு மிஞ்சி துருப்புகளை இந்தியாவில் வைத்துக் கொண்டு கவர்ன்மெண்ட் சம்ரக்ஷணை செய்து வருவதையும், அதனால் இந்திய ஜனங்கள் சுமக்கும் சுமையையும் காங்கிரஸ் எடுத்துக் காட்டி பிரிட்டிஷ் துருப்புகளின் சம்பளத்தை மறுபடியும் அதிகப்படுத்துவதைக் குறித்து பலமாய்க் கண்டனஞ் செய்தது. அதற்கு அடுத்த வருஷம் கூடிய காங்கிரஸ், இந்தியா கவர்ன்மெண்ட் மிதமிஞ்சி இராணுவத்தில் செலவு செய்வதையும், அப்படிச் செலவு செய்வது, இந்தியாவின் உள்நாட்டு அமைதியின் பொருட்டாவது, இந்தியாவின் தற்காப்பின் பொருட்டாவது இல்லாமலிருப்பதையும் ஏகாதிபத்தியத்தின் நன்மைக்காக இந்தியா மாத்திரம் பெரிய சுமையைச் சுமந்து தீர்ப்பதையும் எடுத்துக் காட்டிற்று. ஏகாதிபத்யத்தின் இராணுவச் செலவுக்கு குடியேற்ற நாடுகள் ஒன்றும் கொடுக்காமலிருக்க இந்தியாவோ பிரிட்டிஷ் சைனியத்தின் மூன்றிலொரு பாகத்தைப் போஷணை செய்து கொண்டு வந்தது. இப்படி பிரிட்டிஷ் துருப்புகளைபோஷிப்பதோடு இந்தியச் சைன்யத்தையும் வைத்துக் காப்பாற்றி வருகின்றது. எனவே இந்தியா இந்த யுத்தத்தில் செய்திருக்கும் உதவியைக் கணக்கிடும்போது வெகு நாட்களாகவே இத்தேசம் ஏகாதிபத்யத்திற்கு இராணுவத்தில் செய்து வந்திருக்கும் உதவியினை மறந்து விடக் கூடாது.

இராணுவத்தின் சம்பந்தமாய் இந்தியா செய்து வரும் செலவு இந்தியா சுமக்க முடியாத பாரமாய் ஏற்பட்டு விட்டதென்பதை காங்கிரஸ் மஹா சபை 1904-1905-ம் வருஷத்திலேயே எடுத்துக் காட்டிற்று. அதற்குப் பிறகு லார்டு கிச்சனர் இராணுவத்தில் சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்து, 100 லட்சம் பவுன் அதிகச் செலவு செய்யத் திட்டம் போட்டார். இப்படி இன்னமும் அதிகச் செலவு செய்ய திட்டம் போடப்பட்டிருக்கும் தொகையை கல்வி யபிவிருத்தியில் செலவு செய்யும்படி காங்கிரஸ் பிரார்த்தித்துக்கொண்டது செலவைக் குறைத்து குடி ஜனங்களின் கஷ்டத்தை கவர்ன்மெண்ட் குறைக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் பிரார்த்தனை செய்து கொண்டது. 1859-ம் வருஷம் முதற்கொண்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் யுத்த ஆபீஸ் இந்தியாவின் மீது சுமத்தி வந்திருக்கும் இராணுவச் சுமை நியாயமல்லாததென்று 1908-ம் வருஷத்தில் பலமாய்க் கண்டிக்கப்பட்டது. இந்தியாவின் வருமானத்தில் மூன்றிலொருபாகம் இராணுவத்தில் செலவிடப்பட்டு வரும் விஷயமும் இதனால், இந்தியாவின் கல்வி யபிவிருத்தியும், சுகாதார அபிவிருத்தியும் குன்றிப்போகின்ற விஷயமும் எடுத்துக் காட்டப்பட்டன.

லார்டு கிச்சனர் செய்து வைத்துப்போன இராணுவ ஏற்பாட்டின்படி இந்தியாவிலுள்ள சைன்ய மனைத்தும் எந்தச்சமயத்திலும் யுத்த சன்னத்தமாய்

நினைத்த மாத்திரத்தில் போர்முனைக்கு கிளம்பக்கூடிய நிலைமையில் வைக்கப்பட்டது. இப்படி சர்வசித்தமாய் 1915-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று இருந்த சைன்யத்தின் தொகை 247,000. இந்தத் துருப்புகளில் 75000 பெயர் ஐரோப்பியர்கள். இவ்வளவு பெரிய சைன்யம் சதா காலம் யுத்த சன்னதமாயிருந்து வரும்படி கடந்த பல வருஷங்களாக இந்தியா செலவு செய்துகொண்டு வந்ததால், மிகுந்த நெருக்கடியான சமயத்தில் இங்கிலாந்தின் உதவிக்கு இந்தியாதுருப்புகளை யனுப்ப இடமேற்பட்டது. 1914-15-ல் இந்தியா இராணுவத்தில் 200 லக்ஷம் பவுன் செலவிட்டது. 1915-16-ல் 210-லக்ஷம் பவுனும், 1916-17-ல் 2[illegible]0 லக்ஷம் பவுனும் செலவு செய்து வந்திருக்கின்றது.

யுத்தக் கடனுக்காக 320 லட்சம் பவுன் இந்தியாவில் கிடைத்திருக்கிறது; இந்தப் பணமெல்லாம் லண்டனில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு இந்தியாவின் 10 கோடி பவுன் நன்கொடையின் பாகமாக போய்ச் சேருகின்றன. இந்தியாவிலும் மெஸபொடோமியாவிலும் யுத்தம் சம்பந்தமாக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டு செய்ய வேண்டிய செலவுகளுக்காக அப்பணம் உபயோகப்படுத்தப்படுகிறது. இனி, ராணுவச் செலவுக்காக வருஷாரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தைவிட அதிகச் செலவு நேருமென்று கவர்னர் ஜெனரல் சொல்லியிருக்கிறார். "இந்தியாவிலும், மெஸபோடோமியாவிலும் செலவு செய்ய வேண்டியிருப்பதல்லாமல் கோதுமை, சணல், தோல் முதலியவைகளை வாங்கி அனுப்பவும், பல சாமான்களைச் செய்தனுப்பவும் இந்தியா கவர்ன்மெண்டு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பண்டங்களை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும், நேச ராஜ்யங்களுக்கும் வாங்கி அனுப்ப ஒப்புக் கொண்டிருக்கிறது. கிழக்காபிரிக்காவுக்கும் பாரஸீக தேசத்துக்கும் பெருவாரியாகப் பணம் அனுப்ப வேண்டியிருக்கிறது, ஒவ்வொரு சமயங்களில் மோரிசிக்கும், ஸிலோனுக்கும், ஈஜிப்டுக்கும் ரொக்கமனுப்ப வேண்டியிருக்கிறது. இவை யெல்லாம் திரும்பிக் கொடுக்கப்படுகின்றன வாயினும், திரும்பக் கிடைப்பது இந்தியாவில் இல்லை யாகையால், நமக்கு அவை ஒரு வரி போல் இருந்து வருகின்றன." என்று ராஜப் பிரதிநிதி சொல்லியிருக்கிறார்

புதியதாக விதிக்கப்பட்ட வரிகள் இந்தப் பெரிய பொத்தலை அடைக்கப் போதுமானவையல்ல. இந்தப் பளுவை யார் பொறுக்கும்படி ஏற்படும்? ஆங்கில உத்தியோகஸ்தர்களுடனும் உத்தியோகஸ்தரல்லாதவர்களுடனும் சேர்ந்து கொண்டு தங்களுடைய தேசத்தாருக்கு விரோதமாக இருந்து வரும் ஜெமீன்தார்கள் கடைசியில் ஏமாந்து போய், தேசச் செலவை நிர்ணயிக்கும் அதிகாரம் தங்களையும் போதுமான வரையில் கொண்ட சபைகளுக்கே இருக்கவேண்டுமென்று பிறகொரு காலத்தில் நினைக்கும்படி நேர்ந்தாலும் [illegible]ர்லாம்.

யுத்தத்தின் பொருட்டு இந்தியா செய்து வந்திருக்கிற உபகாரங்களை, சென்ற ஜூலை மாதத்தில் லார்டு ஹார்டிஞ்ச வெகு நன்றாக எடுத்துச்சொன்னார். யுத்தத்துக்குமுன் வருஷமொன்றுக்கு 192 லட்சம் பவுன் தான் உயர்ந்த திட்டமாக இந்தியா ராணுவத்திற்காகச் செலவு செய்ய வேண்டுமென்று "நிக்கொல்ஸன் கமிட்டி" தீர்மானித்திருந்த போதிலும், அந்த திட்டத்திற்கு மேலாகவே செலவு செய்யப்பட்டு வந்திருக்கிறதென்றும், தாம் ராஜப்பிரதிநிதியாயிருந்த கடைசி வருஷத்தில் 220 லட்சம் பவுன் திட்டம் ஏற்படுத்தப்பட்டதென்றும் அவர் சொன்னார். வரும்படியோ 480 லட்சம் பவுன்முதல் 580 லட்சம் பவுன் வரையிலேயே இருந்து வந்திருக்கிறது. ஒரே ஒரு வருஷத்தில் 600 லட்சம் வசூலாயிற்று. இந்தியாவின் மொத்த வரும்படியில் எவ்வளவு ராணுவத்திற்காகச் செலவு செய்யப்படுகிறதென்பதைப் பார்த்தால், இந்தியா யுத்தத்திற்காகச் செய்திருக்கும் உதவி இவ்வளவென்பது விளங்கும்.

1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் யுத்தம் ஆரம்பமாயிற்று. அதே மாதத்திலும் அடுத்த ஸெப்டெம்பர் மாதத்திலுமாக இரண்டு காலாட்சேனையும் ஒரு குதிரைப்படைச் சேனையும் இந்தியாவிலிருந்து பிரான்ஸுக்குப் போயின. அடுத்த நவம்பர் மாதத்தில் இன்னொரு சேனையும் போய்ச் சேர்ந்துகொண்டது. முதலில் போய்ச் சேர்ந்த சேனையானது வேறுவிதமாக அடைக்கக் கூடாத ஒரு இடைவெளியை அடைக்க உபயோகப்பட்டதென்று லார்டு ஹார்டிஞ்ச சொன்னார். அந்த இரண்டு காலாட் சேனைகளிலுமிருந்தவர்களில் உயிர் தப்பினவர்கள் சிலரே என்றும் அவர் மனமுவந்து சொன்னார். எந்த சுதந்திரத்துக்காக அவர்கள் பிரான்ஸில் பிராணனை விட்டார்களோ அந்த சுதந்திரத்தை அவர்களுடைய சந்ததியார்கள் இந்தியாவில் பெற்று அனுபவிப்பார்களோ? இந்தியாவின் எல்லைப்புறத்தைக் காவல் செய்ய வேறு மூன்று சேனைகள் உடனே அனுப்பப்பட்டன. கிழக்கு ஆபிரிக்காவுக்கு ஒரு சேனை அனுப்பப்பட்டது. இன்னும் இரண்டு சேனைகளும் ஒரு குதிரைப்படையும் ஈஜிப்டுக்கு அனுப்பப்பட்டன. ஒரு காலாட்பட்டாளம் மோரிசுக்கும் போயிற்று. கவிலூன் காட்டிற்கு ஒன்று போயிற்று. பாரஸீக குடாக்கரைக்கு இரண்டு போயின. ஜெப்பானியர் ஸிங்டா நகரைப் பிடித்துக் கொள்கிறதற்காக அவர்களுக்கு உதவி செய்ய வேறு இந்தியத் துருப்புகள் போயின. இவ்வாறு 2 லட்சத்து 10 ஆயிரம் துருப்புகள் இந்தியாவிலிருந்து மொத்தத்தில் வெளிப் போயின. இத்துருப்புகள் எல்லாம் பூரா ஆயுதங்களுடனும் இதர தளவாடங்களுடனும் போனதல்லாமல், 60 ஆயிரம் துப்பாக்கிகளும் 550 பீரங்கிகளும் 7 கோடி துப்பாக்கி ரவைகளும் அனுப்பப்பட்டன, இவைகள் அன்னியில், பூட்ஸுகளும், கூடாரங்களும் உடுப்புகளுமாக அபரிமிதமான சாமான்கள் இங்கிலாந்துக்கு வேறு அனுப்பப்பட்டதாக லார்டு ஹார்டிஞ்ச சொல்லியிருக்கிறார்.

சேதாரத்துக்கு ஈடு செய்யப்பட்டதையும் சேர்த்துப் பார்த்தால் 1916-ம் வருஷ முடிவு வரையில் 10லட்சம் துருப்புகளை இந்தியா போர்க்களங்களுக்கு அனுப்பியிருக்கிறது. இவை யன்னியில் இந்தியாவில் பயிற்சி செய்விக்கப்பட்டு இந்தியாவின் செலவில் ஆயுதங்களு முடைகளும் படைத்த 30 ஆயிரம் ப்ரிட்டிஷ் துருப்புகளும் அனுப்பப்பட்டிருக்கின்றனர். இவைகளுக்குப் பதிலாக "பயிற்சி முடிந்தாலொழிய!" போர்ச் சேவகத்துக்கு லாயக்கில்லாத 34 பட்டாளங்கள் 28 பீரங்கிப்படைகளும் பயிற்சி பெற இங்கிலாந்திலிருந்து இங்கு வந்தன.

“யுத்தம் ஆரம்பமானது முதல் 1915 ம் வருஷம் முடிய இத்தேசத்தின் எல்லைக் காவலே கவலைக்கிடமான விஷயமாயிருந்தது. “ஆப்கானிஸ் தானத்தின் அமீருடையமனப் போக்கு இன்னது தான் என்று விளங்கவில்லை. அவரைப்பற்றினவரையில் சந்தேகமில்லை யாயினும், மதஆவேசம் கிளம்பினால் அதற்கு உட்பட்டுப் போவாரோ என்று பயமாயிருந்தது. யுத்தத்துக்கு முந்தின 3 வருஷ காலத்தில் எல்லைப் புறத்தில் சண்டையே நேரவில்லை யாயினும், 1914 நவம்பரிலிருந்து அடுத்த ஸெப்டம்பருக்குள் 6 சண்டைகள் நடந்தன. அவைகளிலெல்லாம் நாம் வெற்றி யடைந்தோம்” என்றுலார்டு ஹார்டிஞ்சு சொல்லியிருக்கிறார்.

ஜெர்மானியரின் சதி யொன்றையும் ராணுவ அதிகாரிகள் அடக்க வேண்டியவர்களாயிருந்தனர். கானடாவிலிருந்தும் யுனைடெட் ஸ்டேட்விலிருந்தும் 7000 ஜனங்கள் 1915-ம் வருஷத்தில் இங்கு வந்து சேர்ந்தனர். பஞ்சாபிலுள்ள சில முக்கியமான ராணுவ ஸ்தலங்களைப் பிடித்துக்கொண்டுவிட அவர்கள் யோசனை செய்திருந்தனர். அதே வருஷம் டிஸம்பர் மாதத்தில் வங்காளத்திலோர் ஜெர்மன் சதி கிளம்பிற்று. அதை அடக்கவும் ராணுவ உஷார் முறைகள் நடத்தப்பட்டன.

இந்தியாவின் ராணுவ உதவியைப்பற்றி லார்டு செம்ஸ்போர்டு சொல்லும்பொழுது, “இந்தியாவிலுள்ள சேனையானது ஏகாதிபத்தியத்தின் பெரியதோர் ஐவேஜியாக விளங்கிவிட்டது. இந்தியா என்ன உதவி செய்திருக்கிறதென்பதைக் கணக்கிடும்பொழுது, இந்தியாவின் சேனை அவசரமாகக் கூட்டப்பட்டதல்லவென்பதையும், முழுப்பயிற்சி பெற்று முழுத் தளவாடங்களுடன் கூடியிருந்ததென்பதையும், அதன்பொருட்டு ஏற்கெனவே இந்தியாவானது வருஷா வருஷம் பெருந்தொகை செலவிட்டு வந்திருக்கிறதென்பதையும் நினைப்பில் வைத்துக்கொள்ளவேண்டு” மென்று சொன்னார். ராணுவத்திற்கு “ஆள் சேர்க்கும் சபை” யொன்று இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது; அது செய்யும் வேலையின் பலனாக சேதாரம் ஈடு செய்யப்பட்டு வருகிறது. கூலியாள் வேலை செய்ய மெஸபொடேமியாவுக்கு 20-படைகளும், பிரான்ஸுக்கு 25-படைகளும் போயிருக்கின்றன. கொத்தன், தச்சன், கொல்லன் முதலிய தொழிலாளிகள் மெஸபொடோமியாவில் 60-ஆயிரம் பேர்

கள் வேலை செய்து வருகிறார்கள். மட்ட வேலை செய்ய 20-ஆயிரம் பெயர்கள் போயிருக்கிறார்கள்.

இவ்விஷயங்களை யெல்லாம் கவனித்தால் இந்தியா செய்திருக்கிற உதவி இன்னதென்று விளக்கும். இங்கிலாந்துக்கு இந்தியா வேண்டும். இந்தியாவுக்கு இங்கிலாந்து வேண்டும். "யுத்த காலத்தில் சன்னத்தமா யிருக்கவேண்டுமானால், சமாதான காலத்தில் சுவாதீனத்துடன் இருக்கவேண்டும்" என்று மிஸ்டர் மாண்டேகு சொல்லியிருக்கிறார். இங்கு கூடியிருக்கிற ஆயிரக்கணக்கான நாம் பிரிட்டிஷ் சிம்மாசனாதிபதியிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கிறோமென்பதை உங்களுக்காகத் தெரிவிக்கிறேன். சுவாதீனம் பெற்று, நன்றி யறிவினால் இனி நாம் பக்தி செலுத்துவோமாக!

புது லட்சியத்துக்குக் காரணம்.

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தம் உண்டான பலனாக இந்தியரின் லட்சியங்கள் மேனாட்டாருக்கும் மேனாட்டாரின் லட்சியங்கள் இந்தியருக்கும் தெரிய ஆரம்பித்தது. ஆங்கிலக் கல்வி இந்தியாவில் பரவ ஆரம்பித்தது இந்தியர், ஐரோப்பா, அமெரிக்கா, ஜெப்பானுக்குப்போய்ப் பார்த்து வருகிறார்கள். இக்காரணங்களால் உண்டாயிருக்கும் மாறுதலன்றியில் புது லட்சியத்துக்கு வேறு காரணங்களுமுண்டு. அவையாவன:—

(1) ஆசியாகண்டத்தின் விழிப்பு.

(2) அன்னிய ராட்சியைப்பற்றியும் ஏகாதிபத்திய அமைப்பைப் பற்றியும் வெளித் தேசங்களில் காணும் பிரஸ்தாபம்.

(3) வெள்ளை ஜாதியார் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் போய்விட்டது.

(4) வியாபாரிகளின் விழிப்பு.

(5) ஸ்திரீகள் விழித்துக்கொண்டு தங்களுடைய பூர்வீக பதவியைக் கேட்பது.

(6) பாமர ஜாதிகள் விழிப்பு.

ஆசியாவின் விழிப்பு.

லார்டு மின்டோவிடத்தில் நான் ஒரு சமயம் பேசிக்கொண்டிருந்த பொழுது, இந்தியாவின் அமைதியின்மைக்குக்காரணம்ஆங்கிலக்கல்வியும், ஜனநாயகத்தைப்பற்றி ஆங்கிலேயர்களுக்குள்ள அபிப்பிராயங்கள் இந்தியாவில் பரவிவருவதும், ஜெப்பான் ருஷ்யாவைத்தோற்கடித்து விட்டதும், வெளித் தேசங்களின் நிலைமை மாறிவருவதுமென்று அவர் சொன்னார். ஆகையால் மேலுலகத்தில் தோன்றியுள்ள பெரிய உணர்ச்சியின் பலனாக இந்தியருக்குப் புது ஆசைகள் உண்டாயிருக்கின்றனவென்றும், தேச நிர்வாகத்தில் அவர்களுக்கு இப்பொழுதிருப்பதைவிட அதிகப் பங்குகொடுத்து, அவர்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்றும் பிறகு அவர் பகிரங்கமாகச் சொல்லியதைக்கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. உலகமானது ஜனநாயகத்தைஅடைய நகர்ந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளாய் ஆதியில் இருந்த யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசமானது தாய் நாட்டிலிருந்து பிரித்துக்கொண்டபொழுது, இந்தப் பிரயாணம் ஆரம்பமாயிற்று. பிறகு பிரஞ்சு ஜனங்கள் அரசாட்சியை நீக்கிச்செய்த கலகத்தால் வேகமடைந்தது கிழக்குலகிலும் இந்த உணர்ச்சி பரவியதின் பிரயோஜனங்களாக ஜெப்பானில் பெரிய மாறுதல்கள் உண்டாய், ஜெப்பான் ருஷியாவைத் தோற்கடித்தது. சீனமஞ்சுவம்ச அரசாட்சியைநீக்கி குடியரசை ஏற்படுத்திக்கொண்

டாபாரவசீத்தில்ப்ரீட்டிஷாரும்ருஷ்யரும்'இதுஎனது செல்வாக்குக்குட்பட்ட
பூமி, இது எனது செல்வாக்குக்குட்பட்ட பூமி" என்று பங்குபிரித்துக் கொண்
டிருப்பதால் இடையூறு நேர்ந்துளதாயினும், அத்தேசத்திலும் பெரிய மாறுதல்
கள் உண்டாயிருக்கின்றன. ருஷ்யாவில் இப்பொழுது கலகமுண்டாய் விட்ட
படியால், ஆசியா கண்டத்தில் ருஷ்யக் குடியரசொன்று ஏற்படலாம் போல
வே இருக்கிறது. ஹிமயமலைக்கப்பால் ஆசியா கண்டத்தில் வெகு விஸ்தார
மான பிரதேசங்கள் சுவாதீனம் பெற்ற ஜனங்களுக்குட்பட்டிருக்கின்றன. முற்
காலத்தில் ருஷ்யசக்கிரவர்த்திக்குட்பட்ட பூமியிலுள்ளவர்களை விடவும்சீனராஜ்
யத்திலிருப்பவர்களை விடவும், தங்களது நிலைமை சிலாக்கிய மென்று இந்தியர்
முன் நினைக்கும்படி இருந்தது. இனிஇந்தியாவுக்குசுயஆட்சி கிடைத்தாலொழிய,
அத்தேசங்களின் நிலைமை சிலாக்கிய மென்றுஇந்தியாநினைக்கும்படிஇருக்கும்.

சுய ஆட்சி கிடைத்தால் மாத்திரம் போதாது; கிடைப்பதோடு இந்தியா
போதுமானபல முள்ளதாயிருக்கவேண்டும். ஆசியா கண்டத்திலுள்ள ஜனங்கள்
அபிவிருத்தியடைந்துஅவர்களுக்குள் போட்டி முற்றும்பொழுதுஇந்தியா அவர்
களால்தாக்கப்படக் கூடிய நிலைமை யிலிருக்கும். கேட்டதைக் கொடுக்கும் காம
தேனுபோல்இந்தியா இங்கிலாந்துக்குஇருந்துவருகிற தென்று மிஸ்டர்லெய்ங்
சொல்லியிருக்கிறார். காமதேனுக்காக வஸிஷ்டரும், விசுவாமித்திரரும் முற்
காலத்தில் சண்டை போட்டது போல், இந்தியாவாகிய காமதேனுவுக்காக
வும் பிற்காலத்தில் சண்டையுண்டாகலாம். ஆகையால் தரையிலும் கடலி
லும் தன்னைக் காத்துக் கொள்ளக்கூடிய பலம் இந்தியாவுக்கு இருக்க வேண்
டும்.

கலக்கமற்று இந்தியா விருக்கவேண்டுமானால் அது திருப்தி யடைந்
ததாயிருக்க வேண்டும். ஆஸ்டிரேலியாவின் ஜனத் தொகை சொல்பமே
யாகும். அதற்கு ஒரு ஆபத்து நேர்ந்தால், இந்தியா ஒத்தாசை செய்யும்படி
இருக்க வேண்டும். ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஆசியாவில் காப்பாற்றக்
கூடிய ஆள்பலம் இந்தியாவுக்குத் தான் இருக்கிறது. இந்தியாவிலுள்ள ஆங்கி
லேயர்கள் தங்களுடைய சொத்து சுதந்திரங்களைப் பற்றிப் பெருங்
கூச்சல் போடுகிறார்கள். அவர்களுடைய சொத்து சுதந்தரத்துக்குப் பிற்
காலத்தில் அபாயம் உண்டாகுமானால் அவற்றைக் காப்பாற்ற அவர்
கள் என்ன செய்வார்கள். இந்தியா சுவாதீன முடையதாயும் வல்லமை
யுள்ளதாயு மிருந்தால் தான், அவர்களுடைய சொத்து சுதந்தரங்கள்
சாவதானமா யிருக்கும். ஜெப்பானியரில் ஒரு சாராருக்கு ஜெர்மனி
யிடத்தில் அபிமான மிருக்கிறதாக ஜெப்பான் பத்திரிகைகளால் தெரி
கிறது. இந்த யுத்த முடிவில் ஜெப்பானுடைய சேனாபலம் குறைவற்று
நிற்கும். அதனுடைய வியாபாரம் வலுத்துப் போய் விடும். ஆகையால்
ஜெப்பானை நம்பி அதனுடன் உடன் படிக்கை செய்து கொள்வதைவிட இந்
தியாவை நம்புவது ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நன்மைக்கு ஏற்ற காரியம்.

தங்களுடைய நன்மைகளைக் காப்பாற்றுவதற்காக இந்தியாவின் அரசியலில் ஆங்கிலேயரின் செல்வாக்கு ஆதிக்கம் பெற்றிருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை ஆங்கிலேயர் விட்டு விடவேண்டும். இங்கு 36 கோடி பவுன் தான் அவர்களுடைய பணமிருக்கிறது. வேறு சில தேசங்களில் இன்னும் பெரிய தொகை அவர்கள் போட்டிருக்கிறார்கள். யுனைடெட் ஸ்டேட்ஸ், அர்ஜென்டைன் முதலிய தேசங்களின் அரசியலில் தங்களுக்கு ஆதிக்கம் வேண்டுமென்று அவர்கள் ஏன் கேட்கவில்லை? ஆகையால் உண்மையில் இங்கும் அது அவசியமில்லை.

அன்னியரின் ஆட்சியைப்பற்றியும் ஏகாதிபத்திய அமைப்பைப்பற்றியும் வெளி தேசங்களில் பிரஸ்தாபம்.

எல்லா தேசத்தினருக்கும் சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்றே கிரேட் பிரிட்டன் போர்புரிந்து வருகிறதென முதலில் இந்தியா முழுவதும் நம்பியிருந்தது. சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்காகவே தான் கிரேட் பிரிட்டன் யுத்தம் நடத்தி வருகிறதென்று சென்ற அக்டோபர் மாதத்திலே காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஆஸ்குவித் சொன்னார். தவிர, அல்ஸேஸ், லோரேன் மாகாணங்களைத் திரும்பவும் பெற்று விடவேண்டுமென்று பிரான்ஸ் போர்புரிந்து வருவதில், அதற்கு பக்கபலமாக கிரேட் பிரிட்டன் இருந்து வருகிறதென்றும் அவர் கூறினார். ஏனென்றால், அவ்விரு மாகாணங்களும் அன்னியரின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதானது சகிக்கத்தகாத அகௌரவமாகுமென்று அவர் வற்புறுத்திப் பேசியிருக்கிறார். அம்மாகாணங்களில் அரசாளும் ஜாதியாரும் இரத்த சம்பந்தமுள்ளவர்கள் ஆளப்படும் ஜாதியாரும் பழக்க வழக்கம் மதக்கொள்கை எல்லாம் ஒன்றாயிருப்பவர் ஆயினும், அன்னியருக்கு அம்மாகாணங்கள் கட்டுப்பட்டிருத்தல் சகிக்கத்தகாத அகௌரவமாம் யுத்தம் நடந்து கொண்டே வருகையில் கட்டுக்கடங்காத ஏகதேச ஆட்சியிலுள்ள வெறுப்பும் ஐரோப்பாவைப்பற்றின வரையில் தானென இந்தியர் மெதுவாக உணர்ந்து கொள்ளலாயினர். சுதந்திரம் கிடைக்குமென்ற தாராளமான வாக்குறுதியானது இந்தியாவைத்தவிர இதர இடங்களுக்கெல்லா மாகுமென்பதையும், கண்டுகொள்ளலாயினர். இந்தியாவுக்கில்லாமல், குடியேற்ற நாடுகளுக்கெல்லாம் புதிய அதிகாரங்கள் கொடுக்கப்படுவதையும் பார்த்து வரலாயினர்; ஏகாதிபத்தியத்தின் வருங்கால அமைப்பைப்பற்றிப் பேசுகையில், ராஜதந்திரிகளின் பிரசங்கங்களிலே இந்தியாவின் பிரஸ்தாபமே யில்லாதிருந்தது.

இவ்வாறெல்லாமிருந்து வரவே, சுதந்திர விஷயமாய் இந்தியாவுக்கு விபத்துநேர்ந்து விடும் போலிருந்தது. ஏகாதிபத்தியத்தைத் திருத்தியமைப்பதாகச் செய்யப்பட்டு வந்த யோசனைகளிலே, இந்தியாவின் கதி மோட்சம் யாதோவென இந்தியர் கவலை கொள்ளலானார்கள். எப்படியென்றால், ஏகாதிபத்தியத்திலே குடியேற்ற நாடுகளெல்லாம் பங்காளிகளாகுமென்று சொல்லப்பட்டது. எனவே இந்தியாவானது சார்பு நாடாகவே இருந்துவிடுவதா? இரும்பைப்

பழுக்கக் காய்ந்திருக்கும் பொழுதே வேண்டுமாறு அதை அடித்து அமைத்துக் கொள்வதுபோல, குடியேற்ற நாடுகளும் சமயத்தைக் கைவிடாது தங்களது செல்வாக்கைநிலை நாட்டிக் கொள்ளப் பார்க்க வேண்டுமென்று மிஸ்டர் போனர்லா சொன்னார். பழுக்கக் காய்ந்த இரும்பு குளிர்ந்து போகும் வரையில் இந்தியா காத்திருக்க வேண்டுமோ? பிரான்ஸ், காலிபோலி, ஆசியாத்துருக்கி, சீனா, ஆபிரிக்கா முதலிய இடங்களிலெல்லாம், சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்காக இந்தியத் துருப்புகள் போர் புரிந்து வருவதை இந்தியர் பார்த்து வர அந்த சுதந்திரத்தில் இந்தியாவுக்குப் பங்கு கிடையாதோ? கடைசியில் இந்தியா என்ன செய்தது? சுதந்திரம் எமது பிறப்புரிமையாகும், அதை எமக்குக் கொடுக்கவேண்டும் என்று இந்தியர் வற்புறுத்தலாயினர். ஹோம் ரூல் என்ற வார்த்தையே இந்தியரின் மந்திர வசனமாயிற்று. ஏகாதிபத்தியத்திலே தனக்கு சரிசமமான பதவியும் அந்தஸ்தும்வேண்டுமென இந்தியா கேட்கலாயிற்று.

ஏகாதிபத்தியத்துக்காக வெளியிடங்களில் சண்டைபோட ஏராளமான துருப்புகளை அனுப்பி ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவளித்தும் பலவாறான யுத்த நிதிகளுக்கும் யுத்ததர்மங்களுக்கும் யுத்தக்கடன்களுக்கும் நீர்போல் தனத்தை வழங்கி வந்தது. எங்கு தன் கதி நிர்க்கதியாய் விடுமோ என்ற பீதி இந்தியாவுக்கு தோன்றத் தலைப்பட்டது. தனது நாட்டு நிலைமையை தான் ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியாதுபோயின், யுத்தத்தில் ஏகாதிபத்தியத்துக்கு வெற்றி மாலை கிடைப்பினும், தனக்கு சுதந்திரம் இன்னும் குறைந்துவிடுமே என்ற சந்தேகம் ஜனித்துவிட்டது. இது நிற்க.

ஏகாதிபத்திய விஷயங்கள் ஆலோசனையில் இருந்து வருகையில் தனக்கும் அதில்செல்வாக்கு இருக்கவேண்டுமென இந்தியா கவர்ன்மெண்டார் கிரமமாய் கேட்டனர். அது ஒப்புக்கொள்ளப்படினும் குடியேற்ற நாடுகளெல்லாம் ஜனங்களுக்குப் பொறுப்புவாய்ந்த மந்திரிகளை ஏகாதிபத்திய சபைக்கு அனுப்புகையில், இந்தியா கவர்ன்மெண்டுக்குத்தான் அச்சபையில் செல்வாக்கு ஏற்படுகிறதேயென இந்தியர் ஏமாற்றமடையலாயினர். ஏனென்றால் இந்தியா கவர்ன்மெண்டோ ஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இருக்கவில்லை. ஆதலின், இந்தியா கவர்ன்மெண்டால் அனுப்பப்படுவோர் இந்தியரின் பிரதிநிதிகளாகமாட்டார்கள். ஏகாதிபத்திய சபைக்கு இந்தியா கவர்ன்மெண்டால் அனுப்பப்பட்டவர்களிடம் நாம் பிழை கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் இந்தியரின் பிரதிநிதிகளல்லவென்பதுதான் நமது ஆட்சேபம். இதை ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில், பாபு சுரேந்திரநாத்பானர்ஜி பின்வருமாறு எடுத்துக் கூறினார்

"ஏகாதிபத்திய சபைக்கு குடியேற்ற நாடுகளிலிருந்து வருவோர் உத்தியோகஸ்தர்கள் அல்லவென்பதை நாங்கள் அறிவோம். ஆனால், அக்குடியேற்றநாடுகளிலிருந்து ஏகாதிபத்திய சபைக்குப் போகும் மந்திரிமார்களோ அங்கே ஜனங்களால்தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாதலின், அவர்கள் அங்குள்ள ஜனங்களுக்கு

ஜவாப்தாரியாய் இருக்கிறார்கள். இங்கே எங்கள் விஷயத்தில் எப்படி? எங்களது அதிகாரிகளோ பேருக்கு மட்டும் ஜன சமூகத்தின் ஊழியர்களாக இருக்கிறார்களேயல்லாமல், உண்மையில் ஜன சமூகத்தினரின் எஜமானர்களாய் இருக்கிறார்கள்.”

ஏகாதிபத்திய சபையிலே இந்தியப் பிரதிநிதிகள் ஸ்தானம் பெற்றது வெகு விசேஷமெனப்படுகிறது. அவர்கள் யாருடைய பிரதிநிதிகள்? இந்தியா கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளேயல்லாமல், இந்தியரின் பிரதிநிதியாகமாட்டார்கள். குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகளோ குடியேற்ற நாட்டு ஜனங்களின் பிரதிநிதிகளாய் இருக்கிறார்கள்.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் ரிபோர்ட்டோ இச்சமயம் காலங்கடந்ததாய் ஆய்விட்டது. ஆயினும் அந்த ரிபோர்ட்டினால் ஏமாற்றமும் ஆத்திரமும் உண்டாயிருக்கின்றன. ஏனென்றால், இந்திய நிர்வாகத்திலே பிரிட்டிஷார்தான் பெரும்பாலான உத்தியோகங்களை வகிக்க வேண்டுமென்று பெரும்பாலான கமிஷனர்கள் சொல்லியிருக்கின்றனர். தவிர அவர்களது சிபார்சுப்படி, ஸிவில் ஸர்விஸிலும் போலீஸிலும் 30 வருஷ காலத்திற்குப் பிறகே நூற்றுக்கு 25 பேர் இந்தியர்கள் இருக்கலாம். இந்த சந்தர்ப்பத்திலே கனம் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் நிரத்தனத்துடன் தனி ரிபோர்ட் எழுதியிருப்பதை நான் குறிப்பிடாமலிருப்பதாகாது. ஸிவில் ஸர்விஸுக்கு நியமனங்கள் செய்யும் விஷயமாய் அனுஷ்டிக்கப்படவேண்டிய லட்சியங்களை அவர் நன்கு எடுத்துக்காட்டியிருக்கிறார். கனம் கோபால கிருஷ்ண கோகலே ரிபோர்ட் வெளியாகுமுன் காலகதியடைந்துவிட்டார். கனம் அப்துர் ரஹிம் தனி ரிபோர்ட்டெழுதினார். கனம் சௌபால் பெரும்பாலான மெம்பர்களுடன் சேர்ந்து ரிபோர்ட்டில் கையெழுத்திட்டிருப்பினும், பெரும்பாலான கமிஷனர்களின் சிபார்சுகளையெல்லாம் அங்கீகரிக்காமல் தனியே முக்கியமான சிபார்சுகளைச் சொல்லியிருக்கிறார். ரிபோர்டோ பிரளயத்திற்கு முந்தின விஷயமென்று கருதப்பட்டிருக்கிறது.

இவ்வாறான காரணங்களினாலெல்லாம், எக்காலும் பிறருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்று இந்தியா உணர்ந்து கொள்ளும்படி ஆயிற்று. கிரேட் பிரிட்டனிலே பிரிட்டிஷார் ஆட்சி புரிகின்றனர். பிரான்ஸிலே பிரஞ்சுக்காரர் ஆட்சி நடத்திவருகின்றனர். அமெரிக்காவிலே அமெரிக்கரும், குடியேற்ற நாடுகளிலே அந்நாட்டு ஜனங்களும் ஆட்சி புரிந்து வருகின்றனர். உலகத்திலே எல்லா தேசத்தினரும் தங்கள் தங்கள் தேசத்தில் ஆட்சி நடத்திவர, இந்தியரோ தங்களது தேசம் தங்களுக்குச் சொந்தமானதென்று நினைக்கக் கூட முடியவில்லை. பிரிட்டனில் பிரிட்டிஷாருக்கே நன்மை கிடைக்க வேண்டுமென்பது நியாயமாம். ஆனால் இந்தியாவிலே இந்தியருக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்றால், அது தப்பாம், தவிர ராஜத்துவேஷமுமாகுமாம். ஏகாதிபத்தியத்தின் நன்மைக்காக

வும், ஏகாதிபத்தியத்தின் இதர பாகங்களினுடைய தன்மைக்காகவும் இந்தியா இருக்கவேண்டுமாம். பிரிட்டிஷாரின் வியாபாரத்துக்கு பிரிட்டிஷார் உதவி புரிய வேண்டுமென்பது கிரமம். ஆனால் இந்தியருக்கு சுதேச சாமான்கள் வேண்டுமென்றால் அது அற்பத்தனமும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரிடையான உணர்ச்சியும் ஆகுமாம். ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த இதர பாகங்களின் பிரஜைகளெல்லாம் ஏகாதிபத்தியப் பிரஜைகளென்ற உரிமைகளுடன் வாழும்பொழுது, இந்தியரோ ஏகாதிபத்தியப் பிரஜை என்ற உரிமையின்றி இந்தியாவிலே பிறருக்குக் கட்டுப்பட்டிருக்கும்படியான தன்மையில் இருக்கவேண்டுமாம். இதைப்பற்றி இந்தியர் திருப்தியும் கௌரவமும் கொள்ளவேண்டுமோ?

கிரேட் பிரிட்டனிடம் இந்தியாவுக்குள்ள நம்பிக்கையானது நசுங்கிப் போகும் சமயத்தில், இந்தியா மந்திரியாக மிஸ்டர் மாண்டேகு வந்தார். அவரை இந்தியாவுக்கு வந்து போகும்படி ராஜப்பிரதிநிதி அழைத்தார். இதனால் இருள் மூடியிருந்த சமயத்தில் சூரியோதயம்போல் இந்தியருக்கு ஆறுதல் உண்டாகத் தலைப்பட்டது. கிரேட் பிரிட்டனிடம் இந்தியாவுக்கு மறுபடியும் நம்பிக்கை ஏற்படலாயிற்று. ஆயினும், ஹோம்ரூலை அடைந்துவிட வேண்டுமென்ற இந்தியாவின் தீர்மானம் மாறிவிட்டதென்று யாரும் நினைக்கவேண்டாம். ஹோம் ரூலை அடையும் விஷயமாய் சமாதானமான முறையில் ஏற்பாடுசெய்துகொள்ள இந்தியர் தயார்தான். ஆனால் இச்சமாதானமோ கௌரவமானசமாதானமாக இருக்கவேண்டும். கௌரவமான சமாதானம் என்றால் நமக்கு சுதந்திரம் கிடைக்கவேண்டும். ஆதலின் சுதந்திரம் கிடைக்காதுபோயின், ஹோம்ரூல் கிளர்ச்சி இன்னும் தீவிரமாகவே கிளம்பும்,

வெள்ளை ஜாதியார் உயர்ந்தவர்கள் என்ற அபிப்பிராயம் போய்விட்டது.

ஆர்ய சமாஜமும் பிரும்மஞான சபையும் பரவ ஆரம்பித்ததன்மேல் வெள்ளைக்காரர் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் குறைய ஆரம்பித்தது. இந்தியரின் பூர்வீக நாகரீகப்பெருமையை அந்த இரண்டு சபைகளும் போதிக்க ஆரம்பித்தன. எல்லா விஷயங்களிலும் மேனாட்டாரைப் பின்பற்றி நடக்க ஏற்பட்டிருந்த ஆசையை அச்சபைகள் தொலைத்துவிட்டன. இந்தியாவிடத்தில் மட்டிலடங்காத ஆசையும் மதிப்புங்கொண்டிருந்த ஸ்வாமி விவேகானந்தர் செய்த பிரசங்கங்கள் இன்னொரு காரணம். ஸம்ஸ்கிருதபாஷை நூல்களைப் போற்றி ஐரோப்பிய வித்வான்களும் தத்துவ சாஸ்திரிகளும் எழுதியது மற்றொரு காரணம். ஆனால் இக்காரணங்களினால் சிலர் பிரயோஜன மடைந்தார்களே யல்லாமல் பெரும்பாலோர் பிரயோஜன மடையவில்லை. ஜெப்பானாகிய சிறிய தேசம் ருஷியாவாகிய பெரிய தேசத்தை எதிர்த்து முறியடித்து விடவே, ஐரோப்பியர் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் பின்னடையத் தலைப்பட்டது.

தேசங்களைப்பற்றி ஜெர்மானியர் கொண்ட எண்ணங்களும், பிரான்ஸ்,பெல்ஜியம் முதலிய தேசங்களில் அவர்கள் கைப்பற்றிய நாடுகளிலே செய்யும் அட்டூழியங்களும் கீழ் நாட்டாரின் மனதைக் கலக்கிவிட்டன. இந்த யுத்தத்தில் ஜெர்மனி செய்திருக்கும் செய்கைகள் கிறிஸ்துமத நாகரீகத்தில் சிறந்தவையெனப் போற்றப்படும் தேசங்கள் கீழ் நாடுகளைத் தாழ்மையாகக் கருத, யோக்யதையுள்ளன வல்லவென்பதை வெளிப்படுத்திவிட்டது. கோடிக்கணக்கான ஜனங்கள் ஐரோப்பாவிலுள்ளபல பிராந்தியங்களிலும் சின்னாபின்னமாய் வதைக்கப்படுவதைப்பார்க்கும் ஆசியா கண்டத்தினர், தங்கள் மதமும் தங்கள் நாகரீகமுமே சிறந்தவையென நிர்த்தாரணஞ்செய்தால் அது தவறாகுமா?

சுதந்திரத்தைப்பற்றியும், ஜாதியபிமானத்தைப்பற்றியும் வாய் கிழியப் பேசிய மேனாடுகள் உண்மையுடன் அப்படிப்பேசி வந்தனவா என்ற சந்தேகமும் தற்போது உண்டாகின்றது. இந்தியர்கள் தற்சமயத்தில், அவநம்பிக்கையும், சந்தேகமும் கொண்டிருப்பதுபோல் இதற்குமுன் எந்தச்சமயத்திலும்கொண்டிருந்ததாகத்தாம் பார்த்ததுகிடையாதென்று ஸர்ஜேம்ஸ்மெஸ்டன் சிலதினங்களுக்குமுன் சொன்னார். அது உண்மையே. வெகு நாட்களுக்குமுன்னரே, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படாமலிருக்கக்கண்டு இந்தியர்கள் மனச்சஞ்சலம் கொண்டுவந்தனர். அதோடு 1905-ம் வருஷத்திலிருந்து அடக்குமுறைகள் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றன. தீவிரமான திருத்தங்கள் வெகு நாட்களுக்கு முன்னமேயே செய்யப்பட வேண்டியிருந்தும் இன்னும் செய்யப்படாமலிருக்கின்றன. இந்தியர்களிடம் தோன்றியுள்ள அவநம்பிக்கையும் சந்தேகமும் தீவிரமான திருத்தங்கள் செய்யப்படுவதிலிருந்தே விலகவேண்டும். தந்திரமாய் சால்ஜாப் சொல்லும் காலம் போய்விட்டது. உண்மையாக அனுஷ்டிக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

தற்போது உண்டாயிருக்கும் நவீன எழுச்சிக்கு வேறு பல காரணங்களுமிருக்கின்றன. சுதேச சமஸ்தானங்கள், பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட இந்திய மாகாணங்களை விடக் கல்வியிலும், கைத்தொழிலிலும், நிர்வாகத் திறமையிலும் நாளுக்குநாள் முற்போக்கடைந்துவர, பிரிட்டிஷ்இந்தியாவில்மட்டும்வெகு மெதுவாய்ச் செல்வதை ஜனங்கள் கவனிக்கின்றார்கள். சுதேச சமஸ்தானங்களில் இந்திய மந்திரிகளால் நிர்வாகம் நடத்தப்படுகின்றமையே, அவற்றின் அபிவிருத்திக்குக் காரணமென்பதைக் கண்டு பிரிட்டிஷ் இந்தியாவிலும் அப்படிப்பட்ட ஆட்சி ஏற்பட வேண்டுமென்று நாடுகின்றார்கள். இந்தியர்களுக்கு இந்தியரின் ஆட்சியே அதிக நன்மை தருமென்று சொல்வது தவறாகுமா?

வியாபாரிகள் விழித்துக்கொண்டனர்.

இதுவரையில், ராஜீய விஷயங்களில் சிறிதும் தலையிடுவது வழக்கமில்லாத வியாபார வகுப்பாரும், தற்போது இராஜீய விஷயங்களில் அளவற்ற ஊக்கம் காட்டத்தலைப்பட்டிருப்பது மிகவும் பலனுள்ள ஒரு நற்குணமாகும். தங்களுடைய தொழிலுக்கே எதிர்காலத்தில் நாசம்ஏற்பட்டுவிடுமென்ற உணர்ச்சியினா

லேயே அவர்கள் ராஜீய விஷயங்களில் ஊக்கங்காட்டத் தலைப்பட்டிருக்கின்றார்கள். உதாரணமாக, ஜெர்மனியுடன் நடந்து வந்த இந்திய வியாபாரத்தை இந்தியாவிலேயே ஸ்தாபிக்க கவர்ன்மெண்டு தகுந்த உதவி செய்ய முன்வரவில்லை. புதிய தொழிற்சாலைகளை யமைக்கும்பொருட்டு வேண்டிய சௌகரியங்கள் கொடுக்கவில்லை. யுத்த சால்ஜாப்பைச் சொல்லி நடந்துவந்த வியாபாரங்களுக்கும் நிர்ப்பந்தங்கள் விதிக்கப்பட்டன. இங்கிலாந்திலிருந்து கிடைக்கவேண்டிய நிலுவைகளை வசூலிக்க தகுந்த உதவி காட்டப்படவில்லை. மதராஸ் பாங்கி, வங்காள பாங்கி முதலிய ராஜதானிப்பாங்கிகள் இந்திய வியாபாரிகளுக்கும் ஐரோப்பிய வியாபாரிகளுக்கும் பாரபக்ஷம் காட்டுகின்றன. இந்த பாங்கிகளின் தலைமை நிர்வாக அதிகாரிகளில் ஒரு இந்தியரேனும் கிடையாது. எவ்வளவோ கேட்டும் இதுவரையில் பலன் கிடைக்கவில்லை. இவ்வாறாகப் பல வழிகளில் இந்திய வியாபாரிகள் நெருக்கப்படவே அவர்கள் விழித்துக்கொண்டார்கள்.

இந்தியாவிலுள்ள தாதுப்பொருள்களை அந்நியர்கள் வெளியேற்றிக்கொண்டுபோவது வெகுநாளாக வழக்கமாய்விட்டது. கவர்ன்மெண்ட் அதைப்பற்றி சிரத்தை பாராட்டவில்லை.

மலையாளத்தில் தேங்காய், கயிறு வியாபாரம் பெரும்பாலும் ஜெர்மனியர் கையிலிருந்தது. நல்லவேளையாய் அது தற்போது இந்தியக் கம்பெனியாகிய டாடா கம்பெனியால் அந்தப் பெரும் கைத்தொழில் குன்றாது நடந்து வருகின்றது. ஆயுதச் சாமான்களின் உத்பத்திக்கு இன்றியமையாத உலோகப் பொருள் கிடைக்கும் இடங்களும் அப்ரேக் கிடைக்கும் இடங்களும் சமீப காலம்வரையில் இந்தியாவிலே ஜெர்மானியர் கைவசத்திலிருந்தன. ஐரோப்பியத் தொழிற்சாலைகளைவிட, மைசூரிலுள்ள தோல் பதனிடும் சாலை அதிக மேன்மையாகத் தோல் பதனிடுவதை நிரூபித்தும், இந்தியாவிலிருந்து தோல்கள் அந்நிய நாடுகளுக்கு பதனிடவும், சாமான்கள் செய்து இறக்குமதியாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. சொல்ப உதவியை கவர்ன்மெண்ட் ஆதியிலேயே செய்திருந்தால், தோல் பதனிடும் தொழிலும், சாமான் உத்பத்தித் தொழிலும் இந்தியாவிலேயே சிறப்பாய் நடைபெற்றுவர இடமேற்பட்டிருக்கும். இந்தியாவில், இந்த யுத்தக் காரணமாக தோல் பதனிடும் தொழிலில் வெகுவாய் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு விசேஷபலன் ஏற்பட்டிருக்கின்றதென்றும், இந்த அநுபவத்தினால் தோல் பதனிடும்தொழில் இந்தியாவில் ஒரு சாச்வதமான தொழிலாக ஏற்பட்டு விடலாமென்றும் ராஜப்பிரதிநிதி சமீபத்தில் சொன்னார். ஆனால் இப்போது பதன்தொழில் பல நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு வருந்திவருகிறது. இந்திய ஜனங்களின் பணத்தைச் செலவிட்டு ஆராய்ச்சிகள் நடத்தியதனால் கிடைத்த நன்மைகளை இந்தியர்கள் அடைய வேண்டுமேயொழிய ஆங்கிலோ இந்தியர்களல்லவென்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

இந்தியாவிலிருக்கும் அளவற்ற இயற்கைச் செல்வத்தில் கவனஞ் செலுத்தும்படி இந்த யுத்தமானது கவர்ன்மெண்டைத் தூண்டிற்று. இந்தியாவின்

இயற்கைச் செல்வம் விருத்தி செய்யப்பட்டு இந்திய ஜனங்கள் சுபிக்ஷமடைய வேண்டுமென்று தான் இந்தியர்களும் விரும்புகின்றார்கள். இந்தியாவில் கிடைக்காத பொருள் இல்லை; செய்ய முடியாத சாமானும் இல்லை. இந்தியாவில் கிடைக்கும் வஸ்துக்கள் இந்தியாவுக்குக் கண்டு மிஞ்சி உலகத்தில் பலதேசங்களுக்கு ஜீவனத்தைக் கொடுக்குமென்று 17-ம் நூற்றாண்டில் பிலிமோர் என்பவர் சொல்லியிருப்பது இன்றைக்கும் பொருந்தக் கூடிய வார்த்தையாகும். ஆனால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் காலம் முதற்கொண்டு நாளது வரையில் இந்திய தேசமானது அந்நிய நாடுகளுக்குவிளை பொருள்களையும், கொடுக்கக் கடமைப்பட்ட தேசமாக பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஒரு பக்கத்தில் இந்திய தேசம் தரித்திர நிலைக்குள்ளாக, மறுபக்கத்தில் இங்கிலாந்தின் கைத்தொழில் அசாதாரணமான விதமாய் விருத்தியடைய வழியேற்பட்டதென்று லார்டு மெகாலேயும் அர்த்தபுஷ்டியுடன் சொல்லியிருக்கின்றார். முதல் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரும் பிறகு பிரிட்டிஷ் கவர்மெண்டாரும், கடைசியாக ஏகாதிபத்திய சிறப்பை கொண்டாடுவோம். இந்தியா, தனது விளை பொருள்களை ஏற்றுமதி செய்துவிட்டு இங்கிலாந்திலிருந்து நன்றாகவும், இதர அந்நிய நாடுகளிலிருந்து சுமாராகவும் செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்து கொள்ளும் தேசமாக இருக்கவேண்டுமென்ற அபிப்பிராயம்காட்டிவந்திருக்கின்றனர். சுருக்கச்சொன்னால் இந்தியா ஐரோப்பாவின் தோட்டமாக ஏற்படவேண்டுமென்பது இவர்களின் கொள்கை. இந்த முறையை மாற்ற முயற்சி செய்யும் ராஜப்பிரதிநிதி லார்டு செம்ஸ் போர்டுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருப்போம். என்றாலும் அவருடைய முயற்சி பலிக்குமோவென்று நாம் சந்தேகிக்கவேண்டியிருக்கின்றது. ஏனென்றால் நமது நீண்ட நாள் அனுபவமானது நமக்கு நம்பிக்கையையுண்டுபண்ணவில்லை.

மத்திய மாகாணத்தில் எஃகு உற்பத்தி செய்வதற்குரிய தாதுப்பொருள் இருக்கக்கண்டுபிடித்து நூறு வருஷங்களுக்கு மேலாகின்றது. இங்கிலாந்தின் இரும்புத்தொழிலுக்கு ஹானி நேரிடுமோவென்ற பயத்தினால், மத்திய மாகாணத்தில் இரும்புத்தொழிலை விருத்திசெய்ய எவரும் முயற்சி செய்யவில்லை. கடைசியாய் டாடா கம்பெனியார் அத்துறையில் இறங்கிப்பெரியகைத்தொழிலை ஸ்தாபித்தார்கள். டாடா கம்பெனியில் முன்பு 30 ரூபாய்க்கு விற்ற பங்கு தற்போது 1180 ரூபாய் விலைபோகின்றது. உலக முழுவதும் டாடா தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பை விரும்புகின்றனர். பல வருஷங்களுக்கு முன்னதாகவே இத்தொழில் விருத்தி செய்யப்பட்டிருந்திருக்குமானால் இந்த யுத்தத்தில் கவர்ன்மெண்டுக்கு எவ்வளவோ சாதகம் ஏற்பட்டிருக்கும். இந்தியாவின் கைத்தொழிலை அபிவிருத்திசெய்ய இதுவரையில் செய்யப்பட்ட முயற்சிகள் ஒழுங்கானவையல்லவென்பதை ராஜப்பிரதிநிதியும் ஓரளவு ஒப்புக்கொண்டு பேசியிருக்கின்றார்.

இந்தியாவின் கைத்தொழில் பெருக்கத்தினால் ஆங்கிலோ இந்தியர்கள் நன்மையடைந்தால் போதாது. இந்தியர்கள் நன்மையடையும்படி பார்க்க

வேண்டியது கவர்ன்மெண்டின் கடமை. அப்படியிருக்க சமீபத்தில் நேர்ந்த சில சம்பவங்கள் திருப்தியைக்கொடுக்கக்கூடியனவாயில்லை. இந்தியா கவர்ன்மெண்டார் பொதுப்பணத்தைச் செலவிடும் விவசாயஇலாக்காவில் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அதன் பலனாக இங்கிலாந்துக்கு அதி அவசியமான ஒருவகை பருத்திச் சாகுபடியை விருத்திசெய்ய முயற்சிகள் செய்யப்படலாயின. இந்தியாவின் நெசவுத் தொழிலுக்கு அந்த பருத்தி தேவையில்லாமலிருந்தும் இங்கிலாந்தின் நெசவுத் தொழிலாளிகளின் பொருட்டு இங்கு அவைகள் வரவழைக்கப் படுகின்றன. அதன் அருத்தம் இன்னதென விளங்கவில்லை.

என்றாலும் இந்த யுத்தமானது, இந்திய கைத்தொழில் விஷயத்தில் கவனம் பாராட்டும்படி கவர்ன்மெண்டைத் தூண்டிவிட்டது. துருப்புகளுக்கு வேண்டிய சாதனங்களைச் சேகரித்துக் கொடுப்பதற்காக இந்தியக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டியது கவர்ன்மெண்டுக்கு அவசியமாய் ஏற்பட்டது. இனிமேல் கைநழுவ விடாமல் மேலும் மேலும் விருத்தி செய்து கொண்டு போவது கடமையாகும். அப்படிச் செய்வதற்கு தேசத்தின் கவர்ன்மெண்ட் தேச ஜனங்களால் அமைக்கப்பட்டதா யிருக்கவேண்டும். அப்படி ஏற்பட்டாலன்றி இந்தியா இன்னும் கேவலமான ஸ்திதிக்கு வந்து விடும்.

தொழிலபிவிருத்திக்கு வசதிகள் உண்டா?

இந்தியாவில் தொழிலபிவிருத்திக்கு வசதிகள் இல்லாமல் போகவில்லை. ஆனாலும் அது இந்தியரின் முயற்சியைத்தான் முற்றிலும் பொருந்திருக்கிறது. 'பிரிட்டிஷ் இந்தியாவும் அதன் வியாபாரமும்' என்ற புத்தகத்தில் மிஸ்டர் டோஸர் இது விஷயமாய் எழுதியிருப்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் பொருந்தும்.

'சணல், பருத்தி, ஆகிய தொழில்கள் ஏற்கெனவே பிரமாதமாய் நடந்து வருகின்றன. அந்த இரண்டு இனங்களிலும் தொழில் பெருக்கு ஏற்பட விசேஷ வசதிகளும் வாய்த்திருக்கின்றன. கரும்பும் புகையிலையும் ஏராளமாய் பயிரிடப்படுகிறது; சாஸ்திர தோரணையில் அவைகளைப் பயிர் செய்தால் தொழிலபிவிருத்தி வெகு தீவிரமாய் ஏற்படும். பற்பல எண்ணெய் விதைகளை ஏற்றுமதி செய்வதற்குப்பதிலாக இந்தியாவிலேயே எண்ணெய் பிழிந்து அது சம்பந்தமான தொழில்களை விருத்திசெய்யலாம். பருத்தியையும் இங்கு சரியானபடி உபயோகிப்பதாய் தெரியவில்லை. ஆட்டுத்தோல்களையும் மாட்டுத் தோல்களையும் பெரும்பாலும் பதனிடாமல் இப்போது ஏற்றுமதி செய்வது போல் செய்யாமல் இந்தியாவிலேயே அவற்றை ஒழுங்காய்ப் பதனிட ஏற்பாடு செய்யவேண்டும். பட்டு நூல் முதலானவைகளை இன்னும் நேர்த்தியாய்ச் செய்யப் பழகவேண்டும். இந்திய ரயில்வேக்களுக்கான சக்கரம் முதலிய பல உபகரணங்களையும் இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டுமேயன்றி இறக்குமதி செய்யக்கூடாது. எஃகுசாமான்களும் இரும்புசாமான்களும் ஏராளமாய்ச்செய்யப்பட்டு வருகிறதென்றாலும் இன்னும் அபிவிருத்திக்கு இடமில்லாமற்போகவில்லை. விவசாயிகளும் தொழிலாளிகளும் பழைய நாள் ஆயுதங்களையும் கருவி

களையும் வைத்துக்கொண்டிருக்கிறார்களேயன்றி [illegible] சாமான்களை இந்தியாவிலேயே செய்து உபயோகப்படுத்துகிறதில்லை. காகிதமும் சோப்பும் இயந்திர சாலைகளும் மாவு மில்லுகளும் போதியவளவு இல்லை. வாணியர்களும் செக்குக்காரர்களும் கர்நாடக இயந்திரங்களையே இன்னும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். கடியாரம், ஜேணம், ஜோடு, விளக்கு மெழுகுவர்த்தி, சோப், தீப்பெட்டி, கத்தி வகையறாக்கள், சாயம், கண்ணாடி சாமான்கள், மின்சாரக் கருவிகள் முதலானவை செய்யவும் இந்தியாவில் எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன.”

இந்தியாவின் வியாபார நிலைமை.

எனவே இந்தியாவில் விளைவிக்கக்கூடியதைக்கொண்டே இந்தியர் திருப்தியுடன் சுகமாய் வாழலாமென்று ஏற்படுகிறது. பழைய நாட்களில் இந்தியாவிலிருந்து ஏராளமாய் ஏற்றுமதிகள் செய்யப்பட்டன வென்பதை அறியாதார் இல்லை. ஆனால் இப்பொழுதோ இந்தியாவில் இறக்குமதிகள் தான் குவிந்து கொண்டிருக்கின்றன. மேலும் தற்போதைய ஏற்பாட்டின்படி இந்திய ஏற்றுமதிகளால் கிடைக்கவேண்டிய லாபம் கிடைப்பதேயில்லை. யுத்தத்திற்கு முன் இறக்குமதிகள் விஷம்போல ஏறிக்கொண்டே வந்தன. யுத்தம் ஆரம்பித்த பின் குறையத் தலைப்பட்டன.

		மொத்த இறக்குமதி		ஜவுளி தினுசுகள்.
1911-12	பவுன்	92,383,200	பவுன்	28,592,000
12-13	,,	107,332,490	,,	35,586,000
13-14	,,	122,165,203	,,	38,758,000
14-15	,,	91,952,600	,,	28,643,000
15-16	,,	87,560,169	,,	25,175,000

யுத்தம் ஆரம்பித்த பின்பும் அதற்கு முன்பும் இங்கிருந்து ஏற்றுமதியாகிவந்த சாமான்கள் அதிகமாகவே யிருந்திருப்பினும் விற்பனைத் தொகையை ஒழுங்காக வசூலிக்க முடியாமல் கஷ்டங்கள் குறுக்கிடலாயின.

		மொத்த ஏற்றுமதி
1911—12	பவுன்	147,879,060
12—13	,,	160,899,289
13—14	,,	162,807,900
14—15	,,	118,323,300
15—16	,,	128,356,619

ஜப்பானிய வியாபாரம் அந்த கவர்ன்மெண்டின் உதவியால் இந்தியாவில் பெருகிவருவதை இந்திய வியாபாரிகள் பார்த்துக்கொண்டுதான் வருகிறார்கள். அன்னிய நாட்டுச் சாமான்களோடு இந்தியர் தங்கள் தேசத்திலேயேபோட்டி

போடவேண்டியிருக்கிறது. தேச நிர்வாகத்தில் இந்தியருக்குப் பங்கு வேண்டுமென்பதற்கு இதைவிட வேறு காரணம் வேண்டுமோ? குறைந்த விலைக்கு ஜப்பானிய சாமான்கள் இந்தியாவில் குவிந்து கொண்டிருக்கின்றன. இவைகளின்மேல் வரிவிதித்து தங்கள் வியாபாரத்தை முற்படுத்த இந்தியருக்கு சுய ஆட்சி வேண்டுமென்பது இதினின்றும் விளங்கவில்லையா ?

இங்குள்ள ஐரோப்பிய வர்த்தகச் சங்கங்கள் இந்திய ராஜீய விஷயங்களில்மட்டும் அக்கறை காட்டுவதில்லை. ஏனெனில் இந்தியரின் நன்மைக்கே ராஜீயக்கலக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதிகாரி வர்க்கத்தினரிடமிருந்து நிர்வாகம் மாறிவிடுமானால் இதுவரை ஐரோப்பியர் அனுபவித்துவந்த கிரமத்தப்பான சுதந்திரங்களை இழக்க நேரிடுமல்லவா? 17-ம் நூற்றாண்டில்வியாபாரத்துக்கென்று இந்தியாவில் புகுந்தவர்கள் நாளடைவில் இந்தியாவின் எஜமானர்களாய்ப் போனதுமுதல் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு கொண்டாட்டமாயிருந்து வருகிறது. நம்முடன் சம அந்தஸ்து பெற்று இந்தியர் வியாபாரப் போட்டி போடுவதா என்று நினைக்கும்போது அவர்களுக்கு மனம் பிடிக்கவில்லை. 'எங்களுக்கு நியாயம் வேண்டாம், பிரத்தியேகமான சுதந்திரங்களே வேண்டும்' என்பதுதான் அவர்களுடைய கொள்கை. ஆங்கிலேயரின் நன்மைகளைப் பாதுகாக்க ஆங்கிலேயரே நிர்வாகத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கவேண்டுமாம். ஸர் ஹியூ பிரேயின் கோபமும் பயமும் இதை ஒட்டியதுதான். இந்தியரே இந்தியாவில் ஆதிக்கம்பெற்று விட்டால் தங்களுக்கு யார் ஆதரவு காட்டப்போகிறார்கள் என்பதே ஐரோப்பிய வர்த்தகர்களின் பயம்.

யுத்தத்திற்குப்பின் தங்கள் கையில் அதிகாரம் இருந்தாலன்றி இந்திய வியாபாரம் அழியவேண்டியதுதான் என்று இந்தியருக்கு கவலை யுண்டாய்விட்டது. ஐரோப்பிய வர்த்தக சபைகளும் ஐரோப்பிய வியாபாரச் சங்கங்களும் இந்தியக் கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம் இவைகளை அழிப்பதற்கென்றே அமைக்கப்பட்டிருப்பதாக சகஜமாய் எண்ணப்படுகிறது. ஆங்கில பாங்கிகளும் கவர்ன்மெண்டாரும் ஆங்கிலேய வியாபாரிகளிடத்தில் பாரபட்சம் காட்டுவதனால் வியாபாரக் கட்டுப்பாடில்லாத இந்தியர் மிகுதியும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆகையால் மிஸ்டர் ரூட் சொல்லியுள்ளபடி, இந்திய வர்த்தகத்தையும் இந்தியக் கைத்தொழில்களையும் கிரேட்பிரிடன் அடக்கியாளுவது மன்னிக்கத்தகாத குற்றமேயாகும். எவ்வித சட்டம் செய்தபோதிலும் பிரிட்டிஷாரின் நன்மைகள் பாதுகாக்கப்படுவதிலேயே கண்ணாயிருக்கிறார்களென்றும் மிஸ்டர்ரூட் சொல்லியிருப்பதுஇச்சந்தர்ப்பத்தில்குறிப்பிடத்தக்கது. இந்திய வியாபாரிகளும் இதை அறியாமல் இல்லை. அதுபற்றித்தான் அவர்கள் சுயஆட்சியை கைகண்டமருந்தென ஆதரித்து வருகின்றனர்

வரவு செலவு சம்பந்தமாய் சுவாதீனம்,

வரவு செலவு சம்பந்தமாய் சுவாதீனம் வேண்டுமென்றால் ராஜீய சுயஆட்சி அதற்கு முன்கிடைத்தே தீரவேண்டுமென்பதையும் இந்திய வியாபாரி

கள் அறிந்து கொள்ளாமலில்லை. 'சுய ஆட்சி வேண்டாம்; வரவு செலவு சம்பந்தமான சுதந்திரம் மட்டும் வேண்டும்' என்று சொல்வோர் விஷயத்தை உள்ளபடி அறியாதவர்களே யாவர். வரவு செலவு இலாக்காவுக்கு ஒரு இந்தியரை நியமித்தால், அவர் மதிப்புத் திட்டம் போடும்போது கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் இந்த இனங்களில்செலவை அதிகரிக்கவேண்டுமென்றே அவருடைய மனதில்படும், ரயில்வேக்கள் போட சர்க்கார் வரிப்பணத்திலிருந்து பைசா எடுக்காமல் அதற்கென்று ஒரு கடனைப் பிரத்தியேகமாய் ஏற்பாடு செய்யவும் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக்குறைத்து சிக்கனம் பாராட்டவும் ஒரு இந்திய மெம்பரே கவலை கொள்ளக்கூடும். சென்ற பத்து வருஷங்களில் 16 கோடி ரூபாய் உத்தியோகஸ்தர்களின் சம்பள இனத்தில் உயர்ந்து செலவாயிருக்கிறது.

வரவு செலவு சம்பந்தமான சுவாதீனம் கிடைத்தால நிலத்தீர்வையைக் குறைத்து விவசாயிகளைக் கௌரவமாய்க் காலந் தள்ளும்படி செய்யலாம்; இந்தியாவின் தேவைகளை அனுசரித்து இறக்குமதிகளின் பேரில் வரி விதிக்கலாம்; இதர தேசங்களில் கிடைக்கக்கூடாத பொருள்களாகிய சணல் நீலம் முதலானவைகளின் மேல் கனத்த வரி விதிக்கலாம்; மது பானங்கள் இந்தியாவுக்குள் நுழையாதபடி தடுக்கலாம்; மற்றும் சுகானுபவப்பொருள்கள் இறக்குமதியாகாமலிருக்க ஏற்பாடு செய்யலாம்; நண) 10 கோடி முதல் 14 கோடி வரையில் மதிப்புள்ள சர்க்கரை இந்தியாவில் இறக்குமதியாகாமல் தடுக்கலாம்; பருத்தித் துணிகள் 37 அல்லது 41 கோடிக்கு இப்போது இறக்குமதியாகிவருகின்றன; இறக்குமதியாகும் பட்டுச் சாமான்கள் 2¼ கோடி ரூபாய்க்கு இப்போது உயர்ந்திருப்பது போல் உயராமல் பார்த்துக் கொள்ளலாம்; ராணுவச் செலவை ஆரம்பத்தில் குறைக்க முடியாதாயினும் பின்னிட்டு இந்தியாவிலேயே சைனியம் திரட்ட ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

இதையெல்லாம் கண்டுதான் இந்திய வியாபாரிகள் சயஆட்சி வேண்டுமென்கிறார்கள்.

இந்திய ஸ்திரீகளின் விழிப்பு.

ஆரியருடைய புராதன நாகரீகத்தில் ஸ்திரீகளின் அந்தஸ்து வெகு மேன்மையாகவேயிருந்தது. பெரும்பாலர் விவாகமானவர்கள் 'விவாகமான பெண்கள் வீடுகளுக்கு லக்ஷ்மி' என்று மனுதர்ம சாஸ்திரத்தில் கண்டிருக்கிறது. சிலரே தபசிகளாய் பிரம்ம ஞானத்தை அடைய வழிதேடினார்கள். சூதாட்டத்தில் தோற்றுப் போன தனது நாயகனுடைய கதியைக் கேட்ட தமயந்தியும், யுத்த மந்திராலோசனை சபையில் தன் பிள்ளையுடன் போராடின காந்தாரியும், சித்தூர் பத்மாவதியும், மார்வார் மீராபாயும், சங்கீதத்தில் தேர்ந்த தோடா தாராபாயும், ஆமது நகரத்தைக் காப்பாற்றிய சந்து பீபியும் இந்தூர் சமஸ்தானத்தை வல்லமையுடன் ஆண்ட அகலிபாய் ராணியுமே ஸ்திரீகளின் யோக்கியதைக்கு போதிய திருஷ்டாந்தங்கள் எனலாம்.

சென்ற ஐந்தாறு தலைமுறைகளாகத் தான் ஸ்திரீகளின் அந்தஸ்து மாறுபட்டிருக்கிறது. புருஷர்களின் பொது வாழ்வில் அவர்கள் கலந்து சுகம் தருவதில்லை. ஆனால் இப்பொழுதுங்கூட கணவனையும் பிள்ளையையும் ஸ்திரீகள் ஓரளவு அடக்கியாண்டு ஒழுங்கான வழியில் கொண்டுபோக புத்தி படைத்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களை அறிவில்லாதவர்களென்று சொல்லிவிடுவதற்கில்லை. ஆயினும் ஸம்ஸ்கிருதத்தையும் தேச பாஷையையும் அறவே ஒழித்து ஆங்கிலப் படிப்பில் மூழ்கிக்கிடக்கும் புருஷர்களையும் பிள்ளைகளையும் எவ்விதத்திலும் ஆதரிக்க முடியவில்லை. புருஷனுடைய நோக்கங்கள் விசாலித்திருக்க பெண்டுகளின் திருஷ்டி குறுகத் தலைப்பட்டது. புதிய நாகரிகத்தில் புருஷர்கள் ஈடுபடவே, பெண்டிருக்கு மதாச்சாரங்களின் விசால நோக்கம் மறைந்து கர்மாக்களைப்பண்ணி வைக்கும் சாஸ்திரிகளையே நம்பியிருக்க நேர்ந்தது. எனவே ஞானமடைய வழியின்றி குருட்டுக்கொள்கைகளில் ஈடுபட்டுச் சிறிதுகாலம் உழன்றனர்.

ஆங்கிலப்படிப்பினால் பிள்ளைகள் கெட்டுப் போகா வண்ணம் பாதுகாக்க கவலை தோன்றிற்று, முதல் மதப்படிப்பு வேண்டுமென்று இந்திய ஸ்திரீகள் கிளர்ச்சி செய்ய வாரம்பித்தார்கள். இச்சந்தர்ப்பத்தில்தான் அவர்கள் முதன் முதல் விழித்துக் கொள்ளலாயினர். அப்பால் வெளி நாடுகளுக்குச் சென்ற இந்தியர்கள் பட்ட பாட்டைக் கண்டு இந்திய ஸ்திரீகளின் மனம் உருகியது. தென்னாபிரிக்காவில் இந்திய ஸ்திரீகள் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள பகிரங்கமாய் வெளிவந்து கண்டிக்கத் தலைப்பட்டனர். வங்காளப் பிரிவினை வங்காள ஸ்திரீகளுக்கு முற்றிலும் பிடிக்கவேயில்லை ஓர் அமிதவாதப் பத்திராதிபருக்கு அபராதம்விதித்தபோது 500வங்காளஸ்திரீகள் அவருடைய தாயினிடம் சென்று தங்கள் வருத்தத்தை தெரிவித்து அவரை வாழ்த்தினர் ஒப்பந்தக் கூலிகளின் மானக்கேட்டை அறிந்து இந்திய ஸ்திரீகள் செய்த கிளர்ச்சி யாருக்கும் ஞாபகமிருக்கும். ராஜப்பிரதிநிதியினிடம் அவர்கள் டெபுடேஷனாய்ச் சென்று ஸ்திரீ ஜாதியின் குறைகளைச் சொல்லிக் கொண்டார்கள்.

இது ஒருபுறமிருக்க, இயற்கையாகவே தங்கள் பெருமை போய்விட்டதென்ற விஷயம் இந்திய ஸ்திரீகளுக்கு ஞாபகம் வந்து மறுபடியும் விழித்துக் கொள்ளலாயினர். பலருடைய சரித்திரங்களைக் காதால் கேட்டுவிட்டு சுயேச்சைக் கிளர்ச்சியில் சேராதிருக்க அவர்களுக்கு மனம் வருமோ? தேசாபிமானமாகிய நெருப்பு அவர்களுடைய ஹிருதயத்தில் எரிந்து கொண்டேயிருந்தது. அன்னிய நாட்டாரின் ஆதிக்கத்தை அவர்கள் இயல்பாகவே வெறுக்கக்கூடியவர். அதோடு மதாச்சாரம் சீர்குலைவதைப்பார்த்து அவர்களுக்கு மனம் சகிக்கவில்லை. எனவே ஸ்திரீகளின் உதவியினால்சுய ஆட்சிக்கிளர்ச்சி இப்போது பலப்பட்டிருக்கிறது. ஜனாப்பரித்தியாகம் ஸ்திரீகளுக்கு விசேஷமாய் உண்டு. பக்தோபஸ்திவிருந்தவரை விடுதலை செய்ய எங்கே பார்த்தாலும் கலகம் நடந்தபோது புருஷர்கள்கூட ஊர்வலமாய்ச் செல்லப் பின் வாங்கியபோது

ஸ்திரீகள் முன்வந்து சென்னையில் ஊர்வலம் சென்றதை அறியாதார் யார்?
கோயில்களெங்கும் அர்ச்சனைகள் நடந்தபோது தான், ராஜீயமும் மதமும் ஓர்
இனம் என்பதை ஸ்திரீகள் அறிந்து கொண்டனர்.

ஜன சமூகத்தினரின் விழிப்பு.

கிராம வாசியான விவசாயிகளுக்கு ஆங்கிலம் தெரியாது போயினும்
அவர்களுக்கு ஞானமுண்டு. எப்படியென்றால், தொன்று தொட்டுவரும் கதை
களாலும் பரம்பரையினாலும் அவர்கள் ஞானமடைந்திருக்கின்றனர். அவர்கள்
மதப்பற்றுள்ளவர்கள். பாபபுண்ணிய விதிகளை உணர்ந்தவர்கள்; நல்ல உழைப்
பும் புத்திசாலித்தனமும் பொருந்தியவர்கள். ஸர்க்கார் யார், ஸர்க்காரின்
ஏஜெண்டுகளாய் தீர்வை வசூலிக்க வருவோர்யார், சில விஷயமாய்த் தலையிட
வருவோர் யார்,என்று அவர்கள் அவ்வளவாகக்கவனிப்பதில்லை. பண்டைக்காலத்
திலே கிராமகாரியங்களை பஞ்சாயத்து சபைகள் நிர்வகித்து நடத்தி வந்தன'
ஆகவே அவர்கள் க்ஷேமலாபத்துடனும் திருப்தியுடனும் இருந்து வந்தனர்'
ஆனால் அரசரின் வரி வசூலிப் போர் வரும்பொழுதும் போர் வீரர் வந்து கிரா
மத்தைத்தாக்கும் பொழுதும் அவர்களுக்கு மனோவியாகூலம் ஏற்படும். கிராமத்
தின் மீது யாராவது படையெடுத்து வந்தால், அரசருடன் நாமும் கஷ்டப்பட
வேண்டுமென்று அவர்கள் கருதுவார்கள். இப்பொழுதோ யந்திர சாம்யமான
ஆட்சியினால்அவர்கள் நசுக்கப்படுகின்றனர்.

கிராம வாழ்வின் மூலமாய் அவர்களுக்கு ஹோம்ரூல் லட்சியம் பட்டிருக்
கிறது. தற்பொழுதுள்ள விதிகளும் ஒழுங்குகளும் அவர்களுக்குத் துன்பமாய்
இருக்கின்றன. தானியமாக அல்லாமல் பணமாக நிர்பந்தமாய் அரசிறை கட்
டப்பட வேண்டியதைப்பற்றி அவர்கள் ஆத்திரமடைகின்றனர். அடிக்கடி மறு
ஸெட்டில்மெண்டு நடப்பதைக்கண்டு மனவருத்த மடைகின்றனர். மறு ஸெட்
டில்மெண்டு நடப்பதனால் ஏற்படும் தீர்வை உயர்வைச் செலுத்தவேண்டி
அவர்கள் கடன் வாங்கவேண்டி யிருக்கிறது. எனவே பழையபடி பஞ்சாய
த்து சபைகள் ஏற்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். தங்களா
லேயே கிராமகாரியங்கள் நிர்வகிக்கப்பட வேண்டுமென அவர்கள் ஆசைப்
படுகின்றனர். முன்னமிருந்த சமூக ஊழியர்களுக்குப்பதிலாக இப்பொழுதுள்ள
சில்லரை அதிகாரிகள் ஒழிக்குத் தொலைய வேண்டுமென விரும்புகின்ற
னர். இவ்வாறெல்லாம் ஜன சமூகத்தினருக்குள் விழிப்பு ஏற்பட்டிருப்பதற்
குப் பல காரணங்கள் உள. கூட்டுறவு முயற்சியினாலும், கற்றறிந்தோர் கிராமங்
களுக்குச் சென்று பலவாறான விஷயங்களைப்பற்றிச் செய்யும் பிரசங்கத்தினா
லும் அவர்களுக்கு ஒரு விதத்தில் விழிப்பு ஏற்படலாயிற்று.

தேசத்தின் பல பாகங்களிலே கான்பரன்ஸுகள் நடை பெறுகின்றன
அவைகளின் நடவடிக்கைகள் தேச பாஷைகளில் நடக்கும்பொழுது, விவசா
யிகள் ஏராளமாய் வந்து அக்கூட்டங்களில் பிரசன்னமாகி,விஷயங்களை நன்கு
வாதிக்கின்றனர். ஜாதிய கிளர்ச்சியில் தாங்களும் ஓர் அங்கமென்றும், தங்களு

க்கு நல்ல நாள் உண்டாகப் போகிறதென்றும் அவர்கள் உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டு விட்டார்கள்.

தாழ்ந்த வகுப்பினருக்கும் நம்பிக்கை யென்ற பிரகாசம் வீசத்தலைப்பட்டிருக்கிறது. இப்பொழுதோ அவர்கள் குனிந்த தலை நிமிர்ந்து, ஜன்ம பூமியிலே தங்களுக்கு ஏற்ற பதவி வேண்டுமென திட்டமாய்க் கேட்டு வருகின்றனர். தங்களாலேயே ஏற்பட்ட இயக்கத்தினாலும், அல்லது உயர்ந்த வகுப்பினரால் ஏற்பட்ட இயக்கத்தினாலும், அவர்களுக்குள் சுய மதிப்பு தீவிரமாய் ஏற்பட்டு வருகிறது. அவர்களின் விஷயமாய் நெடுங்காலம் மடமையால் அலட்சியமாக இருந்து விட்டோமே என்று பிராமணர்களும் உணர்ந்துகொண்டு, அவர்களைக் கைதூக்கி விட்டு தக்க ஆதரவளித்து வருகின்றனர். ஆதலின் வருஷா வருஷம் அவர்களது வருங்கால வாழ்வு உயர்ந்து வருகிறது. சர்மவினை காரணமாக அவ்வகுப்பினரை ஹோம் ரூலுக்கு எதிரிடையாக உத்தியோகஸ்தரும் அல்லாதவருமாகிய ஐரோப்பியர் தூண்டி வருகின்றன ரென்பதை உயர் வகுப்பார் கண்டு வருகின்றனர். பழைய காலத்தில் அவ்வகுப்பினரை அவமானத்துடன் நடத்தி வந்தீர்களே யென்றும், ஹோம் ரூல் கிடைத்துவிட்டால் அது முன்போல் பிராமணன் ஆட்சியாய் விடுமென்றும், ஐரோப்பியர் சொல்லி வருகின்றனர். தாழ்ந்த வகுப்பினரை அலட்சியஞ் செய்து வருவதால் ஹிந்து சமூகத்திற்கு ஆபத்துண்டாகு மென்றும், கிறிஸ்தவ மதத்தில் அவ்வகுப்பினர் சேரும்படி நாம் சும்மா இருந்து வருதல் விபத்துக் கிடமாகுமென்றும் 20 வருஷங்களுக்கு முன்பே நான் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். அவ்வகுப்பினரை உயர்த்துவதற்காக இதுவரையில் வெகு தூரம் முயற்சி செய்யப்பட்டுள்ளது; ஆயினும் அது கடலில் ஒரு துளியேயாம். மிகவும் உயர்ந்த ஜாதியார் மட்டுமல்லாமல், உயர்ந்த ஜாதியார் அனைவருமே தங்களுக்குப் பிழை செய்திருக்கின்றன ரென்பதை அத் தாழ்ந்த வகுப்பார் நன்கு அறிந்திருக்கிறார்கள். என்றாலும், அத் தாழ்ந்த வகுப்பாருள் பெரும்பாலரோ போனது போகட்டுமென்று பழங் கதையை மறந்துவிட்டு, தங்களது இந்திய சகோதரர்களுடன் ஒத்துழைத்துப் பலனடைய விருப்பங் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஜன்ம பூமியினிடம் அமர்ந்துள்ள ஒவ்வொருவரும் அவசரமாய்ச் செய்து தீர்க்க வேண்டிய கடமை என்ன? அலட்சியமாய் விடப்பட்டுப் போன தாழ்ந்த வகுப்பினரையும் நம்முள் இழுத்துக்கொண்டு ஒற்றுமைக்கப் பாடுபடலே யாகும்.

தேச இருமகா சபைகளின் சீர்திருத்தத் திட்ட விஷயமாய் மகா மகஜர் தயாரிக்க வேண்டுமென்று மிஸ்டர் காந்தி சொன்ன யோசனை மிகவும் விசேஷமான யோசனையாகும். அச்சீர்திருத்தத் திட்டத்தை நன்கு விவரித்துச் சொல்லிய பின்னரே கையெழுத்து வாங்கவேண்டு மென்று ஏற்பட்டதனால், விஷய ஞானத்தைப் பரவச் செய்வதற்கு அது மிகச்சிறந்த மார்க்கமாயிற்று. ஜனங்களால் அறிந்து சொன்னப்படவேண்டிய விஷயங்களைப்பற்றி துண்டுப் பிரசுரங்களை வெளியிட சென்னை மாகாணத்தில் தக்க முயற்சி

ஏற்படலாயிற்று. ஹோம் ரூல் என்றால் என்ன என்பதைப்பற்றி தேசபாஷையிலே வர்த்தமான பிரசுரங்கள் நாடெங்கும் வினியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. கிராமாந்திரங்களிலே அவ்வாறு பிரசுரங்களை வெளியிட்டு ராஜிய விஷய ஞானத்தைப் பரவச் செய்ததனால், மகா மகஜரில் சுமார் 8 லட்சம் பேர் ஒருமாதத்திற்குள் கையெழுத்திட் டிருக்கிறார்கள். கையெழுத்துப் பிரதிகள் இரண்டு இருப்பதால், ஹோம் ரூலில் சிரத்தை வாய்ந்தவர்கள் யார்யாரென்று நன்கு அறிந்துகொள்ள முடியும். இனிமேல் வரப்போகிற சுதந்திரத்தை யடைந்தனுபவிக்க முன்வருவோரின் தொகை கடல்போல் பெருகுமென்பது நிச்சயம்.

இந்தியா ஹோம்ரூல் கேட்பதேன்?

இரண்டு காரணங்களைக் கொண்டு இந்தியா ஹோம்ரூல் கேட்கிறது. அவ்விரு காரணங்களில் ஒன்று ஜீவாதாரமானது; மற்றொன்று மிக்க ஆதாரமுடையது. முதல் காரணமென்னவென்றால், ஒவ்வொரு தேசத்தினருக்கு சுதந்திரம் பிறப்புரிமையாகும். இரண்டாவது காரணம் யாதெனில், இந்தியாவின் சம்மதமின்றி இந்தியாவின் மிகவும் முக்கியமான க்ஷேம லாபங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் க்ஷேமலாபங்களுக்கு உட்பட்டிருப்பதும், இந்தியாவின் மிகவும் விசேஷமான தேவைகளுக்கு இந்தியாவின் ஆதாய மூலங்களை உபயோகிக்காதிருப்பதுமாம். இதற்கு உதாரணமாக இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அல்லாமல், இந்தியச் சேனைக்காகச் செலவிடப்படும் தொகையையும், ஆரம்பக் கல்விக்காகச் செலவு செய்யப்படும் தொகையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் போதும்.

ஜீவாதாரமான காரணம்.

ஒரு ஜாதியாரின் தன் மதிப்பையும் கௌரவத்தையும் கவனிக்குமளவில், சுயஆட்சி அவசியமாகும். சுயஆட்சி அல்லாத இதர ஆட்சியோ ஒரு ஜாதியின் ஆண்மைத்தனத்தைக் குறைக்கிறது, புத்திப்போக்கைத் தணிக்கிறது, யோக்கியதையைத் தாழ்வுபடுத்துகிறது. இரண்டாவது காங்கிரஸ் மகா சபையில் ராஜாராம் பாலசிங் சொல்லிய வண்ணம் பிரிட்டிஷ் ஆட்சியினால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் எல்லாம் 'ஆயுதச் சட்டத்தின் விபரீத அமுலினால் பலனற்றுப் போகின்றன. தவிர, ஆயுதச் சட்ட அமுல் காரணமாக நமது சுபாவங்கள் தாழ்வடைவதனாலும் நமது போர் வீரத்தன்மை நசிப்பதனாலும், வாளுருவிப் போர்புரியும் வீர தீரபுருஷர்களான நம்மை எழுத்தாணி எடுத்துப் பிழைக்கும் ஜனங்களாக மாற்றிவிடுவதனாலும், பிரிட்டிஷ் ஆட்சியினிடம் நாம் நன்றி பாராட்டுவதற்கில்லையெனவும்' அவர் சொல்லியிருக்கிறார். சுதந்திரம் இல்லாது போயின், யாரும் தனது முழு யோக்கியதையும் பிரகாசிக்கச்செய்வது அசாத்தியம். ஒவ்வொரு ஜாதியாரும் பிறக்கும்பொழுதே அவர்களது கதி இன்னதுதான் எனக்கடவுள் விதித்து விடுகிறாரென்றும், அந்த விதிப்படி அந்த ஜாதியார் தங்களது விசேஷமான காரியத்தை நடத்திவர வேண்டுமென்றும், சிறந்த இடாலிய தேசாபிமானியாகிய மாஸ்ஸினி என்பவர் உரைத்திருப்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். ஒரு ஜாதியார் நசுக்கப்பட்டாலோ அடக்கப்பட்டுப் போனாலோ அந்த ஜாதியார் தங்களது விசேஷ காரியத்தை மனித சமூகத்துக்குச் செய்ய முடியாமற்போகவே உலகமனைத்தும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

ஆதலினால் சுதந்திரம் வேண்டுமெனவும், சுய ஆட்சி வேண்டுமெனவும் ஒரு ஜாதியார் ஓலமிடுவது சுய நலத்தைக்கருதி மாத்திரமல்ல. சுய நலத்தைக்கருதியாவது சுய ஆட்சியும் சுதந்திரமும் வேண்டுமென ஓலமிடுதல் தவறாகாது. ஏனென்றால், சுதந்திரத்தையும்சுய ஆட்சியையும்அடைந்தால்தான் வாழ்வின் முழுப்பலனையும் பெற்று இன்பமாய் இருக்கமுடியும். பாரமார்த்திக லட்சியத்தை யனுசரித்து சுய ஆட்சியும் சுதந்திரமும் வேண்டுமெனக் கோரும் பொழுது, அச்சத்தால் அக்கோரிக்கை அடங்கிவிடாது. அதிகமான கஷ்டத்தைத் தருகிறோமென்பதாலும், அக்கோரிக்கையை மடக்கி விடுவதற்கில்லை. உயிர் போன்றுள்ள சுய ஆட்சியையும் சுதந்திரத்தையும் விட்டு உலகம் முழுவதையும் பெறினும் யாது பயன்? எனவே, ஆடம்பர வாழ்வுடன் அடிமைகளா யிருப்பதிலும், கஷ்டத்துடன் சுதந்திரம் கொண்டிருப்பதே மேல். ஆதலின், ஹோம் ரூல் கிளர்ச்சியை நசுக்கிவிட முடியாது, அழித்து விடவும் ஆகாது; அக்கிளர்ச்சியோ என்றும் நிலைபெற்றிருக்கும். பிறப்புரிமையை விட்டுக் கொடுத்து, அற்ப நலத்தை யடைய ஒரு நாளும் இஷ்டம் ஏற்படாது.

ஜாதியின் வளர்ச்சியை ஒடுக்குதல்.

இனி, ஜன சமூகத்தின் தினசரி வாழ்வைக் கவனிப்போம். ஆண் பெண், குழந்தை ஆகிய எல்லாரின் நடத்தையும் சுய ஆட்சியில்லாத இதர ஆட்சியினால் தாழ்வடைந்தும் வலுவற்றும் இருப்பதைக் காண்கிறோம். இந்தியரில் சிறந்தவர்கள் அத்தகைய நிலைமையைக் கண்டு மிக்க மனவருத்தமடைகின்றனர். இவ்விடயமாய் கோபால கிருஷ்ண கோகலே என்ன சொல்லியிருக்கிறாரென்றால்:—

"தற்சமயமுள்ள ஆட்சி முறையினால் இந்திய ஜாதியார் ஒடுக்கப்பட்டுப் போகின்றனர். தாங்கள் தாழ்வான நிலைமையில் உள்ளவர்கள் என்ற எண்ணத்திலேயே ஜீவதசை முழுவதும் ஆழ்ந்து கிடக்கவேண்டியிருக்கிறது. இங்கிலாந்திலுள்ள பிரபல கல்விச் சாலைகளில்வாசிக்கும் ஆங்கில மாணவர்கள் தாங்கள் ஒரு நாளிலே பிரபல ராஜதந்திரியாகவும் கியாதி வாய்ந்த கப்பற்தலைவராகவும் புகழ்கொண்ட போர்வீரராகவும் ஆகலாமென்று கருதி அதற்கேற்றவாறு யோக்கியதை யடையும் எண்ணம் அங்கே பயிற்சி பெற இடம் இருக்கிறது. அம்மாதிரி இந்திய மாணவர்கள் கருதி அவ்வளவு உயர்ந்த யோக்கியதை பெறுவதற்கு இங்கே வழியில்லை. தற்சமயமுள்ள ஆட்சி முறையைப் பார்த்தாலோ இந்தியராகிய நாம் எவ்வளவு உயர் பதவி அடைய முடியுமோ அவ்வளவு உயர் பதவியை ஒருகாலும் அடைவதற்கில்லை. சுயஆட்சி பொருந்திய தேசத்தினருக்கு இருப்பது போன்ற உணர்ச்சியை நாம் அடைவதற்கு வழி கிடையாது. இந்தியருக்குள்ள நிர்வாக மேன்மையையும் ராணுவச் சிறப்பையும் ஒன்றுகூட்ட வழி செய்யாமலிருப்பதால் அவ்விசேஷமும் சிறப்பும் மங்கிப் போகின்றன. ஆயுள் முடிவு வரையில் நாங்கள் தண்ணீர் சுமப்பவர்களாகவும் விறகு வெட்டிகளாகவுமே ஒரே தன்மையில் இருக்கவேண்டும்."

இவ்வாறு அவர் கூறியிருக்க கனம் பூபேந்திர நாத் வஸு சொல்லியிருப்பதாவது:—

"அன்னிய தேசத்திலிருந்து தருவிக்கப்பட்டவர்களை அங்கமாகக்கொண்ட அதிகார வர்க்கத்தினரின் ஆட்சி நடை பெற்று வருகிறது. எல்லா அதிகாரங்களும் அவ்வர்க்கத்தின் கைக்குள் அடங்கிக் கிடக்கின்றன; எல்லாப் பொறுப்புகளையும் அவ்வர்க்கமே ஏற்றுக் கொள்ளுகின்றது; இவ்வாறிருப்பதினால், அந்த அதிகார வர்க்க ஆட்சியானது, இந்தியரின் தலையில் தாங்க முடியாத கடுஞ் சுமையாக இருக்கிறது. தவிர நமக்குள்ள சுய மதிப்பு என்ற உணர்ச்சியோ குன்றிவிடுகிறது."

முன்னம் லார்டு ஸாலிஸ்பரி சொல்லியிருப்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் விசேஷமாகும். அவர் சொல்லியிருப்பது யாதெனில்:—

"ஆளப்படும் ஜாதியினர் என்றும் ஆளும் ஜாதியினரென்றும் விபரீத வேற்றுமைகள் தோன்றிவிட்டால் எந்த கவர்ன்மெண்டும் சாசுவதமாக பத்திரமாய் இருக்க முடியாது. ஆகவே, இங்கிலாந்திலிருந்து இந்தியாவை ஆளுவதற்காகப் போகிறவர்களுக்கு அவ்விஷயத்தைத் தான் நான் மிகவும் வற்புறுத்திச் சொல்லவேண்டும். தவிர, தாம் ஆளும் ஜாதியினரென்றும் ஆகவே நமது நிலைமை உயர்ந்ததென்றும் நினைத்துக்கொண்டு அவர்கள் நடப்பார்களாயின், அவர்கள் இங்கிலாந்துக்கு விரோதிகளாவார்கள். அவர்கள்தான் இங்கிலாந்தின் ஆட்சியைச் சீர்குலைக்கக் கூடியவர்களாவர்."

மேலே சொல்லிய படியுள்ள ஆபத்தைப்பற்றி நான் வற்புறுத்தவேண்டியிருக்கிறது. ஏனென்றால் அத்தகைய ஆபத்தோ சில வருஷங்களாக அதிகரித்துவிட்டது. இந்திய ஜாதியினரை ஒடுக்கும் சுபாவமானது குழந்தைகளுக்குக் கல்விகற்பிப்பதிலிருந்தே ஆரம்பிக்கப்படுகிறது. எப்படி என்றால், பாடசாலைகளிலே ஆங்கில ஆசிரியருக்கும் இந்திய ஆசிரியர்களுக்கும் வித்தியாசம் காட்டப்படுகிறது. கலாசாலைகளிலும் அப்படியே. முதல்தரமான இந்திய ஆசிரியர்களுக்கு மேலாக மூன்றாந்தரமான அன்னியர்கள் ஆசிரியராக நியமிக்கப்படுவதை மாணவர்கள் அறிந்து வருகின்றனர். ஒரு கலாசாலையின் தலைவர் அன்னியராகவே இருக்க வேண்டுமாம். இந்திய தேச சரித்திரத்தைக் காட்டிலும் அன்னிய தேச சரித்திரம் மிகவும் அவசியமாம். பாடசாலைகளிலாகட்டும், கலாசாலைகளிலாகட்டும் எல்லா இனங்களிலும் அன்னியரே மேன்மையானவர்களென்று பாராட்டப்படுவதைப் பலரும் அறிவார்கள். கல்வி விஷயமான மேற்பார்வையை கல்வியிலாகா அதிகாரிகள் வகித்து வருகின்றனர். அன்னிய தேச முறைப்படியே இங்கு கல்வி போதிக்கப்படுகிறது. அக்கல்வியின் பயனால் இந்தியருக்கு நன்மை யுண்டாகவில்லை. அத்தகைய கல்வியைப் பெறுவதனால் இந்தியர்கள் தேசாபிமானமுள்ள பிரஜைகளாக முடியாமல், அடங்கி நடக்கும் ஊழியர்களாக ஆகவேண்டியிருக்கிறது. மாணவர்களிடம் உயர்தரமான உணர்ச்சி, நெஞ்சுறுதி, சுயமதிப்பு ஆகிய குணங்கள் காணப்படின், அவைகளுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. இந்திய மாணவர்களுக்கு இந்தியாவைப்பற்றிப் பெருமை

யான உணர்ச்சி, தேசாபிமானம், உன்னத லட்சியம் இவை உண்டாயின், அவைகள் ஆத்திரக்கிடமானவைகளாம். ஆகையால் இந்தியருக்குரிய லட்சியங்களைக்காட்டிலும் ஆங்கில லட்சியங்களே மேன்பாடுடையன வெனவும் மதிக்கப்படுகின்றன. அன்னிய தேசத்தின் ஆட்சியே மேன்மையானதென்றும், தங்களுடைய காரியங்களைத் தாங்களே நிர்வகித்து நடத்திக்கொள்வதில் இந்தியருக்குத் திறமையில்லையென்றும், அடிக்கடி மாணவர்களுக்குச் சொல்லப்படுகிறது. இம்மாதிரி மாணவர்கள் பயிற்சி செய்விக்கப்படும்பொழுது, அவர்களுடைய கிரமமான லட்சியங்கள் ஈடேற முடியாமற் போகவே, அவர்கள் சுயநலமுள்ளவர்களாகவும் இச்சகம் பேசுவோராகவும் பொது நன்மையைக் கவனிக்காதவர்களாயும் ஆய்விடுவதில் ஏதேனும் ஆச்சரியம் உண்டோ?

இந்தியரின் உரிமைகள்.

இப்பொழுதுள்ள ஆட்சி நல்லதா அல்லது கெட்டதா என்பது கேள்வியல்ல. இங்கிலாந்திலே ஆங்கிலேயர் எவ்வளவு திறமையாய் இருக்கின்றனரோ அதைவிடப் பன்மடங்கு ஜெர்மனியிலே ஜெர்மானியர் திறமையுடன் இருக்கின்றனர். ஆங்கிலேயரை விட ஜெர்மானியருக்கு நல்ல உணவு உண்டு; போகங்களும் அப்படியே. ஆகவே இங்கிலாந்தில் எல்லா விதமான உயர் பதவிகளையும் ஜெர்மானியர் வகித்து வரவேண்டுமென்று எவராவது இஷ்டப்படுவாரா? ஏன் இஷ்டப்படமாட்டார்? நியாயமான சுயமதிப்பும் கௌரவமும் அன்னியரின் ஆதிக்கத்தைக்கண்டு சகிக்கமுடியுமோ? அன்னியரின் ஆதிக்கத்தைசகிக்கமுடியாதென்று, யுத்த ஆரம்பகாலத்திலே மிஸ்டர் ஆஸ்குவித் சொல்லியிருக்கிறார் அப்படியிருக்க, இந்தியாவில் மட்டும் அன்னியர் ஆதிக்கம் பெற்றிருக்க வேண்டுமென்பது தகுந்த முறைமையோ? பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்தியாவுக்கு சேர்ந்திருக்கும் மிகவும் பெரிய தீமையென்ன? சுயமான தீர்மானங்கொண்டு காரியங்களை நடத்தவேண்டுமென்ற சுபாவம் இந்தியருக்கு இல்லாமற் போகும்படி யிருப்பதுதான். இந்தியருக்குரிய உடுப்பு, இந்தியருக்குரிய உணவு, இந்தியருக்குரிய பழக்க வழக்கங்கள் ஆகிய யாவும் இரண்டாந்தரமானவைகளாகவே மதிக்கப்படுகின்றன; இந்தியரின் சுய பாஷையையும் சுய கிரந்தங்களையும் கொண்டு ஒருவர் கல்வி கற்றவராக ஆக முடியவில்லை. தங்களுடைய தேசத்தில் தாங்களே ஆட்சி நடத்தவேண்டுமென்று இந்தியர் கேட்க முடியாமல், தங்களுடைய தேச ஆட்சியிலே தங்களுக்கு அதிகமான பங்கு இருக்கவேண்டுமென்றுதான் இந்தியர் கேட்கும்படியாயிருக்கிறது. தங்களுடைய தேசத்தில் இந்தியருக்கு ஏதேனும் சில சௌகரியங்கள் கிடைப்பின், அதைக் கண்டு இந்தியர் நன்றி பாராட்டும்படியிருக்கிறது. இந்தியருக்கு இவ்வளவுதான் சௌகரியம் கிடைக்குமென்று பிரிட்டன் சொல்லும்படி யிருக்கிறது. இவ்வாறெல்லாம் இருப்பது தப்பாகும். இவையெல்லாம் தலைகீழ்ப் பாடமாகவே யிருக்கிறது. ஆயினும், இந்தியரோ தற்சமயம் கண் விழித்தெழுந்து தங்களுடைய நிலைமையை உணர்ந்து கொள்ளத்

தலைப்பட்டிருக்கின்றனர். தம்முடைய தேசத்தைத் தாமே நிர்வகிக்கவும் தம்முடைய தேசத்தில் தமக்கு சுதந்திரம் இருக்கவும் தமக்கு உரிமையுண்டென்பதை இந்தியர் உணர்ந்து கொள்ளுகின்றனர். தனது உரிமையைத் தமக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்பதை நான் போதித்து வந்ததினால் தான் இங்குள்ள ஆங்கிலேயர் என்னைப்பற்றித் தப்பெண்ணங்கொண்டு என்னை ராஜத்துவேஷி என்கின்றனர். இதை நான் சொல்லியதனால்தான், இப்பொழுது காங்கிரஸ் மகாசபையில் அக்கிராசனமும் வகிக்கிறேன்.

இவ்வாறு நான் சொல்வது அழுத்தமாயிருக்கலாம். ஏனெனில் இந்தியாவில் உண்மையான விஷயம் எடுத்துச் சொல்லப்படுவதில்லை. தங்களுடைய தேசத்தை தாங்களே யாளுவதற்கு ஒவ்வொரு தேசத்தினருக்கும் உரிமையுண்டென்பதற்காகவே நேசக் கட்சியார் போர்புரிந்து வருகின்றனர். அந்த சுதந்திரத்தை அடைவது தான் ஜன நாயகமாகும். இதுதான் காலத்தின் போக்குமாகும். இந்தப்படிக்கு அத்தகைய சுதந்திர உரிமை கிடைத்துவிடும்பொழுது, இந்தியாவுக்கும் கிரேட்பிரிட்டனுக்கும் உள்ள சம்பந்தமோ பரஸ்பர அபிமானத்தினாலும் ஆதரவினாலும் வலிமைபெறும். அன்னியருக்குக் கட்டுப்பட்டிருத்தலாகிய பாரமும் நழுவிப்போம். அப்பொழுது ஆங்கிலேயரும் இந்தியரும் பரஸ்பர அவநம்பிக்கையும் அப்பிரியமும் இல்லாமல் கைகோர்த்து சகோதரர் போல உழைத்து வருவார்கள். அத்தகைய கட்டுப்பாட்டினால், ஏகாதிபத்தியம் இன்னும் பலமுள்ளதாகும்.

ஹோம்ரூலுக்கு இதர காரணங்கள்.

ஹோம்ரூல் வேண்டுமென்பதற்கு ஜீவாதாரமான காரணம் மேலே சொல்லப்பட்டது. இனி ஹோம் ரூல் கேட்பதற்கு மற்றுமுள்ள காரணம் என்ன? தற்சமயமுள்ள ஆட்சியானது அவ்வளவு முக்கியமல்லாத இனங்களிலும், பிரிட்டிஷாரின் சொத்துசுதந்திர இனங்களிலும் திறமையாக இருக்கையில், இந்தியரின் சுகவாழ்வு, சௌகரியம் ஆகிய இவை சம்பந்தப்பட்ட முக்கியமான இனங்களிலோ திறமையற்று இருக்கிறது. இத்தேசத்திலே தபால், தந்தி, ரயில்வே, ரஸ்தா முதலியவைகளைக் கண்டு இவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதேயென்று, அன்னியர் மூக்கில் கைவைத்து ஆச்சரியப்படலாம், ஆனால், ஜனசமூகத்தின் வாழ்வையும், மாதம் 25 ரூபாய் சம்பளம் பெற்று காலந்தள்ள முடியாமல் தத்தளிக்கும் ஏராளமான குமாஸ்தாக்களையும், தினமொரு வேளையே சாப்பிட்டு வர முடிகிற வேலையாளரின் சமூகத்தையும், அவர்கள் வாசஞ் செய்யும் குடிசைகளையும், பார்த்தால் துக்கம் ஏற்படும். தேசத்தின் நிலைமையைப்பற்றி கல்வி கற்றவர்களுடன் அன்னியர் பேசி விஷயங்களை உணர்ந்து கொண்டால், கல்வி கற்றவர்களுக்கு உள்ள கசப்பைக் கண்டும் ஆச்சரியமேற்படும். இவ்விஷயத்தைப்பற்றி 1911ம் வருஷத்தில் கோபாலகிருஷ்ண கோகலே சொல்லியிருப்பதாவது:—

"தேச ஆட்சியானது அபிவிருத்திக்கு ஏற்றதாயிருக்கிறதா என்பதற்கு நான்கு பரீட்சைகள் சொல்லுகிறேன். முதலாவது பரீட்சையென்ன வென்

ருல், ஜன சமூகத்தினரின் அறிவின் அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்பதாகும். தபால் தந்தி ரயில்வே முதலியன ஏற்பட்டிருக்கின்றனவே, அவை அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகளல்லவோ என்றால், பிரிட்டிஷ் ஆட்சிக்கு அவை அவசியமாயிருக்கின்றன. ஆதலின், ஜனசமூக அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகளில் அவைகளை நான் சேர்க்கவில்லை. அறிவின் அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமுரிய ஏற்பாடுகள் என்னவென்றால், கல்வியபிவிருத்திக்காகவும், சுகாதார அபிவிருத்திக்காகவும் விவசாய அபிவிருத்திக்காகவும் வேண்டிய ஏற்பாடுகளேயாம். இனி, இரண்டாவது பரிட்சை என்னவென்றால், ஸ்தல சுயஆட்சி சபைகளிலே நமக்கு அதிகமாக செல்வாக்கு ஏற்படும்படி கவர்ன்மெண்டார் செய்ய வேண்டிய ஏற்பாடுகளே. மூன்றாவது பரிட்சையாதெனில், சட்டசபைகளிலே நமக்கு செல்வாக்கு ஏற்படும்படி என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன என்பதே. முடிவாக நாலாவது பரிட்சை என்னவென்றால், ராஜாங்க உத்தியோகங்களிலே இந்தியர் எவ்வளவு தூரம் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களென்பதாகும்.” இப்பரிட்சைகளின்படி பார்த்தால், தேச ஆட்சி அபிவிருத்திக்கு ஏற்றதாயில்லை என்பதை மிஸஸ் பெஸண்டு கணக்கு வழக்குகளைச் சொல்லி ஸ்தாபித்துவிட்டு அடியில் வருமாறு பேசுகிறார்:—

இவைகள் கோகலேயின் பரிட்சைகள். இந்நான்கு பரிட்சைகளையும் கொண்டு, ஆட்சி எவ்வளவு தூரம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்பதை இந்தியரே கண்டுகொள்ளலாம். ஆட்சி முறைதான் பிசகாயிருக்கிறதென்பதை நாம் முதல் கவனிக்கவேண்டும். பிறருக்கு ஜவாப்தாரியாய் இல்லாமல் அதிகாரத்தை வகித்து வரும்பொழுது, சிறந்த மனிதர்களும் சீர் கெட்டுப் போய் விடுகின்றனர். ஆட்சி முறையைத் திருத்த யாரேனும் முயலின், ராஜாங்கத்தை வேரறுத்து விடவே அவர்கள் முயலுகின்றனரென்று அதிகாரிகள் கூறுகின்றனர். தாங்களே ராஜாங்க அதிகாரிகளெனக் கருதி விடுகின்றனர். ஆகவே அதிகாரிகளைக் கண்டித்தால், அது ராஜத் துரோகமென அந்த அதிகாரிகள் மதிக்கின்றனர். அதிகாரிகளைப்பற்றி பெர்னர்ட் ஹௌடன் என்ற பென்ஷன் பெற்ற சிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தரே பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

“பலவருஷ அனுபோகத்தினால், ரிபோர்ட் முதலியன எழுதுவதிலும் ரிகார்டுகள் தயாரிப்பதிலும் அதிகாரி நிபுணராய் விடுகிறார். மேலான லட்சியங்களை அவர் இழந்து விடுகிறார்; அந்த லட்சியங்களின் சாயைதான் நிற்கின்றன. ஆட்சி யென்பது எதன்மேலும் உரையாமல் மிருதுவாக நடக்கச்செய்தால், அதுவே தான் தேசத்திற்குத் தான் செய்யக்கூடிய மிகவும் மேலான ஊழியமென அவர் கருதுகிறார். தனக்குள்ள காகிதங்களைக் கொண்டு, உலகம் எப்படி நடக்கிறதென்று அவர் பார்க்கிறாரேயொழிய உண்மையில் உலகம் எப்படி நடக்கிறதென்று அவர் அறிந்துகொள்கிறதில்லை. பொது ஜன அபிவிருத்தி சம்பந்தமாய் ஏதேனும்

புதிய யோசனைகள் ஏற்படும் பொழுது, அவைகளின்மேல் அபிப்பிராயம் கொடுக்கவேண்டுமென அவரைக்கேட்டால், அந்தயோசனைகளால் ஜனங்களின் வாழ்வும் க்ஷேமலாபமும் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடையுமென்பதைக் கவனியாமல் அந்த யோசனைகளால் தனது இனமாகிய அதிகார வர்க்கத்தினருக்கு எவ்வளவு அசௌகரியம் மேற்படுமென்பதும், தனது அதிகாரத்துக்கு என்ன பாதகம் உண்டாகுமென்பதுமே அவர் கவனிக்கிறார். தனது தீர்ப்பே தெய்வீகமான தீர்ப்பென்று அவர் தீர்மானித்து விடுவதால் ராஜாங்க விஷயத்தில் ஜனங்கள் தலையிடாதிருக்கும் வரையில் ஜனங்களின் நடவடிக்கைகளைக் கண்டு அவர் சகித்திருப்பார். அதிகாரிகளின் நடவடிக்கைகளின் மேல் ஜனங்கள் வாய் விட்டு குணதோஷஞ் சொன்னாலோ உடனே அவருக்குஅபாரமான கோபம்பொங்கிவிடுகிறது. இப்படியிருக்க, ஜனக்ஷேமம் சரிவர இல்லையென்றும்,ஆகவே சீர்திருத்தம் வேண்டுமென்றும் ஜனங்கள் சொல்லும்பொழுது, அந்த அதிகாரிக்கு எவ்வாறு பொறுமை இருக்கும்? அதிகாரியின் கருத்துப்படி அதிகாரிகளே தேசத்தை ஆளவேண்டுமாம், ஆட்சி விஷயமான மூடுமந்திரங்களெல்லாம் அவர்களுக்குத்தான் தெரியுமாம், ஆட்சியை ஓட்டும் ரகஸ்யம் அவர்களுக்குத்தான் தெரியுமாம், எனவே சீர்திருத்தம் வேண்டுமென்று ஜனங்கள் சொன்னால், பாடம் இதுவரை தான் இருக்கவேண்டுமென்று ஆசிரியரை மாணவர்கள் கட்டளையிடுவதுபோல, ஜனங்கள் நமக்கு கட்டளையிடுகிறார்களே யென்று அதிகாரிகள் கருதுவார்கள். ஜனங்கள் ஆண்மைத்தனமான சுதந்திரத்துடன் இருந்தால், அது ராஜவிசுவாசக் குறைவென்று அதிகாரிகள் கருதுவார்கள்."

உத்தியோகஸ்தரல்லாத ஆங்கிலோ இந்தியர்

இங்குள்ள உயர்தர அதிகாரிகளின் இனத்தைச் சேர்ந்தவர்களாய் சொற்ப ஜனத் தொகை கொண்டிருப்பினும் பெரும் சக்தி வாய்ந்த ஒரு வகுப்பு இருப்பதால், இந்தியாவின் ஆட்சி விஷயம் இன்னும் சிக்கலாக ஆய்விடுகிறது. இத்தேசத்திலே ஆங்கிலேயர் 1,22,919 பேர்தான் இருக்கின்றனர். உத்தியோகப் பற்றில்லாத அவர்கள் ராஜீய விஷயத்தில் சம்பந்தப்படுவதே கிடையாது. ஆயினும், ஜனங்களுக்கு நன்மை தரத்தக்க ஏதேனும் சீர் திருத்தம் தேசத்திலே உண்டாகுமென்று நம்பிக்கை பிறக்கும் பொழுது அவர்கள் ராஜீய விஷயத்தில் தலையிடுகின்றனர். அவர்களைப்பற்றி ஜான் ஸ்டூவர்ட் மில் பின்வருமாறு அபிப்பிராயப்பட்டார்:—"ஆளும்ஜாதியைச் சேர்ந்த மனிதர்கள் தங்களுடைய ஜாதியார் ஆளும் தேசத்திற்கு காலட்சேபஞ் செய்கிறதற்காகப் போவார்கள்; மற்றவர்களையெல்லாம் விட அவர்களைத்தான் நன்றாய் அடக்கி வைத்திருக்கவேண்டும்; கவர்ன்மெண்டுக்கு அவர்கள் தான் முக்கியமாகச் சிரமத்தை உண்டுபண்ணுவார்கள், தேசத்தை ஜயித்த ஜாதியாருக்குள்ள பெருமையில் அவர்களுக்குப் பங்குண்டு; ஜயித்தவர்

களுடைய இறுமாப்பு அவர்களுக்கு இருக்கும்; ஆகையால் அதிகாரத்தை வகிப்பதன் பொறுப்பு என்ன வென்றே உணராமல், ஸர்வாதிகாரமும் தங்களுடைய கையிலேயே இருப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டு அதற்கேற்றபடி நடப்பார்கள்"

இனி ஸர் ஜான் லாரன்ஸ் சொல்லியிருப்பதென்னவென்றால்:—

"இந்தியாவில் நியாயமான ஆட்சிசெலுத்துவது சில சந்தர்ப்பங்களில் மிகவும் கஷ்டமாய் விடுகிறது. தேச ஜனங்களுக்கு உதவியாய் இருக்கும்படி ஏதேனும் செய்யப்பட்டால், உடனே நம்மவர் கூச்சலிடுகின்றனர். அந்தச் சத்தம் இங்கிலாந்தில் கேட்டு, அவர்களுக்கு அங்கே ஆதரவு கிடைத்து விடுகின்றது. பேச்சைப்பற்றிய மட்டில் எல்லாரும் தர்மம் நியாயம் மிதம் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். அநுஷ்டானத்துக்குப்போனால் உடனே மனம் மாறி விடுகிறது"

லார்டு ரிப்பன் இந்தியாவில் ராஜப்பிரதிநிதியாய் இருந்து, அபிமானத்துடன் ஆட்சி நடத்திவருகையில் 1883 ம் வருஷத்திலே இல்பர்ட் மசோதாவைப்பற்றி அவர்கள் பிரமாதமான கொதிப்புக் காட்டினர். அதைப்போல இப்பொழுதும் அவர்கள் கொதிப்புக்கொண்டிருக்கின்றனர். சென்னை மெயில் பத்திரிகை, கல்கத்தா இங்கிலீஷமான் பத்திரிகை, அலகாபாத் பயோனீர் பத்திரிகை, லாகூர் ஸிவில் அண்டு மிலிட்டரி கெஜட் பத்திரிகை, ஆகிய பத்திரிகைகளின் தலைமையைக்கொண்டு, ஐரோப்பியரின் கிளர்ச்சி கிளம்பியிருக்கிறது. இங்கிலாந்திலுள்ள சில பத்திரிகைகளும் அக்கிளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்றன. இவ்வாறெல்லாம் ஐரோப்பியர் பக்கபலம் பெற்று, சீர்திருத்தங்களை ஆட்சேபிக்கின்றனர். சுதந்திரத்திற்காக நாம் செய்யும் கிளர்ச்சி அவர்களுக்கு ஆபத்தாகிறது. சட்ட பூர்வமாய் சீர்திருத்தங்கள் ஏற்படினும் அவற்றின் வேகத்தையும் விசேஷத்தையும் குறைத்துவிட அவர்கள் முயலுவார்கள். இம்மாதிரி மிண்டோ மார்லி திருத்தங்களின் பலன் கிட்டாது போகும்படி அவர்கள் செய்துவிட்டனர். ஆகவே காங்கிரஸ்-லீக் திருத்தங்கள் சட்ட பூர்வமாகக் கிடைக்கும்படியான காலம் வரும்பொழுதும், அவர்கள் ஆபத்திழைக்கப் பார்ப்பார்கள். ஆகவே நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். மிஸ்டர் ஹாப்ஸன் என்பவர் இந்த சீர்கேடான நிலைமை எப்படி இங்கிலாந்துக்கும் தீமை இழைக்கின்றதென்பதை நன்கு காட்டியிருக்கிறார். அதிகாரவர்க்கத்தினர் இந்நாட்டில் இருக்கும் காலம் எல்லாம் முற்போக்குக்கு தடைகல்லாக இருப்பதோடு ஜன்மதேசம் திரும்பிப்போனதும் இவ்விடத்தில் படிந்துள்ள அகம்பாவமும் அல்பத் தோத்ரமும் மாறாமல் தந்நாட்டிலும் அன்னியராக வாழ்கின்றனர்.

முதல் பரிட்சை எப்படி?

இனி ஸ்ரீமான் கோகலே சொல்லிய வண்ணம், நான்கு விதமான பரிட்சைகளில் முதல் பரிட்சை எப்படி என்று பார்ப்போம். கல்வி, சுகாதாரம், விவ

சாயம் ஆகிய இனங்கள் அபிவிருத்தி யாவதற்கு அதிகார வர்க்கத்தினர் என்ன செய்திருக்கின்றனர். உள்ள விஷயங்களை சுருக்கமாகச் சொல்லுகிறேன். அவைகளை மறுதளித்தல் முடியாத காரியம்.

கல்வி:—இத்தேசத்திலுள்ள குழந்தைகளிலே கல்வி கற்றுவரும் குழந்தைகள் நூற்றுக்கு சுமார் 3 பேராவர். ஆரம்பப்படிப்பை இலவசமாயும் கட்டாயமாகவும் செய்துவிடவேண்டுமென்று ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் ஸ்ரீமான் கோகலே ஒரு மசோதாவைப் பிரேரித்து, இப்பொழுது ஆறு வருஷ காலமாகி விட்டது. அதற்கப்பால் கல்விகற்கும் குழந்தைகளின் வீதாச்சாரம் நூற்றுக்கு சுமார் ஒன்றுக்குக் குறைவாகவேதான் உயர்ந்திருக்கிறது. 1914-15ம் வருஷத்திற்கு வித்தியா இலாகா வெளியிட்ட ரிபோர்ட்டின்படி, 6,333,668 பையன்களும் 1,128,363 பெண்களுமே அதாவது மொத்தத்தில் 7,462,031 குழந்தைகளே கல்வி கற்றிருக்கின்றனர். அத்தொகையில் 5,434,576 பேரோ லோயர் ப்ரைமரி படிபுக்குமேல் பெற்றவர்களல்ல தவிர 1,680,561 பேருக்கு வாசிக்கவும் தெரியாது. ஆகவே 2,027,455 குழந்தைகள்தான் தங்களுக்கு உபயோகமாகும்படியான கல்வி கற்று வருவாராவர். இதைவிட கல்வி விஷயத்தில் செலவிடப்படும் ரூபாயையும் வங்காள குடாக்கடலில் எறிந்துவிடுதல் நலமாயிருக்கும். இனி, பள்ளிக்கூடத்திற் சென்று வாசிக்கும்படியான வயதுடைய குழந்தைகளிலே நூற்றுக்கு சுமார் 20 பேரே 1915-ம் வருஷக்கடைசியில் கல்விகற்று வந்ததாகத் தெரியவருகிறது. பாடசாலைகளில் வாசிக்கும் குழந்தைகள் 45 லட்சம் பேராவென்று 1918-ம் வருஷத்திலே இந்திய கவர்ன்மெண்டார் மதிப்பிட்டிருக்கின்றனர். எனவே கல்வி யிலாகா ஏற்பட்ட 1854-ம் வருஷத்திலிருந்து 59 வருஷகாலத்தில் ஏற்பட்ட கல்வியபிவிருத்தி எவ்வளவென்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

கிரேட்பிரிட்டனிலே 1870-ம் வருஷத்தில் கல்விச் சட்டம் ஏற்படலாயிற்று. அப்பொழுது இங்கே கல்வி நிலைமை எவ்வாறிருந்ததோ அவ்வாறு தான் அங்கும் இருந்தது. கிரேட்பிரிட்டனிலே 1870-ம் வருஷத்திலிருந்து 1881-ம் வருஷத்திற்கு இடையில் ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் ஏற்பட்டது. ஆதலின், பாடசாலைகளில் வாசித்துவீடும் குழந்தைகளின் தொகையானது அந்த 12 வருஷகாலத்திற்குள் நூற்றுக்கு 43 வீதத்திலிருந்து நூற்றுக்கு நூறுவீதமாயிற்று. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் உள்ள ஜனத்தொகை 400லட்சம். அதில் தற்சமயம் 60லட்சம் குழந்தைகள் கல்விகற்றுவருகின்றனர் பாடசாலைக்குச் சென்று வாசிக்கும் பருவமுடைய குழந்தைகளிலே நூற்றுக்கு 28 பேர்வீதம் 1872-ம் வருஷத்திற்குமுன் ஜப்பான் தேசத்தில் கல்விகற்றுவந்தனர். அதற்கப்பால் 24 வருஷத்திற்குள், கல்விகற்றுவரும் குழந்தைகளின் தொகையானது நூற்றுக்கு 92 வீதம் உயர்ந்துவிட்டது. பரோடா சமஸ்தானத்திலே ஆரம்பக்கல்வி இலவசமாய் இருந்துவருகிறது; தவிர அநேகமாய் கட்டாயமாகவும் ஏற்பட்டுளது. அச் சமஸ்தானத்திலே பாடசாலைக்குச் சென்று படிப்புப் பெறும் பருவமடைந்த குழந்தைகள்

அனைவரும் அநேகமாய் படிப்புப் பெற்று வருகிறார்கள். திருவாங்கூரிலே மொத்தப் பையன்களில் நூற்றுக்கு 81 பேரும் பெண்களிலே 33 பேரும் ஆரம்பக்கல்வி யடைந்து வருகிறார்கள்; மைசூரிலே மொத்தப் பையன்களில் நூற்றுக்கு 45 வீதமும் பெண்களில் 9 பேருக்கும் கல்வி கிடைக்கிறது. பரோடா சமஸ்தானத்திலே ஒருகுழந்தைக்கு ஆரரையணு வீதம் கல்விச்செலவு பிரிட்டிஷ் இந்தியாவிலோ மூன்று அணுதான்.

இனி பிரிட்டிஷ் இந்தியாவிலே 1882ம் வருஷத்திலிருந்து 1907ம் வருஷத்திற்குள் கல்விச் செலவு முன்னையிலும் 57 லட்சம் ரூபாய் அதிகம். நிலத்தீர்வையோ முன்னையிலும் 8 கோடி அதிகம், ராணுவச்செலவோ 13 கோடி அதிகம். ரொக்க ரயில் செலவோ 15 கோடி அதிகம், 6 வருஷத்திற்கு முன் கோகலே சொல்லிய புள்ளி விபரங்கள் இவையாகும். இந்தியாவின் ஜனத்தொகையானது அதிகரிக்காமலே இருக்கும் பட்சத்தில் இப்பொழுது கல்வி அபிவிருத்தி ஏற்பட்டு வரும் ரீதிப்படி 115 வருஷத்திற்குப் பின் ஒவ்வொரு பையனுக்கும் கல்விகிடைக்கக்கூடு மென்றும், 665 வருஷத்திற்கு பின் ஒவ்வொருபெண்ணுக்கும் கல்விகிடைக்கு மென்றும் அவர் வஞ்சப் புகழ்ச்சியாக அப்பொழுது குறிப்பிட்டுச் சொன்னார். சகோதரப் பிரதிநிதிகளே ஹோம்ரூல் கிடைக்குமாயின் கல்வியபிவிருத்தியை வெகு சீக்கிரத்தில் உண்டு பண்ணி விடலாம். கல்வி விஷயத்திலே அதிகார வர்க்கத்தினர் திறமைக் குறைவாய் இருக்கின்றனரென்றும் நான் சொல்வேன்.

சுகாதாரமும் வைத்திய உதவியும்:—பிளேக் காலரா மலேரியா முதலிய விஷநோய்கள்பரவி வருவதனாலேயே,நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும்சுகாதாரம் குறைவாய் இருக்கிறதென்பது நன்கு புலப்படும்.இந்தியாவிலே சராசரி ஒவ்வொருமனிதனும் 23 வருஷமே ஜீவித்திருக்கும்படியிருக்கும் நிலைமைக்கு சுகாதாரக்குறைவு ஒரு காரணமாகும்.இங்கிலாந்தில் மனிதர்களின் சராசரிஜீவதசை 40 வருஷம்; நியூஜீலண்டில் 60 வருஷமாகும். பூர்விகவைத்திய முறைக்கு கவர்ன்மெண்டின் பணவுதவி கிடைக்காது போகவே, கிராமத்தார்களில் பலரும் ஆங்கிலவைத்தியத்தைத் தேடுவதனால், அன்னிய வைத்தியங்களுக்கு ஆதரவு ஏற்படுகிறது.கவர்ன்மெண்டால் நடத்தப்படும் பற்பல வைத்தியசாலைகளும், டாக்டர்களின் சிகிச்சையும், அன்னிய வைத்திய முறையாக இருக்கின்றன. ஆயுர்வேத யூனானிவைத்தியங்களாவது வைத்தியசாலைகளாவது கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப்படவில்லை. பூர்வீக வைத்தியமுறையினிடம் ஆங்கில டாக்டர்கள் யாரேனும் ஆதரவுகாட்டினால், அது அபகீர்த்தியான நடத்தையாம். நமது ஜனங்களின் வைத்தியத் தேவைகளை நமது கவர்ன்மெண்டார் தீர்த்து வைக்க முடியவில்லை. இப்படியிருந்தும், ஜனங்களிடமிருந்து வருவாரும் பணத்தை ஜனங்களுக்குப் பிரியமான வைத்திய முறையில் செலவிட கவர்ன்மெண்டார் தயாராயில்லை. ஹோம்ரூல் கிடைக்குமாயின், பூர்வீகவைத்திய முறையும் அன்னிய வைத்திய முறையும் பாரபட்சமின்றி நடத்தப்படும். பூர்வீக வைத்திய முறைகளைப் புறக்கணித்து விடுமுன், அதை

அதிகாரவர்க்கத்தினர் பரிசீலனை செய்து பார்க்க வழிதேடவேயில்லை இது அதிகாரவர்க்க ஆட்சியின் தவறாகும். எனவே, சுகாதாரத்தைத் தேடிக் கொடுப்பதிலும் வைத்திய வசதியைத் தேடிக் கொடுப்பதிலும், அதிகாரவர்க்கத்தினர் திறமைக்குறைவாய் இருக்கிறார்கள்.

விவசாய அபிவிருத்தி:—1911ம் வருஷத்தில் கணக்கெடுத்தபடி, இந்தியாவிலே விவசாயத்தை நம்பியிருப்போர் 2180 லட்சம் பேர்; அவர்கள் பரம ஏழைகளாயிருக்கின்றனரென்பது பிரசித்தம். விவசாயிகளின் கடன் சுமையானது எக்காலும் பெருகிக் கொண்டே போவதைப்பற்றி 30 வருஷத்துக்கு முன்னமேயே ஸர் வாச்சா சுட்டிக் காட்டியிருக்கிறார். விவசாயிகளின் கடன் சுமை அதிகரித்து வருகையில், நிலத் தீர்வையும் வளர்ந்து கொண்டே போகிறது. 25 வருஷத்திற்குள் நிலத்தீர்வையானது 8 கோடி முன்னையிலும் அதிகம். இதோடு, உப்புவரி, லோகல் செஸ் முதலிய பலவரிகளுண்டு; உப்புவரியானது ஏழைகளுக்குத் தான் அதிக பளுவாயிருக்கிறது. சென்ற வருஷத்திலோ உப்புவரியானது முன்னையிலும் 90 லட்சம் ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது. இவ்வாறெல்லாம் ஏழ்மை நிலைமை அதிகரித்துக் கொண்டே போக, தக்கபடி ஜனங்கள் ஆகாரம் சாப்பிடுவதற்கில்லை; அதனால் ஜனங்களுடைய ஜீவாதார நன்மை குறைந்து விடுகிறது; நோயை சமாளிக்க முடியவில்லை; ஆயுள் குறைந்து விடுகிறது; சிசு மரணம் பெருகி வருகிறது. 1905ம் வருஷத்திலே ஸ்ரீமான் கோகலே சொல்லியிருப்பதாவது:—

“ஸர் வில்லியம் ஹண்டர் சொல்லிய வண்ணம், நமது தேச ஜனங்களிலே 400 லட்சம் ஜனங்கள் தினம் ஒரு வேளையே சாப்பிட்டு காலந்தள்ளி வருகின்றனர். ஸர் சார்லஸ் எல்லியட் என்ற மற்றொருவர் சொல்லிய வண்ணம், இந்தியாவில் 700 லட்சம் ஜனங்களோ, ஒரு வருடத்திலே ஒரு வேளை கூட பசியாறச் சாப்பிட முடியவில்லை. எனவே இந்தியரின் ஏழ்மை நிலைமையை யோசித்துப்பார்த்தால் மனம் திடுக்கிடும். பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டு நூறுவருஷ காலமாகியும், அதன் பலன் இவ்வாறிருக்குமாயின் இந்திய ஜனங்கள் க்ஷேமலாபத்தை அபிவிருத்தி செய்து விட்டோமென பிரிட்டிஷார் பெருமை பாராட்டுவதற்கில்லை.”

இவ்விவரங்களை நாம் எடுத்துச் சொன்னால், “விவரங்கள் எங்களுக்குத் தெரியுமே, விவரங்களைக் காட்டி அல்லற்படுவானேன்” என்று சிலர் நம்மைக் கேட்கின்றனர். நாம் என்ன செய்யலாம்? இந்திய ஜனங்களுக்கோ பசி வயிற்றைத் தின்னுகிறது. தக்கபடி ஆகாரம் எடுத்துக் கொள்ளாததனால், ஜனங்களின் சரீரம் வாடியும், கை கால்கள் குச்சி போலும் இருப்பதைப் பார்க்க கண் பொறுக்காது.

விவசாயிகளுக்குள்ள குறைகளோ ஒன்று இரண்டல்ல, பலவாகும். ஒவ்வொரு வருஷமும் காங்கிரஸ் மகா சபையிலே அக்குறைகள் சுட்டிக் காட்டப் படுகின்றன. கிராமவாசிகளின் கஷ்டங்களை உணர்ந்து கொள்ளாமல், காடுகளின் சம்பந்தமான சட்டம் ஏற்பட்டிருப்பதனால், ஜனங்

களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. கிராமவாசிகளின் கால் நடைகள் மேய்வதற்கு மேய்ச்சல் நிலங்கள் குறைவு; நிலங்களைப் பண்படுத்துவதற்குற்ற தழை எரு கிடைப்பதில்லை. காடுகளில் தவறிப்போய் கால்நடைகள் புகுந்து விட்டால், உடனே அவைகளைப்பட்டியில் அடைத்து விடுகிறார்கள்; பணம் கொடுத்துத் தான் அக்கால் நடைகளை மீட்க வேண்டும். பிறருக்கும் விவசாய உபகரணங்கள் செய்வதற்கும், மரக்கட்டைகள் வேண்டுமளவு கிடைப்பதில்லை. நீரானது சரிவர வினியோகிக்கப்படுவதில்லை. இம்மாதிரி யெல்லாம் கிராமவாசிகளாகிய விவசாயிகளுக்குள்ள கஷ்டநஷ்டங்கள் யாவும் ஜில்லாக் கான்பரன்ஸுகளில் விவகரிக்கப்படுகின்றன. ஆயுதச் சட்டத்தின் விபரீத அமுலினால், ஜனங்களோ காட்டு மிருகங்களினாலும் முரட்டு மனிதர்களாலும் துன்பமடைகின்றனர். நீதிநிர்வாக அதிகாரம் இரண்டும் ஒரு அதிகாரியிடம் இருப்பதனால், தக்கபடி நியாயம் கிடைப்பதில்லை. தவிர, பணச் செலவும் காலமும் வீணாய்விடுகின்றன. கிராமவாசிகளைக் காட்டிலும் தாசில்தார் கலெக்டர் முதலியவர்களை அதிகமாகத் திருப்தி செய்விக்க கிராமாதிகாரிகள் கவலைப்படுகின்றனர். கிராமவாசிகளுக்கு கிராமாதிகாரிகள் ஜவாப்தாரிகளாக இல்லை. கட்சிப் பிரதி கட்சிகள் வளர்கின்றன. ஆதலினால் விவசாய விஷய மாகவும் அதிகாரவர்க்கத்தினர் திறமைக்குறைவாய் இருக்கின்றனர்.

பொருளாதார அபிவிருத்திக்கும் மார்க்கமில்லை.

வளம்பொருந்திய நாடுகள் அனைத்திலும், விவசாயிகள், தொழில் சாமர்த்தியமுள்ள மற்றவர்களோடு ஒத்து வாழ்ந்து, பரஸ்பரம் அனுகூலமாயிருந்து வருவதை நாம் கண்ணாரக் காண்கிறோம். அயர்லாந்தில் பிரிட்டிஷார் ஆக்ரமித்து அதன் கம்பளத் தொழிலை அழித்ததன் பலனாகவே, ஐரிஷ் ஜனங்கள் மிகுதியும் ஏழ்மைப்பட்டு பாதிப்பேர் ஊரூராய் வெளியேற ஆரம்பித்தனர். மிஞ்சி நின்றவர் வேறு வழியின்றி உழுது பயிரிடத் தலைப்பட்டனர். இந்தியாவிலும் இதே மாதிரிதான் நடந்திருக்கிறது. அயர்லாந்தைவிட இன்னும் மோசமென்று கூடச் சொல்லலாம், ஒரு குழி நிலமில்லாத ஜனங்கள் இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர் என்பது சர்க்கார் ரிக்கார்டுகளைப் புரட்டிப் பார்த்தால் தெள்ளெனப் புலப்படும். நிலங்களில் விதை விதைக்கும் போதும் அறுவடை யாக்கும் காலத்திலுமே விவசாயத் தொழிலாளிகளுக்கு ஜீவனத்துக்கு வேண்டியது எளிதிற் கிடைக்கின்றது. பாக்கி நாட்களில் தற்காலசாந்தியாய் பெருத்த வியாபார ஸ்தலங்களுக்குப் போக வேண்டி வருகிறது.

சிறு தொழில்களின் அழிவு.

பழைய காலக்கிராம வாழ்க்கைப்பற்றி ப்ரொபஸர் ராதா கமல முக்கர்ஜி ஓரிடத்தில் சொல்லியிருப்பதாவது:—

"இன்றைக்கும் குக்கிராம வாசிகள் இருப்பதைக் கொண்டே அனேகமாய் திருப்தி யடைந்து வருகிறார்கள்; கிராமத்தாருக்குத் தேவையான ஆகா

ராதிகளை கிராமத்திலேயே பயிர் செய்து விடுகிறார்கள். கம்மாளன் கலப்பையைத் தயாரித்துக் கொடுக்கிறான்; வீட்டுக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களும் எளிதில் கிடைத்து வருகின்றன; கிரயம் கொடுத்து எதையும் வாங்க வேண்டிய அவசியம் கிடையாது; முதலாளிகளும் தொழிலாளிகளும் பரஸ்பரம் உபகாரமாயிருந்து காலத்தைக் கழிக்கிறார்கள்; குயவன் சட்டிப்பானையும் கைக்கோளர் துணிமணிகளும், வாணியர் எண்ணெயும் கொடுத்து விடுகிறார்கள். சிலருள்ளவர் பல வகைப்பட்ட தொழிலாளிகளுக்கும் சம்பிரதாயப்படி ஓரளவு நெல்லோ தானியமோ கொடுத்து விடுவது வழக்கம். எல்லா போகங்களிலும் பொதுவாய் பணத்தைக் கொடுக்கல் வாங்கல் அவ்வளவாகக் கிடையாது மொத்தத்தில் பணத்தை ஓர் ஆஸ்தியாய் பாவிப் பார்களேயன்றி கொள்வினை கொடுப்பினைக்கு அதை அவசியமாகக் கருதுவதில்லை, பணம் நிரம்பக் கிடைத்தால் அதை நகைகளில் போட்டு அல்லது கையில் வைத்துக் கொண்டு தான் இருப்பார்கள்."

இது கொஞ்ச காலத்துக்கு முன் வரையில் நடந்து வந்த காரியம், இப்போது நிலைமை மாறிக்கொண்டே வருகிறது. தரித்திரம் மேலிட்டு கிராமத்திலிருந்து பட்டணத்துக்குக் கிளம்பி விடுகிறார்கள்; கிராமத்தில் அனுபவித்துவந்த சுகம் பட்டணங்களில் கிடைப்பதில்லை; அண்டை வீட்டுக்காரனிடத்தில் நம்பிக்கை வைத்து நடப்பது பட்டணத்திற்கு வந்ததும் பறந்துபோய் விடுகிறது; பட்டணத்தை யடுத்துள்ள கிராமங்களுக்கும் பக்கா குக் கிராமங்களுக்கும் உள்ள வித்தியாசம் நேரில் போய்ப் பார்த்தால் தான் நன்கு விளங்கும். இம்மாதிரி புத்தியும் கெட்டு, பொருளாதார அபிவிருத்தியும் இல்லாமல் போவதைத் தடுக்க ஒரே வழிதான் உண்டு. அதாவது பஞ்சாயத்து சபைகள் முதலியவற்றைப் பழையபடி ஸ்தாபித்து கிராம வாழ்வில் யாருக்கும் ஆசை பிறக்கும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் கிராமத் தொழில்கள் திரும்பவும் விருத்திக்கு வரும். அப்பால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாய் மற்ற சௌகரியங்களைத்தும் செய்து கொள்வதும் சாத்தியமாகும். 'கூட்டுறவுச் சங்கங்களும்பஞ்சாயத்துச்சபைகளும்' என்ற மதுடமிட்டுமிஸ்டர் வி. பி. ராமஸ்வாமி அய்யர் எழுதியிருக்கும் ஒரு துண்டுப் பிரசுரத்தில் கண்டுள்ள இரண்டோர் விஷயங்களை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல்பொருந்தும்:—

"குக்கிராமத்தார் பட்டண வாசத்தை நாடிச் செல்வதைத் தடுக்க ஒரே வழிதான் உண்டு; கிராமத் தொழில்கள் மறுபடியும் கிளைத்து முற்போக்குக்கான சாதனங்கள் உண்டாவது சாத்தியமாகும்படி, கிராமங்கள் தோறும் பஞ்சாயத்துச்சபைகளை ஒழுங்காய் அமைத்து கூட்டுறவுச்சங்கங்களையும் ஸ்தாபிக்கவேண்டும். கட்டுப்பாடான கூட்டுறவு முயற்சி உண்டானால் நாளடைவில் தொழிலபிவிருத்தியும் தானுக்கே ஏற்பட்டு விடும். கிராமங்களில் விவசாயத் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது முதல் சிறு தொழில்களும் அழியத் தலைப்பட்டன. பிரான்ஸ் முதலான தேசங்களில் விவசாயமே சிறு தொழில்களுக்கு ஆதாரமாயிருந்து வருகிறது. அற்ப

விவசாயிகள் இதர தொழில்களைக் கொண்டும் ஜீவனோபாயம் செய்து வருகிறார்கள். கிராமாந்தர வாசத்தின் அழிவானது ராஜீய விஷயத்தில் மட்டுமல்ல, தொழில் பொருளாதாரம் இவைகளைக்கூட மிகுதியும் பாதிக்கின்றது. ஐரோப்பாவில் பட்டணவாசிகள் அடிக்கடி கிராமங்களுக்குப்போய் சுகம் தேடுகிறார்கள். இந்தியாவிலோ இதற்கு நேர் விரோதமாய் நடக்கிறது. இத்தேசத்தில் சமூகவாழ்வுக்கேற்ற உறைவிடம் கிராமாந்தரங்கள்தான். ஒரு ஊரிடத்திலேயே செல்வம் குவிந்துகிடப்பதை இந்தியாவில் சகஜமாய்க் காண முடியாது. பெருத்த முதலாளிகளே தொழிற்சாலைகளை யமைத்து நடத்தமுடியுமாதலால், இந்தியாவில் பிரமாதமான தொழிற்சாலைகளை அதிகமாய்க் காணோம்"

பட்டண வாசத்தின் ஊழல்களை அனுபவத்தில் கண்ட ஆங்கிலேயரே இத்தகைய மாறுதல்களுக்கு ஆசைப்படுகிறபோது இந்தியர் இது விஷயத்தில் அரை நிமிஷங்கூட சிரத்தைக்குறைவாயிருத்தல் கூடாது.

இந்தியரின் நித்திய தரித்திரம்.

இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் ஸ்ரீமான் கோகலே உபந்யசித்தபோது பின் வருமாறு சொன்னார்:—

"உங்களுடைய சராசரி வருஷ வருமானம் தலைக்கு 42 பவுன் என்று மதிப்பிடப்படுகிறது; சர்க்கார் தஸ்தாவேஜிகளின்படி இந்தியரின் சராசரி வரும்படி தலைக்கு 2 பவுன் வீதமே ஆகிறது. 1 பவுன்தான் என்றும் சிலர் வாதிக்கிறார்கள். இது நிற்க, உங்களில் ஒவ்வொருவரும் தலைக்கு 13 பவுன் வீதம் சாமான்கள் இறக்குமதி செய்கிறீர்கள்; இந்தியரோ தலைக்கு 5 ஷில்லிங் அதாவது 3¾ ரூபாய்க்குக்கூட சாமான்கள் தருவிக்க வழியில்லை. தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கிகளில், மொத்தத்தில் 14 கோடி 80 லட்சம் நீங்கள் சேர்த்து வைத்த பணம் அடைபட்டிருக்கிறது; 7 மடங்கு ஜனத்தொகை அதிகமாகக்கொண்ட இந்தியாவிலோ 70 லட்சம் பவுன் தான் சேவிங்ஸ் பாங்கிகளில் மொத்தம் போடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் 100க்கு 80 பேர் வீதம் விவசாயத்தையே நம்பி ஜீவிக்கிறார்கள்; விவசாயமும் நாளுக்குநாள் க்ஷீணித்துக்கொண்டே வருகிறது. இந்திய விவசாயிகளில் பெரும்பாலார் வெகு ஏழைகள். அவர்கள் அநேகமாய்க் கடனில் மூழ்கிக்கிடக்கிறார்கள். இந்நிலைமையில் நிலத்தை விருத்திசெய்ய அவர்கள் பணத்துக்கு எங்கே போவது? பூமியின் செழிப்பு இதன் பலனாக குறைந்துகொண்டே வருகிறது, இந்தியாவைவிட இங்கிலாந்தில் நிலங்களின் செழிப்பு நான்கு மடங்கதிகம்.

எனவே ஸ்ரீமான் கோகலே சொல்லியமுதல் பரீக்ஷைப்படி பார்த்தால் அதிகாரி வர்க்கத்தினரின் ஆட்சி திறமையாயில்லையென்பது நன்றாய் விளங்கக்கூடும்.

விட்டேப்பார்ப்பதே உசிதம்.

பொதுவாகச்சொல்லின் நமது குறைகள் என்னவென்றால், கல்வி, சுகாதாரம்,க்ஷேமலாபம் இவைகளை விருத்திசெய்ய, தற்போதையஆட்சிமுறை பலனற்றதாய்ப்போய்விட்டது. ஜப்பான் முதலிய தேசங்கள் சுய அபிவிருத்தியை எவ்வாறு நாடி உழைத்தனவோ அதேமாதிரி இந்தியரும் தங்கள் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவர சமயம் கொடுக்கப்படவேண்டாமா? இப்படிக் கேட்பது அக்கிரமமாகுமா? படித்தஇந்தியர் பாமரர்களின்சார்பாய்ப்பேச அருகரல்லரென்றும், படித்த வகுப்பினர் சுய நலங்கருதியே எதையும் செய்கிறார்களென்றும், ஆங்கிலோ இந்தியர் சொல்லித்திரிவதற்கு ஆதாரமே கிடையாது. வேண்டுமானால், இதுவரை நடந்திருக்கும் காங்கிரஸ் நடவடிக்கைகளை அவர்கள் புரட்டிப்பார்க்கட்டும். வேறு வழியில்லாததால், படித்த இந்தியர் தங்கள் தேசத்தின் தரித்திரத்தை சதாகாலமும் பார்த்து சகித்துக்கொண்டு வருகிறார்கள். ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் தமது மறுப்புரையில் இது விஷயமாய்க் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இந்திய உத்தியோகஸ்தர்களையும் படித்த இந்தியரையும் விட ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களே உண்மையான ஜனப்பிரதிநிதிகள் என்று தாறுமாறாகச்சொல்லிக் கொள்வதன் அர்த்தமென்ன? இந்தியாவுக்குவரும் ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்கு இந்தியப் பாஷைகளை ஒழுங்காய்ப் படித்தறிந்துபேச யோக்கியதை கிடையாதென்பது ஒருபுறமிருக்க, அவர்களுடைய பழக்க வழக்கங்களும் நினைக்கும் தோரணையும் முற்றிலும் மாறுபட்டனவாயிருக்கின்றன. ஆயிரத்தில் ஒருவரே இவற்றையெல்லாம் கடந்து அபார யோக்கியதை படைத்தவர்களாயிருக்கிறார்கள். இது நிற்க, படித்த இந்தியர்களோ ஜனங்களின் மதாச்சாரத்தில் தினப்படி ஈடுபட்டு மற்றவர் பால் அறிவும் அனுதாபமும் நிரம்பப் படைத்திருக்கின்றனர். தவிர, 'பணமே பிரதானம்' என்ற கொள்கையை மற்ற தேசத்தாரைப்போல் அனுசரிப்பவரும் அல்லர்."

யோக்கியதைக் குறைவினால் தான் அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சியானது கோரியபலனைத் தரவில்லையென்பது கிடையாது; எப்படியெனில் பல பிரிட்டிஷ் வியாபாரிகள் கனவிலும் நினைத்திருக்க முடியாத நன்மைகளைத் தங்களுக்குச் செய்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். அதிகாரி வர்க்கத்தினரின் போக்கு எங்கும் ஒரே மாதிரிதான். ருஷ்யாவில் அதிகாரிவர்க்கத்தினர் ஜனங்களின் க்ஷேமத்தில் என்றைக்காவது அக்கரை கொண்டதுண்டா? வரிகள் ஒழுங்காய் வசூலிக்கப்படுகின்றனவா என்பதே அவர்களுடைய முக்கியமான நோக்கம். ஆகையால் அத்தகையோரின் ஆட்சி முறையை நாம் கண்டிக்கிறோமேயன்றி அம்முறையில் ஈடுபட்டுழலும் குறித்த சிலமனிதரை நாம் வெறுக்கிறோம் இல்லை. அதிகாரி வர்க்கத்தினர் இந்தியராயிருந்தாலும் அதை விருப்புடன் ஏற்கமாட்டோம். சிவில் உத்தியோகஸ்தர்கள் சுயேச்சாபத்தியம் செலுத்துவதை அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

கோகலேயின் இதர பரீக்ஷைகள்.

அதிகார வர்க்கத்தினரின் ஆட்சி முறை மற்ற விஷயங்களிலாவது பலன் கொடுத்திருக்கிறதா வென்று பார்ப்போம். லார்டு ரிப்பன், லார்டு மேயோ இவர்கள் காலத்தில் ஸ்தல சுய ஆட்சியைநோக்கி ஓரளவு பிரயத்தனங்கள் நடந்தன. 'சுய ஆட்சிக்கான விதைகளை' லார்டு ரிப்பன் கூடியவரையில் ஊன்றிப் பார்த்தார். ஆயினும் என்ன? 1917-ம் வருஷத்தில்தான் பரீட்சார்த்தமாக வங்காளத்தில் பொறுக்கி யெடுத்த சில விஷயங்களில் அத்தகைய ஆட்சியை விருத்தி செய்ய ஏற்பாடாயிற்று. அதிகாரப் பிரிவினை கமிஷனின் ரிபோர்ட்டு 1909-ம் வருஷத்திலேயே வெளியாயினும் உத்தியோகஸ்தரல்லாதசேர்மன்களை இன்றைக்கும் காணுவது அருமையாயிருக்கிறது. இதன் மேல், அதிகாரி வர்க்கத்தினரின் ஆட்சித் திறமையைச் சொல்லவும்வேண்டுமோ?

சட்ட சபையில் செல்வாக்குண்டா?

சட்ட சபைகளில் இந்தியருக்குச் செல்வாக்குண்டா வென்று பார்த்தால் அதுவுமில்லை. சென்னைச் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய மெம்பர்கள் நடிக்கும் நடனத்தை 'ஒருவிநோதக்கூத்து' என்று சமீபத்தில்தான் ஒரு மெம்பர் சொல்லிக்காட்டினார். ராஜப்பிரதிநிதியின் சட்டசபையோ 'மதிப்புள்ள ஒரு தருக்க சபை' என்று சில மாதங்களுக்கு முன் சொல்லப்பட்டது ஞாபகமிருக்கலாம். இந்தியராயுள்ள ஜனப்பிரதிநிதிகள் சட்டசபைகளில் கொண்டுவரும் தீர்மானங்களை ஒரு ஜாப்தா போட்டுப் பார்த்து அவற்றில் எத்தனை தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன வென்பதைக் கவனித்தால் நமது சட்ட சபைகளுக்கு மேலே சொன்ன நாம கரணங்கள் தகுதியானவை யென்றே காணப்படும். லார்டு மிண்டோவும் லார்டு மார்லியும் முறையே ராஜப்பிரதிநிதியும் இந்தியா மந்திரியுமா யிருந்தபோது, இந்திய ராஜீய சபைகளை ஓரளவு விசாலித்து பார்லிமெண்ட் சபைகளின் பக்ஷ பலத்தைச் சம்பாதித்துக்கொடுத்தும், அவர்கள் எதிர்பார்த்தபடி அதிகாரவர்க்கத்தினர் அனுபவத்தில் கொண்டுவர பிரயத்தனங்களே செய்யவில்லை. இதனால் என்ன விளங்குகிற தென்பது சொல்லாமலே தெரியும்

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மெஜாரிடி ரிபோர்ட்டில் கண்டுள்ள சிபார்சுகளை அப்படியே அங்கீகரிக்க, அதிகாரிவர்க்கத்தினருக்கே மனம் பிடிக்கவில்லை யென்றால், அச் சிபார்சுகளின் யோக்கியதையைச் சொல்லத் தேவையில்லை. ராஜசேவையில் இந்தியரை புறக்கணித்துவிட்டு ஐரோப்பியரின் ஆதிக்கத்தையே நிலைநிறுத்த வேண்டுமென்று கமிஷனர்கள் சிபார்சு செய்கிறார்களே, இதென்ன விபரீதம்?

ஸ்ரீமான் கோகலே அதிகாரிவர்க்கத்தினரைக் கண்டித்த மற்றோர் முறையை ஆராய்வோம். நிர்வாகச் செலவுகள் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகின்றன. திருஷ்டாந்தமாக இவ்வருஷத்திய வருமான மதிப்புத்திட்டம் 8 கோடியே 61 லட்சத்து சொச்சம் பவுனாயிருக்க, செலவுத்

திட்டமோ 8 கோடியே 55 லட்சத்துக்கு மேலாகிறது. தேசத்தின் வரும்படியில் பாதி ராணுவத்துக்கும், சிவில் உத்தியோகஸ்தர்களின் சம்பள இனத்துக்கும் மற்றும் சில்லரைச் செலவுகளுக்கும் சரியாய்ப் போய்விடுகிறது. சுய ஆட்சி கிடைத்தாலன்றி நிர்வாகச் செலவுகளை ஒடுக்கப்பார்ப்பது வீண் பிரயத்தனமாகும்.

சுய ஆட்சி வேண்டுமென்று நாம் கேட்பதற்கு மற்றும் பல சில்லரைக் காரணங்கள் உண்டு. என்றாலும் அவற்றைப் புறக்கணிப்பது பெரும்பிழையாகும். தேச ஜனங்கள் ஏற்கெனவே கடன்பட்டு ஏழ்மைத்தனத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள்; அதன் பலனாக இந்திய மக்களின் ஆயுள்காலம் குன்றிப் போவதோடு மரணவிகிதங்களும் வியாதிஸ்தர்களின் தொகையும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. நிலங்களின் செழிப்பு கவனிப்பாரில்லாது குறைந்துகொண்டே வருகிறது. இந்தியாவில் பஞ்சப் புரட்சி ஏற்படாதிருக்கவேண்டுமே யென்று சரித்திரம் வாசிப்போர் பிரார்த்திக்கும்படியாயிருக்கிறது. இவ்வளவு தூரம் திரவிய நிலைமை கேவலப்பட்டிருப்பதற்கு அன்னிய ஆட்சியின் ஒற்றுமை யுணர்ச்சியின்மை முக்கியமான காரணங்களிலொன்றாகும். தேசத்தின் தேவைகளை அனுசரித்து அன்னியர் ஆட்சிசெலுத்துவாரென்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. மேனாட்டுக்கொத்தஆட்சிமுறை மேநாடுகளிலும் பலிக்கும் என்று சொல்லி அதை நிர்ப்பந்தமாய் ஒரு ஜாதி மேல் தூக்கிப்போட்டால் அவர்கள் என்றும் கண்டிராத அதிகாரிவர்க்கத்தினரின் செயல்களைக் கண்டு பிரமிக்க கேட்பானேன்?

உயர்ந்த நாகரிகம் படைத்துள்ள ஒரு ஜாதியார்மேல், முற்றிலும் பொருந்தாத ஓர் ஆட்சி முறையை நிர்ப்பந்தப்படுத்தினால் அது என்றைக்கும் பலன் தராது. ஏழைகள் கஷ்டத்தை சகிக்கமாட்டாமலே அத்துமீறிக் கலகம் செய்வார்கள்", என்று சித்தாந்தம் செய்திருக்கிறார்கள். நிலங்களின் வளமை குறைந்து, கிராமத்தொழில்கள் அழிந்து, லட்சோப லக்ஷக்கணக்கான ஜனங்கள் இங்கு தினப்படி கஷ்டப்பட்டு வருவதைத்தடுக்க நாம் சுயஆட்சி கேட்கிறோம்.

ஆட்சி முறையில் திருத்தங்கள்.

தற்போதைய ஆட்சி முறையில் திருத்தங்கள் செய்வதென்றால் அவற்றை மூன்று பாகங்களாகப் பிரிக்கவேண்டும். 1. இந்தியா கவர்ன்மெண்டு 2. மாகாண கவர்ன்மெண்டுகள் 3. ஸ்தல சுய ஆட்சிச் சபைகள். ஸ்தல சுய ஆட்சியே எந்தத் திருத்தத்திற்கும் அஸ்திவாரமானதையால் அதை முதலாக எடுத்துக்கொள்ளுவோம். சென்ற வருஷத்து காங்கிரஸ் லீக் திட்டத்தை அப்படியே அனுசரித்து நடக்காதலன்றி ஸ்தல சுய ஆட்சி என்பது வெறும் பேச்சுத்தான். அவ்விரு மாசபைகளின் கோரிக்கைகளும் வெகு நிதானமானவையாதலால் அவற்றிலிருந்து ஒன்றைக்கூட எடுத்துக்குறைக்க முடியாது. லார்டு ரிப்பன் காலமுதல் ஸ்தல சுயஆட்சிப் பயிற்சி இன்னும் நடந்துதான் வருகிறது. சட்ட சபைகளில் செல்வாக்கில்லாத ஜனப்பிரதிநிதிகளும், நிர்வாக சபைகளில் பிரிட்டிஷ் அதிகாரி வர்க்கத்தினரால் ஆட்டிவைக்கப்படும் ஒரு) இந்தியரும் ஸ்தானம் வகித்துவரும் வரையில் ஸ்தல சுய ஆட்சி முறை அபிவிருத்தியடையும் என்று கனவிலும் நினைக்கவேண்டாம். மூளையில்லாததும் வியாதியினால் பீடிக்கப்பட்டும் உள்ள ஒரு சரீரம் எவ்வாறு சுகமனுபவிக்கக் கூடும்? இந்தியரின் நிர்வாகத்திறமையில் நம்பிக்கை வையாத அன்னியநாட்டு நிர்வாகிகள் வீண் படாடோபம் செய்துகொண்டிருக்கிறார்களேயன்றி ஸ்தல சுயஆட்சியை முன்னுக்குக் கொண்டுவரக்காணோம். இம்மாதிரியான அத்தைப் பாட்டிச் சட்டங்கள் இந்தியர் இத்தனை நாளாய்ச் சகித்து வந்தது போதும். சட்ட திட்டங்கள் செய்தபின் அவற்றை அனுஷ்டானத்தில் கொண்டுவராமல் இழுக்கப் போட்டுவருவதுபற்றி நாளுக்கு நாள் அருவருப்புண்டாய்விட்டது. ஆங்கிலோ இந்தியர் நம்மைக்குழந்தைகள் என்று பாவிப்பதாகவே வைத்துக்கொண்டாலும் குழந்தைகள் தவழ்ந்து நடக்கக் கற்பதுபோல் இந்தியரும் பலதடவை பரிசோதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தியரின் திறமை அவ்வப்போது வெளிப்படவில்லையா? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இந்தியா கவர்ன்மெண்டாரும் வீண் காலதாமதம் செய்து வருவதைப் பார்க்க எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. சில சுதந்திரங்கள் கொடுக்கும்படி யாசிக்கிறோம் என்று எந்த கவர்ன்மெண்டும் நினைக்க வேண்டாம். பிரஜா உரிமைகளைக் கொடுங்கள் என்று கண்டிப்பாகவே கேட்கிறோம். இது விஷயத்தை கவர்ன்மெண்டார் கண்டிப்பாய் அறியட்டும். பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் [illegible] சமயத்தில் பேசிய போது 'இவ்வளவு தான்; இந்த வரம்பைத் தாண்டக் கூடாது, என்று ஒரு தேசத்தைப் பார்த்துச் சொல்ல யாருக்கும் பாத்தியமில்லை,என்று சொன்னார். அந்தந்த தேச ஜனங்களின் இஷ்டப்படியே ஆட்சி முறை நிர்ணயிக்கப்பட வேண்டும்; இந்நோக்கம் [illegible] விஷயத்தில் [illegible]

சைப் பிரியர்களாகிய பிரிட்டிஷ் மகா ஜனங்கள் எந்த நிமிஷத்திலும் நமக்கு பிற்பலமாயிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

'சுயேச்சை நீங்கலாக வேறு எதற்கும் நாம் யுத்தம் நடத்தி வரவில்லை' என்று மிஸ்டர் ஆஸ்குவித் மொழிந்ததை யாரும் மறந்து விடவில்லை. பெருத்த குடியரசு நாடாகிய அமெரிக்க யுனைடெட் ஸ்டேட்ஸாம் நமக்குத் துணையாய் நிற்கின்றது. சுயேச்சைக்குத் தாயாகிய இங்கிலாந்து தேசம் உலகத்தாரனைவரும் நகைக்கும்படி ஒரு நாளும் நடந்து கொள்ளாது.

ஜன நாயக ஆட்சிக்குத் தகுதியற்றவர்களா?

ஜன நாயக ஸ்தாபனங்களை வைத்து நிர்வகிக்க, இந்தியருக்கு யோக்கியதையே கிடையாதென்றும், சுயேச்சாதிபத்தியத்தையே இந்தியர் இயற்கையாய் விரும்புகிறவர்களென்றும் ஓயாமல் சொல்லப்படுவதைக் கேட்டு என் காது சலித்துப் போய்விட்டது. இம்மாதிரி சொல்லிவருவது சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் அல்ல. விருப்பு வெறுப்புகளில் ஈடுபட்ட சிவில் சர்விஸ் என்னும் உத்தியோக வர்க்கத்தினரேயாவர். ஜன நாயக ஆட்சிக்கு இந்தியர் அருகராவென்ற விஷயத்தைக் குறித்து ஸ்பஷ்டமாய், இந்தியா மந்திரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஹோம் ரூல் லீக் பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறது. பிரபல ஆங்கிலேயர் பலர், அருகர் தான் என்று சந்தேகமறச் சொல்லியிருக்கிறார்கள். ஸர் ஜான் லாரன்ஸ் 1864ம் வருஷத்தில் சொன்னதாவது:—

"இந்திய ஜனங்களுக்கு சொந்தவிஷயங்களை நிர்வகித்துக்கொள்ள நிரம்ப சாமர்த்தியம் உண்டு; முனிசிபல் நிர்வாக முறைகள் அவர்கள் மனதில் ஆழப் பதிந்து கிடக்கின்றன; கிராமங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குடியாட்சி ஸ்தாபனமென்று சொல்லலாம்; கிராம சபைகளே இந்தியாவில் என்றைக்கும் நிலைத்திருக்கக் கூடியவை; இத்தேச விஷயங்களை எவ்வளவு தூரம் இந்தியரிடத்தில் விடலாமோ அதுபோக மிஞ்சி நிற்பதையே நாம் நிர்வகிக்கவேண்டும்; இதுவே நமது நித்திய நோக்கமாயிருத்தல் வேண்டும்."

1871-ல் ஸர் பார்டில் ப்ரீர் இந்தியக் கிராம ஸ்தாபனங்களில் மிகுதியும் பிரியம் வைத்து எழுதியிருக்கும் கடிதத்தையும் ஆதாரமாகக் காணலாம். மிஸ்டர் ஹோம் ஆன்ஸ்டே சொல்லியிருப்பதாவது:—

"முனிசிபல் ஸ்தாபனங்களுக்கு கீழ்த்தேசங்களே பிறப்பிடமாகும் என்பதை நாம் அடிக்கடி மறந்து வருகிறோம். பார்லிமெண்ட் தோரணையில் தேச சபைகளை நடத்த படிப்பு முதலியவற்றால் அவர்களை நாம் படிக்கவேண்டுமென்று நாம் பெரும் போக்காய்ப் பேசுவதில் அர்த்தமேயில்லை. யுகம் யுகமாய் இந்தியாவில் ஸ்தல சுய ஆட்சி நடந்து வந்திருக்கிறது. மத வேற்றுமைகளுக்கும் முனிசிபல் ஸ்தாபனங்களுக்கும் சம்பந்தமேயில்லை."

இம்மாதிரி சொல்லியிருப்பதையெல்லாம் எடுத்துக் கூறுவதென் முடிவு வருஷக்கணக்காகும். அறிவாளரே அதனை அறியக்கூடும். அறிவில்லாதவருக்கு நாம் எவ்வளவு புத்தி சொன்னாலும் அவர்களுடைய மூளையில் ஏறாது.

ஸ்தல ஸ்தாபனங்களில் அமைப்பு

பொது விதிகள்:—ஸ்தல ஸ்தாபனங்களின் [illegible] பற்றி பொதுவாய் இரண்டொரு கொள்கைகளை எடுத்துக்கூற வேண்டியது அவசியம். ஸ்தலங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். 1. கிராமம் 2. பல கிராமங்களின் கூட்டமும் 3. தாசில்களும் தாலுகாக்களும் தொடர்ச்சியாய் அமையப்பெற்ற ஜில்லாவும் அதைச் சேர்ந்த காடுகளும் தரிசு நிலங்களும்.

பழைய கால சம்பிரதாயம் இது தான். கிராமந்தோறும் ஒரு கிராமாதிகாரியும் 10 கிராமங்களுக்குச் சேர்ந்து ஒரு மேலதிகாரியும், 100 கிராமங்களுக்குத் தலைவராய் மற்றொரு உயர்பதவி அதிகாரியும் ஒழுங்காய் நிர்வகித்து வந்தனர். ஜனங்களுக்கும் இம்முறையில் வெகு பிடித்தமுண்டு. ஒரு கிராமத்தில் ஒவ்வொரு வீட்டுச் சொந்தக்காரருக்கும் கிராம சபையில் ஸ்தானம் உண்டு ஸ்திரீகளாயிருந்தாலும் சரி, புருஷர்களானாலும் சரி, நிர்வாகத்தில் செல்வாக்கு கிடைத்து விடும். இவ்வாறே படிப்படியாய் தங்கள் பிரதிநிதிகள் மூலமாய் தேச நிர்வாகத்தில் தங்கள் அபிப்பிராயத்தை பிரதிபலிக்கச் செய்தனர். படிப்பும் அனுபோகமும் பின்னிட்டு ஏற்பட்டால் அதற்கேற்றவாறு நமது சட்டசபைகளுக்கு ஓட்டு கொடுக்கும் தொகுதிகளை அமைப்பதும் சாத்தியமாகும். கிராமாந்தர வாசிகளின் அபிப்பிராயம் கூட தேச சபைகளில் பிரதிபலிக்கும். ஓட்டு கொடுக்கும் தொகுதிகளை அமைக்க வேண்டுமென்பதே நமது வாதமாகும்.

கிராம விஷயங்களனைத்தும் கிராம சபைகளால் பைசல் செய்யப்படுவது சாத்தியமாகும்படி அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஒரு பள்ளிக்கூடத்தை திருஷ்டாந்தமாய் எடுத்துக் கொள்வோம். ஒரு மாகாணத்துக்கு கல்வித் திட்டம் தயாரிக்க வேண்டுமானால் அந்த மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்று மாகாண கவர்ன்மெண்டின் கல்வி இலாகாவில் தயாரிக்கப்பட வேண்டும். அந்தத் திட்டத்தில் மாகாண யூனிவர்ஸிட்டிகளும், கலாசாலைகளும் நடுத்தரப் பள்ளிகளும், செகண்டரி கல்விச் சாலைகளும், ஆரம்பக் கல்வி ஸ்தாபனங்களும் அடங்கியிருக்கும். ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்த பட்சம் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடமாவது இருக்கும். தொழிற் பழக்கத்துக்கான தொழிற் படிப்பும் அதனில் சொல்லி வைக்க ஏற்பாடு செய்யப்படும். ஒவ்வொரு ஜில்லாவுக்கு ஒரு காலேஜும் தாலுக்காவுக்கு ஒரு நடுத்தரப்பள்ளியும் கட்டாயமாய் இருக்கும். ஒரு மாகாணத்துக்கு ஒன்று அல்லது மேற்பட்ட யூனிவர்ஸிட்டிகள் அமைக்கப்படும். ஆனால் கிராமப் பஞ்சாயத்துகளின் கடமை கிராமாந்தரப் பள்ளிக்கூடத்தில் ஒழுங்கான நிர்வாகத்தோடு நிலைத்துவிடும், அதற்கு மேற்பட்ட அந்தஸ்துள்ள பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிடுவதோடு அதன் கடமை முடிந்து விடுகிறது.

கிராமப் பஞ்சாயத்துகள்:—பண்டைக் காலம் முதற்கொண்டு கிராமத்தார் என்ற ஒரு தனி வகுப்பினர் இருந்து தான் வருகிறார்கள். பொது ஞானமும் கட்டுப்பாடும் அன்னாரிடத்தில் அபரிமிதமாய் உண்டு. சிலா சாசனங்களாலும் பழைய தஸ்தாவேஜுகளாலும் இது விளங்கும். 19-ம்

நூற்றாண்டு வரையில் அவை அழிந்து போகாமல் இருந்தன. பர்மாவில் இன்றைக்கும் அதன் சின்னங்கள் இல்லாமற் போகவில்லை. ஸர் தாமஸ் மன்ரோவின் தனி ரயத்வாரித் திட்டம் (1820) அனுஷ்டானத்துக்கு வந்தது முதல் அவை அழியத்தலைப்பட்டன. கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரத்தின்படி, அந்த நாளில், கிராமவாசிகள் ரஸ்தாக்கள் போடுவதிலும் நந்தவனங்கள் அமைப்பதிலும் சமூக நன்மைக்குள்ள இதர வேலைகள் செய்வதிலும் வெகு அக்கறை காட்டி வந்தார்களென்பது விளங்கும். குக்கிராம கவர்ன்மெண்டார் நிர்வாக அதிகாரத்தை வகித்திருந்ததோடு நீதி பரிபாலனமும் செலுத்திவந்தார்கள். ஸர் தாமஸ் மன்ரோவின் திருத்தங்களின் பயனாக அவை அழிந்தன.

மைசூர் கவர்ன்மெண்டின் நிர்வாக ரிபோர்ட்டிலிருந்து கிராம சமிட்டிகள் அங்கு செய்து வரும் வேலையை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். கவர்ன்மெண்டார் விசேஷ திரவிய சகாயம் செய்து கிராமத் தொழில்களைப் பாதுகாத்து வருகின்றனர். கிராமச்சமிட்டிகள் அங்கு சர்க்கார் உதவியைக் கொண்டு பள்ளிக் கூடங்கள், கிணறுகள் முதலானவை கட்டி வைப்பதோடு ரஸ்தாக்கள் போட்டு நாகதாளிப் பூண்டுகளை யழித்து ஆங்காங்கு மரங்களை நட்டு வளர்க்கின்றன. வருஷா வருஷம் கிராமச்சமிட்டியார் கான்பரென்ஸ்கள் கூட்டி கிராம வாசிகளின் தேவைகளையும் பொருளாதாரம், சுகாதாரம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கான மார்க்கங்களையும் ஆலோசித்து வருஷவாரி வேலையையும் அளவிட்டுப் பார்க்கிறார்கள். கிராமத்தாரும் அச்சமிட்டிகளோடு ஒத்துழைத்து கூடுமான உதவி புரிந்து வருகிறார்கள். பரம்பரையாய் நடந்து வரும் சமூக சாதனத்தை இவ்வாறு அழிந்து போகாதபடி மைசூர் கவர்ன்மெண்டார் பாதுகாத்து வருகின்றனர்.

இது நிற்க, கிராம வாழ்வில் காணப்படும் விசேஷ அம்சங்களை கவனிப்போம்.[4] நன்செய் புன்செய் நிலங்களும் மேய்ச்சல் ஸ்தலங்களும் வீடுகளைச் சுற்றியிருக்கின்றன. ஒவ்வொரு கிராம வாசிக்கும் குடிக்கூலியன்னியில் வாச ஸ்தலம், தோட்டம் தோப்புகள் முதலானவை கொடுக்கப் பட்டிருக்கின்றன. கிராம உத்தியோகஸ்தர்களும் தொழில் நிபுணர்களும், கிராம வாசிகள் கேட்ட மாத்திரத்தில் இலவசமாய் எதையும் செய்து கொடுக்கத் தயாரா யிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, அவ்வுத்தியோகஸ்தர் முதலானவர்களுக்கு மானியமும் இதர வருமான இனங்களும் ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் தலைமை அதிகாரிகள் ஒருவரும், கணக்குப் பிள்ளையும், போலீஸ் அதிகாரம் பெற்ற ஒரு தலையாரியும், கிராம எல்லையைப்பாதுகாக்க ஒருவரும், குளங்கள், நீர்ப்பாசனம் சோதிடர், வைத்தியர், சங்கீத நிபுணர், கவிராயர், நாவி, கூவரகன், வண்ணான் இவற்றைக் கவனிக்க மற்றொருவரும், பூசாரி பள்ளிக்கூட உபாத்தியாயர் கொல்லன் முதலானவர்களும் பரம்பரையாய் அவரவருடைய அனுஷ்டானத்தைச் செவ்வனே செய்து வருகிறார்கள். கிராம சபை மெம்பர்கள் எப்போதும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாகவே யிருக்கின்றனர். அச்சபை மெம்பர்

களை பின்னிட்டு, கமிட்டிகள் இன்னின்ன வேலைக்கென்று அதிகாரத்தைப் பிரித்துக் கொள்ளுகிறார்கள். கிராம நிலங்கள் அனைத்தும் கிராம சமூதாய நிலங்களாகப் பாவிக்கப்பட்டு அடிக்கடி பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றன. எல்லா வீட்டுக்காரர்களுக்கும் கவுன்சிலர்களைத் தெரிந்தெடுக்க வோட் சுதந்தரமுண்டு. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலருக்கு இன்னின்ன யோக்கியதை யிருக்க வேண்டுமென ஒரு விதி ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

பிரிட்டிஷ் இந்தியாவில் கிராமங்களின் அந்தஸ்து எவ்வாறிருக்கிறதென்று கவனிப்போம். 1907ம் வருஷத்தில் எட்வர்ட் மன்னரால் நியமிக்கப்பட்ட அதிகாரப் பிரிவினை கமிட்டியில் ஐந்து பேர் ஆங்கிலேயரும் ரோமஷ் சந்திர தத்தர் என்ற ஒரு இந்தியரும் ஸ்தானம் வகித்தனர். அவர்கள் அனுப்பிக் கொண்ட ரிபோர்ட்டில், இந்தியாவெங்கும் அனேகமாய் கிராமங்களே மாகாண ஆட்சிக்கு அடிப்படையான ஸ்தலமாகும் என்று தெளிவாய்க் குறிப்பிட்டிருக்கிறார்கள். உத்தியோக முறையில் பிரசுரிக்கப்படும் 'கெஜட்டியர்' என்ற நூலிலும் கிராம வாழ்வைப்பற்றி பெரிதும் சிலாகித்தெழுதப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கிராமங்களில் ஸ்தல சுயஆட்சி வெகு நன்றாய் நடந்து வந்ததாகச் சொல்லிவிட்டு அதிகாரப் பிரிவினைக் கமிஷன் அது இப்போது அழிந்து போனதற்குக் காரணத்தைச் சொல்லி யிருக்கிறார்கள்:—

'சிவில் கோர்ட்டுகளும், கிரிமனல் வியாச்சியங்களைத் தீர்க்க நியாய ஸ்தலங்களும், ரெவினியூ போலீஸ் இவை சம்பந்தமான புதிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டபின் கிராம சுய ஆட்சி இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விட்டது; போக்குவரத்துக்குரிய புதிய சாதனங்களும் வியவசாயிகளைத் தனித் தனியே பிரித்து கிஸ்தி வசூலிக்கும் பொருட்டு ஏற்பட்ட ரயத்வாரி முறையும், கிராமவாழ்வின் பழைய தோரணையை அடியோடு மாற்றிவிட்டன. இருந்த போதிலும், கிராமங்களில் இன்றைக்கும் மணியகார், கணக்குப்பிள்ளை தலையாரி என்னும் மூன்று பிரதம ஊழியர்களும் இருந்து தான் வருகிறார்கள். கவர்ன்மெண்டார் அவர்களை இப்போது சம்பளம் பெறும் வேலைக்காரர்களாச் செய்துவிட்டார்கள். கிராமத்தாருக்குள் சமூகக் கட்டுப்பாடு இன்றைக்கும் முற்றிலும் ஒழிந்துபோகவில்லை."

'சம்பளம் பெறும் சேவர்கள்' என்ற இப்பதங்களிலேயே பழைய கிராம ஒழுங்குகள் தொலைந்து போனதற்கு மூலகாரணம் நன்கு வெளிப்படும். இவ்வாறு சம்பளம் பெறும் கிராம உத்தியோகஸ்தர் பின்னிட்டு டிப்டி தாசில்தார், தாசில்தார், டிப்டி கலெக்டர், கலெக்டர் ஆகிய மகா உத்தியோகஸ்தர்களின் தயவை எதிர்பார்த்திருக்கும்படி ஆய்விட்டது. கிராமத்தாருடைய [illegible]பவும் சன்மானமும் அவருக்கு லட்சியமில்லை. எனவே கிராமச் சேவகர்கள் என்ற அந்தஸ்துபோய், கிராமக் கொடுங்கோலர்கள் என்ற ஹோதாவில் அன்னார் உத்தியோகம் பார்க்கத் தலைப்பட்டபின் கிராமாந்தரங்களின்

ஆத்மா' போன்ற சமூஷ்டி சாதனங்கள் இருந்தவிடம் தெரியாமல் அழிந்து போயின.

இம்மாதிரி கிராம சமூக உணர்ச்சியில் பிளவு ஏற்படக்கூடாதென்றும் கிராம சபைகளையும் பழைய மாமூல்களையும் திரும்ப ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சிபார்சு செய்திருந்தார்கள் அக்கமிட்டியின் விசாரணை நடந்தபோதுகூட, 'போதியவளவு படிப்பும் சுயேச்சை உணர்ச்சியும் ஏற்பட்டிருந்தாலல்லவோ கிராமாந்தரங்களில் சுய ஆட்சி நடைபெறச் செய்யலாம்' என்று ஒருவர் சந்தேகப்பட்டு சாட்சியம் கொடுத்தார். அதிகாரி வர்க்கத்தினரின் வாசனைதான் அவரிடம் சற்று வீசியது என்று நாம் நினைக்கவேண்டி யிருக்கிறது. பல்லாண்டுகளாக நம் கிராமங்கள் சுயஆட்சி சுதந்திரத்தை அனுபவித்துவந்தன. ஆட்சி மாறுதல்களும் எண்ணிறந்த படையெடுப்புகளும் சுயஆட்சிக்காற்றினால்சஞ்சலப்படாதிருந்தும் கடைசியாய் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டு 120 வருஷங்கள் கழித்து தங்கள் காரியத்தைத் தாங்களே பார்த்துக்கொள்ள கிராமத்தார்க்கு யோக்யதையில்லாமல் போனதன்காரணமென்ன? கைதூக்கிவிடும் ஆட்சியென்று பொதுவாய்ச் சொல்லிக் கொள்ளப்படும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இம்மாதிரி .விரோதமாய் நடப்பதுண்டா? அப்படி நடப்பதற்குக் காரணம் உண்டு என்றே சொல்லவேண்டும். எப்படியெனில் அதிகாரிவர்க்கத்தினர் என்ற உலையில் அவர்களுக்குப் பிடிக்காத சாமான்களைக் காய்ச்சி, இஷ்டப்படி நீட்டவோ குறுக்கவோ அறுக்கவோ சாத்தியமாயிற்று. கிராமத்தாருடைய இஷ்டம்போல் நடக்க கலெக்டருக்கு இஷ்டமில்லை; எனவே, கிராம சபைகள் ஒழிந்துபோக வேண்டும். சுயஆட்சி ஒன்றுதான் கிராம ஆட்சியைப் பழைய நிலைக்குக் கொண்டுவரக்கூடும்.

அதிகாரப் பிரிவினைக் கமிஷனின் சிபார்சுகள் ஒரு விஷயத்தில் திருப்தியாயில்லை. அதாவது கிராமப் பஞ்சாயத்துகளை மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டுமென்று சொல்லுவதோடு நிற்காமல் அவற்றைத் தாசில்தார்களும் சப் டிவிஷனல் உத்தியோகஸ்தர்களும் வெகு கவனமாய் மேற்பார்வையிடவேண்டும் என்று அக்கமிஷன் சிபார்சில் சேர்த்திருக்கிறார்கள். இப்படிச் செய்தால் கிராமப் பஞ்சாயத்துகளால் பலன் உண்டாகுமென்று நினைக்க இடமில்லை. கையையும் காலையும் இறுகக் கட்டி விட்டு ஒரு குழந்தையை நடக்கப் பழக்கிவைப்பதாம்; அது நடக்க முடியாவிட்டால் பழித்துக் காட்டுவதாம். இதென்ன விந்தை! விழுந்து விழுந்து தான் நடக்க கற்றுக்கொள்ளக் கூடும் என்பது அனுபோகம். குழந்தையைக் கட்டிவைத்திருந்தால் அதற்குப் பாரிசவாயு வந்து கடைசியில் நடக்க முடியாமலே போய்விடும்.

ஆகவே மறுபடியும் பஞ்சாயத்துகளை ஸ்தாபிக்க இந்தியா மந்திரி சட்டபூர்வமாய் அதிகாரம் கொடுத்து விடுவாரென்று நம்புகிறேன். சென்னை சட்ட சபையில் கனம் ரங்காசாரியர் ஆனமட்டும் கொண்டு வரப்பார்த்து கடைசியில் பலிக்காத கிராமப் பஞ்சாயத்து மசோதாவை இந்தியா மந்திரியினிடம

நான் சமர்ப்பித்திருக்கிறேன். சென்னையில் அங்கீகரிக்கப்படாதது பார்லிமெண்டிலாவது நிறைவேறுதா என்று எதிர்பார்த்திருப்போம். பல தடவைகளில் நான் சொல்லியிருக்கிறபடி, பஞ்சாயத்துகளை உபயோகமான சபைகளாகவும் அவற்றில் கிராமத்தாருக்கு ஊக்கம் பிறக்கும்படியும் வைத்து நடத்தவேண்டும். கிராமப் பஞ்சாயத்து முறையை அனுசரித்தே பட்டணங்களில் 'வார்டு' (கண்டம்) என்ற எல்லைப் பிரிவினை செய்யப்பட வேண்டும். ஐயாயிரம் ஜனங்களுக்கு மேலாய் பட்டணங்கள் அனைத்திலும் 'வார்டு' பஞ்சாயத்து முறை அனுஷ்டானத்திற்கு வரவேண்டும். அந்தந்த வார்டுக்கு அததன் காரியத்தை நடத்திக்கொள்ள சுவாதீனம்வேண்டும். முனிசிபல் நகரங்களில் கூட வார்டு பஞ்சாயத்து சபைகளுக்கு ஓரளவு அதிகாரமும் மேற்பார்வையும் கொடுக்க வேண்டும்.

தாலூகா அல்லது தாசில் சபை.

ஸ்தல சுய ஆட்சி என்ற ஏணியில் அடுத்தபடியானது கிராமப் பஞ்சாயத்திற்கும் ஜில்லா போர்டுக்கும் இடையே யிருக்கவேண்டிய ஸ்தல ஸ்தாபனமாகும். அந்த ஸ்தாபனத்துக்கு பல மாகாணங்களில் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. சென்னையில் பார்ப்போமானால் மொத்தம் 26 ஜில்வா போர்டுகளும் 96 தாலூகா போர்டுகளும் இருக்கின்றன. தாலூக்காக்களை குட்டி ஜில்லாக்கள் என்று வைத்துக்கொள்வோம். மற்ற மாகாணங்களில் தாலூகா போர்டின் விஸ்தீரணத்தை யனுசரித்து குட்டி ஜில்லாக்கள் அமைக்கப்படுவதாக எடுத்துக்கொள்வோம். தாலூகா அல்லது தாசில் சபையென்று பெயரிட்டால் அதிகாரப்பிரிவினை கமிஷன் யோசனைக்கு ஒத்ததாயிருக்கும் இத்தகைய தாசில் எல்லைகளுக்குள் 'போர்டு' என்ற சபை அமைக்கப்படவேண்டும். அந்த சபைக்குகிராமப் பஞ்சாயத்துக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும். அந்த பிரதிநிதிக்கான யோக்கியதையை சொத்தின் பேரில் நிர்ணயிக்கக்கூடாது. அந்தந்த பிரதிநிதி அவரவருடைய கிராம நன்மைகளுக்கானவற்றை பிரஸ்தாப சபையில் எடுத்துப் பேசுவது சாத்தியமாகும். அதிகாரப்பிரிவினை கமிட்டியாரும் இம்முறையை ஆதரித்திருக்கிறார்கள். நடுத்தரப்பள்ளிகளை மேற்பார்வையிடவும், பண்ணைகள் வைத்துபயிற்சி கொடுக்கவும், கிராமப்போக்குவரத்து வசதிகளை ஒழுங்குப்படுத்தவும், வேண்டிய விடங்களில் விளக்குப்போடவும், நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கவும், கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்து விவசாய அபிவிருத்தியைக் கவனிக்கவும், நெற்களஞ்சியங்களும் பால் பண்ணைகளும் கட்டிவைத்து நிர்வகிக்கவும், பொலிகடாக்களை ரட்சித்து வாடகைக்கு விடவும், குதிரை வளர்க்கும் லாயங்கள் கட்டவும், குறித்த விடங்களில் தொழில் வசதிகள் செய்து கொடுக்கவும், மேற்குறித்த தாலூகா சபைகளுக்கு அதிகாரம் வேண்டும்.

ஜில்லா போர்டுகள்.

ராஜீய வாதிகளில் சிலர் ஜில்லாபோர்டை எடுத்து விடவேண்டுமென்றும் விரும்புகிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் அவையிருக்கவே வேண்டும்.

ஸ்தல சுய ஆட்சியில் மேலிருந்து மூன்றாவது படித்தரத்தில் ஜில்லாபோர்டுகளும் முனிசிபாலிடிகளுமிருக்கின்றன. ஜில்லாபோர்டுகளின் மெம்பர்கள் தாலூகா போர்டு மெம்பர்களாலும் தாலூகாவிலுள்ள ஓட்டர்களாலும் தெரிந்தெடுக்கப்படவேண்டும். இம்முறையின்படி தாலூகாபொதுவாய்போர்டு மெம்பர்கள் இரண்டு தடவை ஓட்கொடுக்க நேருகிறது. அவர்கள் செய்யும் வேலையை உத்தேசித்து அந்த விசேஷம் அவர்களுக்கு இருக்கவேண்டியது தான்.

ஜில்லாமுழுமையும் பற்றின வேலைகளை ஜில்லாபோர்டுகள் செய்வதுடன் தாலூகா போர்டுகளின் வேலையை மேல்பார்வை செய்து தாலூகாபோர்டின் தீர்ப்பின் மேல் பஞ்சாயத்துகள் செய்துகொள்ளக் கூடிய அப்பீல்களை அவைகள் பைசல் செய்ய வேண்டும், ஒவ்வொரு தாலூகாபோர்டும் இத்தனை வரி வசூல் செய்துகொள்ளலாமென்று அவை தீர்மானித்து மாகாண கவர்ன்மெண்டு கொடுக்கும் பணத்தில் அவைகளுக் கொரு பங்கு பிரித்துக்கொடுக்க வேண்டும். எஞ்சினிர், இன்ஸ்பெக்டர், முதலிய அவசியமான உத்தியோகஸ்தர்களை அவைகள் தான் நியமிக்க வேண்டும். சாலைகள் ரயில் பாதைகள் முதலியவை அவைகளின் அதிகாரத்திலேயே இருக்க வேண்டும்.

ஜில்லாபோர்டுகளுக்கு உண்மையான அதிகாரமும் சுவாதீனமும் கொடுக்கப்பட்ட பிறகு தான் ஜில்லாபோர்டுகளின் அபிவிருத்தி பெருகும். சகல ஜில்லாபோர்டுகளும் தெரிந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளும் தெரிந்தெடுக்கப் பட்ட ப்ரெஸிடெண்டும் அடங்கியனவையா யிருக்கவேண்டும். ஹோம் ரூலுக்கு அடிப்படையாக ஸ்தல சுய ஆட்சி ஏற்படும் போது கிராமப் பஞ்சாயத்து சபைகள் ஏற்பட்டு, கிராமங்களில் அரியவேலைகள் செய்ய நாம் பார்ப்போம். பஞ்சாயத்துகள், விவசாய அபிவிருத்திக்கு ஏற்ற உபாயங்களை குடிகளுக்கு எடுத்துக் கூறும்; பரிக்ஷார்த்தமாக பண்ணைகளை வைத்து நடத்திக்காட்டும்; மைசூரில் இம்மாதிரிப் பண்ணைகள் பல வைத்து நடத்தப்படுகின்றன. விவசாயிகளின் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்கும். கிராமத்தின் தேவைக்கேற்றவாறு பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கும். மைசூரில் பெரும்பாகம் கொண்ட காடுகள் கால் நடைகளின் மேய்ச்சலுக்கு உபயோகிக்கப்படும்படி மைசூர் கவர்ன்மெண்டார் குடிகளுக்கு அளித்திருப்பதாய் போன வருஷத்திய ரிபோர்ட் அறிவிக்கின்றது; கிராமப் பஞ்சாயத்துகளும் கால்நடைகளின் அபிவிருத்திக்குற்றவழிகளைச் செய்யும். இப்படி யெல்லாம் நாம் கூறுவது வீண்பேச்சாக மாட்டாது. சுய ஆட்சி பெற்ற இதர தேசங்கள் இவற்றைச் செய்து முடித்திருக்கின்றன. இந்தியாவும் சுயஆட்சியை அனுபவிக்கும்போது இவற்றையேன் செய்யாது? தேசத்தில் எழுதப் படிக்கத் தெரியாத குடும்பம் அடங்கிய கிராமமும், அப்படிப்பட்ட நபர்களடங்கிய குடும்பமும் இருக்கக் கூடாதென்று உத்தரவிட்டு ஜப்பான் சக்கரவர்த்தி சட்டஞ்செய்தார். 24-வருஷத்திற்குள் ஜப்பான் தேசத்தில் 100-க்கு 92 பெயர்கள் படித்தவர்களாய் விட்டார்கள். இந்த ஜப்பானியரைப்போல இந்தியரும் செய்யமாட்டார்களா?

ஸ்தல ஸ்தாபனங்களின் பொருட்டு ஒரு போர்டு.

ஸ்தல சுய ஆட்சி முறையின் பொருட்டு, மாகாண சட்ட சபையினால் நிர்மாணிக்கப்படும் சட்டத்திற் கடங்கி ஒரு போர்டு ஏற்படுத்தப்பட வேண்டும். நமது ஜனங்கள் சுகாதார விஷயங்களிலும் தங்களுக்குத் தாங்களே வரி விதித்துக் கொள்வதிலும் விருப்பமற்றவர்களாயும், சலிப்புற்றவர்களாயுமிருக்கின்றார்களென்றும், எனவே நம் ஜனங்கள் ஸ்தலசுய ஆட்சிக்குயோக்யதை யற்றவர்களென்றும் இங்குள்ள ஆங்கிலேயர் சொல்லுகின்றார்கள். இங்கிலாந்தில் 1835-1870ம் வருஷங்களுக்கிடையில் பிரிட்டிஷ் ஜனங்கள் என்ன நிலைமையிலிருந்தார்கள். ஸ்தல சுய ஆட்சியில் ஜனங்களுக்கு சிரத்தை யுண்டாகும்படி செய்விக்க கவர்ன்மெண்ட் 41 விதமான சட்டங்களைச் செய்தது. அதுவும் போதாமல், 1871-1907-வருஷங்களுக்கிடையில் 154 புதிய சட்டங்களை பார்லிமெண்ட் செய்தது. இதிலிருந்து பிரிட்டிஷ் ஜனங்களின் நிலைமை இந்தியர்களிலும் மேன்பட்டதல்லவென்பது வெளிப்படவில்லை. பிரிட்டிஷ் ஜனங்கள் சிரத்தை பாராட்டுகிறவர்களானால் அவர்களை கட்டாயப் படுத்த இவ்வளவு சட்டங்கள் எதற்கு? இவ்வளவு வருஷ தாமதம் எதற்கு?

மாகாண சட்டசபையும் ராஜப் பிரதிநிதி சட்டசபையும்.

காங்கிரஸ் லீக் திருத்தப்பிரேரணைகள் கடந்த இரண்டு வருஷங்களாக சகலவிதமான கக்ஷியாராலும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரேரணைகள் நிறைவேற்றப்படுவதற்குரிய முயற்சிகளைச் செய்வதே நமது கடமை. இந்தப்பிரேரணைகள், இந்தியா சுராஜ்யம் பெறுதற்குஅடிப்படையாக உள்ளன. தற்போதைய நிலைமைக்கும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நிலைமைக்கும், இந்தப்பிரேரணைகளின்படி செய்யப்படும் திருத்தங்கள் ஒரு பாலமாக ஏற்படுமென்றும் சொல்லலாம். காங்கிரஸ் லீக் பிரேரணைகள் நிறைவேற்றப்படுகிறவரையில் நாம் இடைவிடாது கிளர்ச்சி செய்துகொண்டு வரவேண்டும். முழு ஸ்வராஜ்யம் கிடைக்கும்போது, இந்தியாவுக்குப் பொதுவான ஒரு பார்லிமெண்டும், ஏகாதிபத்திய மந்திரிசபையில் ஸ்தானமும் ஏற்படும். அப்பொழுது சுதேச சமஸ்தானங்களும் அதனுள் அடங்கியிருக்கும். தற்போது அவ்வளவு தீவிரமான திருத்தம் வேண்டியதில்லையென்று கருதியே தற்சமயம் காங்கிரஸ் அவசியமான பிரேரணைகளைச் செய்திருக்கின்றது. ஜில்லா போர்டுகளின் வரவு செலவு விஷயங்களில் தகுந்த ஆதாரமிருந்தாலன்றி பிரவேசிக்காமலிருத்தலும், மாகாணத்தின் கைத்தொழில்களை விருத்தி செய்வதும், ஜில்லா போர்டுகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதும் மாகாண சட்டசபைகளின் முக்கியமான வேலைகளாயிருக்கவேண்டும். விவசாயிகளுக்கும் குடிகளுக்கும் வேண்டிய சகல சகாயங்களையும் செய்து கொடுக்கவேண்டும். மைசூர் இப்படிப் பல வழிகளில் செய்து வருகின்றது. சுய ஆட்சி தங்களுடைய நன்மைக்கும் அபிவிருத்திக்கும் அத்தியாவசியமானதென்பதை பாமரர்கள் உணரும்படி செய்விக்கவேண்டியது காங்கிரஸ் பிரேரணைகளின்படி ஏற்படும் சட்டசபைகளின் வேலையாகும்.

துண்டு துண்டாகச் சுயாட்சி.

இரண்டொரு இலாக்காக்களில் இந்தியர்களுக்கு சுதந்திரங்கள் கொடுப்பதுபோல் திருத்தம் செய்துவிட்டு, முக்கியமான மற்ற இலாக்காக்களை, ஜனங்களுக்குஜவாப்தாரியாகாத கவர்ன்மெண்டைக்கொண்டே நடத்தி வரஏற்பாடுசெய்யப்பட வேண்டுமென்று ஆங்கிலோ இந்தியர்கள் ஒரு புதிய பிரேரணை கொண்டுவந்திருக்கின்றார்கள். ஜனப்பிரதிநிதிகளிடம்ஒப்படைக்கப்படும் இலாகா அல்லது இலாக்காக்கள் கல்வி சுகாதாரம்போன்ற செலவுசெய்யும் இலாகாக்களாய் இருக்கலாம். ஜவாப்தாரியாகாத கவர்ன்மெண்டினிடமிருந்து தான், இந்தப் பிரதிநிதி கவர்ன்மெண்டுக்கு பணம் கிடைக்கவேண்டுமாதலால், உத்தரவாதமற்ற கவர்ன்மெண்டு பிரதிநிதிகளிடம் ஒப்படைத்த கவர்ன்மெண்டுக்கு பணம் கொடுக்க மறுதளித்து விட்டுப் பிறகு இந்தியர்கள் நிர்வாகத்திறமை பொருந்தியவர்களல்லவென்றும் இரண்டொரு இலாக்காக்களைக்கூட நிருவகிக்கத்திறமையற்றவர்களென்றும், சொல்லி உள்ள அதிகாரத்தையும் எடுத்து விடலாம். இந்தியா சுயஆட்சியை விரும்பும் இந்தச்சமயத்தில் இப்படிப்பட்டபிரேரணைகள் அனர்த்தமாய்முடியும். இந்தயோஜனைகளிலிருந்து கவர்ன்மெண்டுக்கு ஜனங்களிடத்தில் ஆழ்ந்த அவநம்பிக்கையிருப்பதாக வெளிப்படுகின்றது. எக்காலத்தும் இந்தியா அதிகாரவர்க்கத்தினரின் கைகளால் ஆட்டிவைக்கப்படும் பொம்மையாகஇருக்கவேண்டுமென்று அதிகாரவர்க்கத்தினர் எண்ணியிருக்கின்றார்களென்பதையும் காட்டுகின்றது. இப்படிச் செய்வது, எந்த நோக்கத்திற்காக இங்கிலாந்து இந்த யுத்தத்தை நடத்துகின்றதோ அந்த நோக்கத்திற்கு நேர் விரோதமான செய்கையாகும். காங்கிரஸ் சபையானது சில பிரேரணைகளைத் தெளிவுறக் குறிப்பிட்டு அதன்படி சீர்திருத்தங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றது. அந்தப் பிரேரணைகளின்படி திருத்தங்கள் செய்யப்பட்டாலன்றி நாம் திருப்தியடையமாட்டோம்.

இங்கிலாந்துக்குப் பிரதிநிதிகளை அனுப்புதல்.

பார்லிமெண்டு செய்யப் போகிற சட்டத்தைப்பற்றி யோசனை சொல்லுவதற்காக நீங்கள் உங்களுடைய பிரதிநிதிகளை நான் எதிர்பார்க்கிறபடி அனுப்புவதாயிருந்தால், ராஜப்பிரதிநிதி சட்ட சபையிலும் மாகாண சட்ட சபைகளிலும் பிரதிநிதி மெம்பர்கள் பெருமபாகம் இருக்க வேண்டுமென்பதையும், பண ஆதாயம் செலவு சட்ட சபைக்குட்பட்டதாயிருக்க வேண்டுமென்பதையும் சட்டத்தில் கண்டு தாளுக வேண்டுமென்று வற்புறுத்தும்படி நீங்கள் அவர்களுக்குச் சொல்லி யனுப்பவேண்டும். அவ்விரண்டு அம்சங்களை ஒப்புக் கொள்ளாவிடில், மேல் யோசனை உபயோகமில்லை. அவைகளை ஒப்புக்கொண்டுவிட்டால், சில்லரை விஷயங்களைப்பற்றிப் பிறகு கலந்து பேசலாம்.

தவிர, பிரதிநிதிகளை அனுப்பத் தீர்மானித்தால், அவர்கள் சொல்ல வேண்டியதை ஆதரித்து நீங்கள் இங்கும் கலகம் செய்யவேண்டும்.

தேச பாஷைகள்.

புதிதாக ஜனங்களுக்குக் கிடைக்கப்போகிற அதிகாரத்தை அவர்கள் வகிக்கும்படி செய்ய தேசபாஷைகள் மூலமாக அவர்களைத் தயார் செய்யவேண்டும். சீக்கிரத்தில் மாகாணங்கள் பாஷை வாரியாகப் பிரிக்கப்பட வேண்டியிருக்கும். அப்பொழுது ஆங்கிலமும் தேசபாஷையுமாக்சர்க்கார் பாஷைகள் இரண்டேற்படும்.

சுய ஆட்சிச் சட்டம் ஏற்படவேண்டும்.

இந்தியா மந்திரி இங்கே விஜயஞ் செய்திருப்பதை யோசித்துப் பார்க்குமளவில், நாம் என்னென்ன சீர்திருத்தங்கள் கோருகிறோமென்பதை நாம் குறிப்பாகச் சொல்லிவிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏனென்றால், சீர்திருத்த சம்பந்தமாய் சட்டஞ் செய்வதாக உத்தேசமுண்டென்பது வெளிப்படை. முன்னம் மிஸ்டர் போனர்லா சொல்லிய வண்ணம், இரும்பு பழுக்கக் காய்ந்திருக்கும்பொழுதே நாம் அதை வேண்டிய வண்ணம் அடித்து உருப்படுத்திக் கொள்ளவேண்டும், நமது புதிய லட்சியத்தைப்பற்றியோ வென்றால், இந்தியாவிலே சுய ஆட்சியை ஏற்படுத்துவதாக 1918-ம் வருஷத்தில் பிரிட்டிஷார் சட்டஞ் செய்துவிட வேண்டுமென நாம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அச்சட்டமானது 1923-ம் வருஷத்திலோ அல்லது 1928-ம் வருஷத்திலோ அமுலுக்கு வந்துவிட வேண்டும். தவிர, 1918-ம் வருஷத்திலிருந்து 1923-ம் வருஷத்திற்குட்பட்ட 5 வருஷகாலத்திலேனும் அல்லது 1918-ம் வருஷத்திலிருந்து 1928 வருஷத்திற்குட்பட்ட 10-வருஷகாலத்திலேனும், இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பானது பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியருக்குக் கிடைத்துவிடவேண்டும் அவ்வாறு ஆட்சிப்பொறுப்பானது பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியருக்குக் கிடைக்கும்பொழுது, குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இருப்பதுபோன்ற சம்பந்தா சம்பந்தம் இந்தியாவுக்கும் கிரேட்பிரிட்டனுக்கும் இருக்கும். ஆட்சிப்பொறுப்பு இந்தியருக்குக்கிடைக்கும் மாதிரியானது காங்கிரஸ் லீக் சீர்திருத்த திட்டத்தை யனுசரித்திருக்க வேண்டும். அப்பொழுது ஓட் கொடுப்போரின் தொகை பெருகவேண்டும்; அதில் முக்கியமான அம்சம் யாதெனில், நிர்வாகசபையின் மெம்பர்களில் பாதிபேர் சட்ட சபையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்; பண விஷயமான அதிகாரம் சட்டசபைக்குக் கிடைக்கவேண்டும்; மாகாண சட்டசபைகளிலும் ராஜப்பிரதிநிதியின் சட்டசபையிலும் தேர்ந்தெடுக்கப்படும் மெம்பர்களே பெரும்பாலாராக இருத்தல் வேண்டும். நமக்கு செல்வாக்கு கிடைக்குமென்று நம்பி சட்டசபைகளில் நமக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று முதலில் கேட்டோம். அவ்வாறு பிரதிநிதித்துவம் நமக்குப் பயன்படவில்லை, ஆகலின், இந்தியாவின் ஆட்சியில் நமக்குப் பங்கு இருக்க வேண்டுமென இப்பொழுது கேட்கிறோம். இதன்படி சட்டசபையைக் கலைத்து விடவோ சட்டசபையின் தீர்மானத்தை நிராகரித்து விடவோ கவர்ன்மெண்டுக்கு அதிகாரமுண்டு, ஆனால், பணவிஷய அதிகாரமோ ஜனங்களின் கையில் இருக்கும். ஆட்சியில் இவ்வாறான உரிமை நமக்குக் கிடை

ப்பது தான் இரண்டாவதுபடியான சீர்திருத்தம். இனி, மூன்ருவதுபடியான சீர்திருத்தம் யாதெனில், 1923ம் வருஷத்திலோ 1928ம் வருஷத்திலோ நமக்கு பூரா ஹோம் ருல் கிடைத்துவிடவேண்டும்.

நமது புது லட்சியத்தைப்பற்றி ஜனங்களுக்கு அறிவூட்டும்வேலையை நாம் 1918-ம் வருஷத்தில் செய்யவேண்டும். யுத்தமுடிந்து ஏகாதிபத்தியத்தை திருத்தியமைக்கும் வேலை துரிதப்பட்டாலொழிய அடியிற்கண்ட வழியில் நாம் ஒரு திட்டத்தை அடுத்த வருஷத்திய காங்கிரஸில் தயார் செய்யவேண்டும்.

வழிகளாவன:—

(1) சட்டசபை முழுப்பிரதிநிதிச் சபையாகவே இருக்கவேண்டும்.

(2) சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஓட்கொடுக்கலாம். ஆனால் பிரதிநிதிகளாக அவர்கள் தெரிந்தெடுக்கப்படக்கூடாது. ராஜீய வாதங்களில் அவர்கள் சம்பந்தப்படக்கூடாது.

(3) சட்ட சபை ஒரே சபையாக விருக்கவேண்டும்.

(4) ப்ரிவி கவுன்ஸிலர்களையும் கவர்னர்களையும் கவர்னர் ஜெனரலையும் இந்தியா மந்திரியின் யோசனையின்மேல் நியமிக்க ராஜ சக்ரவர்த்திக்கு அதிகாரமிருக்கிறது போல், மந்திரி சபையை அமைக்கும்படி சட்டசபை மெம்பர் ஒருவருக்குச் சொல்லவும் அதிகாரமிருக்கவேண்டும்.

(5) இந்தியாவின் காவலுக்கான சேனையும் கடற்படையும் ராஜப்பிரதிநிதியின் அதிகாரத்துக்குட்பட்டவைகளாக இருக்கவேண்டும். ஏகாதிபத்தியக் காவலுக்காக இந்தியா என்ன கொடுக்கவேண்டுமென்பதை ஏகாதிபத்திய யுத்த சபையும் இந்தியா கவர்ன்மெண்டும் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

(6) வியாபாரக் கப்பல்களை உண்டாக்குவதும் அவைகளை ஆதரிப்பதும் இந்தியா கவர்ன்மெண்டைச்சேர்ந்த விஷயங்களாக இருக்கவேண்டும்.

இந்தியா மந்திரி.

இந்த வருஷம் வெகு முக்கியமானதாகப் பிற்காலத்தில் பாராட்டப்படும். காங்கிரஸ் கேட்டுக்கொண்டதை அனுசரித்து இந்தியாவில் தங்களுடைய லட்சியமென்ன வென்பதை சென்ற ஆகஸ்டு 20-ந் தேதியில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வெளியிட்டார்கள். இந்தியா மந்திரியும் வேறு சில பிரமுகர்களும் இங்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அதன் பலன் என்ன வாகுமோ தெரியாது. ஆனால் வாய்விட்டு தாராளமாகச் சொல்லும்படி இந்தியா மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் நமக்கு அனுமதி கொடுத்து நாம் சொன்னதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரி வருக்கத்தின் ஆட்சிக்கு எதிரானவர்களை அசட்டை செய்துவிட வில்லை. லோகமான்ய திலகர், மகாத்மா காந்தி நான் ஆகிய எங்களுக்கும் பேட்டி கொடுக்கப்பட்டது. முடிவு ஈசுவர சம்மதத்தைப் பொருத்திருக்கிறது. நமக்கு எதிரிகள் பலர் உண்டு. ஆனால் நியாயம் என்றும் கைகூடும். இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியார் நமக்கு உதவி புரிவர். ஆகையால் வருங்காலத்தை திடமாக எதிர் பார்க்கலாம்.

பந்தோபஸ்திலுள்ள நமது சகோதரர்கள்.

மிஸ்டர் முகம்மதலி, மிஸ்டர் ஷௌகத் அலி முதலிய நமது சகோதரர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இதைக் கண்டு நாம் மிகுதியும் வருத்தப்படவேண்டியிருக்கிறது. கடந்த மூன்று வருஷங்களுக்கு மேலாக பொது வாழ்வில் கலந்திருக்கும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் இருந்தும் இறந்ததைப்போல் பாவிக்கும்படி அதிகாரிகள் தண்டித்து விட்டார்கள். தேச கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்போருக்கு இதைவிடக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டிருக்கமுடியாது. அவ்விரு சகோதரர்களும் பிசகு செய்தவர்கள் என்றே வைத்துக்கொண்டாலும் போதியவளவு அவர்கள் இதுவரை கஷ்டப் பட்டுவிட்டார்கள். பிரபாதிபனான நம் முஸ்லீம் தலைவர்களின் மதக் கொள்கைகளை நாம் பெரிதும் பாராட்டுவதைத் தவிர்த்து வேறெதுவும் இச்சமயம் செய்யக் கூடாதவர்களாயிருக்கின்றோம். அவர்களுடைய கஷ்டம் நீங்கி சங்கிலிகளை அறுத்துக்கொண்டு வெளிவந்தபின் பன்மடங்கு அதிகமான ஊக்கத்துடன் அன்னார் தேச சேவை செய்யும் சந்தர்ப்பத்தை இந்திய மக்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருக்கிறார்கள்.

நமக்குள் இருக்கும் பிரிவுகள்.

நமது ராஜீய சங்கங்களுக்குள் அருவருப் புண்டாகும்படியான பிளவுகள் ஏற்படுவதைப் பார்க்கும் போதெல்லாம் எதிரிகள் மனங்களிக்கத் தவறுவதில்லை. ஆயினும் தற்போதைய உண்மையான நிலைமை என்ன? பற்பல வகுப்பினரும் சுயேச்சை யென்ற ஏக நோக்கத்தைக் கொண்டு போராடி வருகின்றனர். கடுமையாய்க் கலக்கம் செய்வோரை அடக்கிவிட தேச நிர்வாகிகளுக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் அதைப் பிரயோகிக்கப் பின் வாங்குவதில்லை. தங்கள் அதிகாரத்துக்கு ஆபத்து வரும் போலிருந்தால் அதை எப்படியாவது தடுக்க ஏதாவது உபாயம் தேடிவிடுகின்றனர். எப்பொழுது பிளவு ஏற்படப்போகிறது என்று அவர்கள் காத்திருக்கிறார்கள். எந்தக்கட்சி பலக் குறைவா யிருக்கிறதோ அத்துடன் அவர்கள் சேர்ந்துகொண்டு எதிர்கட்சியை சுலபமாய் நசுக்கி விடுகிறார்கள். ஈஸ்ட் இந்தியா கம்பெனியும் ஆதியில் இம்மாதிரித் தான் செய்துவந்தது. லார்டு மேயோ? ராஜப் பிரதிநிதியாயிருந்த போது அவருக்கு உத்தியோக முறையில் இங்கிலாந்திலிருந்து ஒருவிநோதமான கடிதம் கிடைத்தது. அதனில், 'இந்தியாவில் பிளவுகள் ஏர்படாவிட்டால் கூட யுத்தம் தொடங்க ஏதேனும் ஒரு காரணத்தைக் கண்டு பிடியுங்கள்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி பார்லிமெண்டில் இரண்டாந்தடவை ஸ்தானத்தை அபேக்ஷித்தபோது மிஸ்டர் பௌனகிரி என்ற இந்தியர் ஒருவரை அவருடன் போட்டிக்கு விட்டு மிஸ்டர் நௌரோஜிக்கு இடம் கிடைக்காமல் செய்தார்கள். இதைவிட கேவலமான நிலைமை வேறென்ன வேண்டும்?

ஜாதி வகுப்புக் கிளர்ச்சிகள்.

முதலாவது ஹிந்து முஸல்மான் ஆகிய இரு மகாசமூகங்களையும் எடுத்துக் கொள்வோம். அவை இயற்கையாகவே தேசத்தின் இரு கட்சிகளாய் அமைந்திருக்கின்றன. அவற்றிற்கு மேலாக மூன்றாவதுகட்சியொன்று, அதாவது ஒரு கிறிஸ்தவ கவர்ன்மெண்ட் இருப்பதால் அக்கட்சியினரின் தயவுக்கு இத்தேச மகா சமூகங்கள் இரண்டும் போட்டி போடவேண்டியிருக்கிறது அதன் பலனாக அவைகளுக்குள் சச்சரவுகளும் கலகங்களும் விரும்பத்தகாத பிளவுகளும் உண்டாகின்றன. இந்திய சமஸ்தானங்களில் அவ்விதமான சச்சரவுகளைக் கேட்டதேயில்லை. ஏன்? அங்கு ஆட்சி செலுத்துவோர் இரு மதஸ்தர்களில் ஒருவராகவே இருப்பதினால் தான். கல்கத்தாவிலும் லக்ஷ்மண புரியிலும் போனவருஷம் விசேஷ தீர்க்காலோசனை செய்த பின் இந்து முகம்மதிய ஐக்கியத்தை ஸ்திரப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அவை சித்தியாகாதபடி கலைத்துக்கொண்டுவர சில்லறை விஷயங்கள் சதாகாலமும் பிரிடிஷ் இந்தியாவில் தான் காண்கின்றன.

கட்டுப்பாடான சில ராஜீய ஸ்தாபனங்களில் அந்தந்த சமூகத்தலைவர்கள் முன்யோசனையுடன் ஒரு முடிவுக்கு வந்தால் அதை ஒப்புக்கொள்ளாத சிலரும் இருக்கத்தான் செய்வார்கள். ஒவ்வொரு சமூகத்திலும் அம்மாதிரி வழிக்குவர மறுதளிக்கும் சிலர் இருந்தே தீருவார்கள். பணப்பேய்பிடித்தும், சிலர் பயமுறுத்தப்பட்டும், மற்றும் சிலர் உத்தியோகஸ்தர்களின் தயவைஎதிர்பார்த்தும், அவ்வாறு விரோத உணர்ச்சி காட்டுவதுண்டு. உடன் பிரஜைகளைக் கைவிட்டாவது கவர்ன்மெண்டார் தம் இனத்தாருக்குக்கு ஏதேனும்சகாயம் செய்ய மாட்டார்களா என்ற நம்பிக்கையின்மேல் சிலர் கவர்ன்மெண்டாரைத் தாங்கிப்பேசுவதும் உண்டு. சென்னை மாகாணத்தில் புதிதாய் உதித்திருக்கும் பிராமணரல்லாதார் கிளர்ச்சியும் அத்தகையதென்றே சொல்லலாம். சுமார் 100 பேரையே மெம்பர்களாகக்கொண்ட அச்சங்கம் மூன்று பத்திரிகைகளைத்துணைகொண்டு விபரீதக்கிளர்ச்சி செய்துகொண்டு வருகிறது. ஆனால் அவர்களைப்போலிப் பிராமணரல்லாதார் என்றே சொல்லவேண்டும். வாஸ்தவமான பிராமணரல்லாதாரின் பிரதிநிதிகளாகிய சென்னை ராஜதானிச் சங்கத்தார்.வெளிக்கிளம்பியது முதல் போலிப்பிராமணரல்லாதாரின் கொட்டம் அதிர்ஷ்டவசமாய் அடங்கிப்போய்விட்டது.

உண்மைப் பிராமணரல்லாதார் சங்கத்தின் தலைவர் விசேஷ பிராபல்யம் வாய்ந்த திவான்பகதூர் கேசவப்பிள்ளையே ஆவர். இப்போது பல ஆயிரக்கணக்கான பேர் அச்சங்கத்தில் சேர்ந்திருக்கின்றனர். பிராமணருக்கு விரோதமாய்ச் செய்யப்படும் கிளர்ச்சியானது ஓரளவு நிர்வாக உத்தியோகங்களை எதிர்பார்த்துத்தான் நடந்து வருகிறது. சுயஆட்சி கேட்போரை எதிர்த்து கவர்ன்மெண்டைத் தாங்கிப் பேசினால் தமதுநோக்கம் சுலபமாய்க் கைகூடி விடுமென்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். மற்ற மாகாணங்களிலும் இம்மாதிரியே பல சில்லறைக் கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன

என்றும் சுய ஆட்சி: கேட்போரைப் பழிப்பது மிகவும் எளிதாய் விட்டது. ஜனங்களுக்கு ஜவாப்தாரியான ஆட்சி யேற்படும் வரையில் இவை போன்ற சில்லரைப் பிளவுகள் இருந்து கொண்டுதானிருக்கும். சச்சரவுகளுக்கும் கலகங்களுக்கும் ஆஸ்பதமாயிருந்து வருகிற மேலே சொன்ன மூன்றாவது கட்சியார் (ஆட்சி செலுத்துவோர்) நிர்வாக சுவாதீனத்தை யிழந்து விட்டால், இந்தேச இருமகா சமூகங்களும் இதர வகுப்பினரும் ஐக்கிய பாவத்துடன் பொறுப்பு வகிக்க முன் வந்து, கண்டிப்புக்குக் கட்டுப்பட்டிருப்பார்கள். ஒற்றுமைக் குறைவினால் ஏற்படும் இந்த அற்பக் கஷ்டங்களை யெல்லாம் நாம் அவ்வளவாகப் பொருட்படுத்தக் கூடாது. சிலர் அனாவசியமாய் விஷமம் செய்து காரியத்தைக் கெடுத்து வருகிறார்களானாலும் இந்த நிலைமை என்றைக்கும் நீடித்திராது. சுய ஆட்சி கிடைத்து விட்டால் அவ்விஷமங்களெல்லாம் தானாக ஒழிந்து போம்.

சில்லரைத் திருத்தங்கள்.

காங்கிரஸ் மகா சபை ஏற்பட்டது முதல் அவ்வப்போது கேட்டுவந்திருக்கும் தனிப்பட்ட திருத்தங்களைப்பற்றி இங்கு பேசுவதாய் உத்தேசமில்லை. ஒரு தடவை கேட்டதையே அடுத்தடுத்து மறுபடியும் கேட்டுவந்து காங்கிரஸ் அபிமானிகள் சலித்துப்போய் விட்டார்கள். சுய ஆட்சி என்ற ஒரு விஷயத்தில் தான் அவர்கள் இனிகவனம் செலுத்துவதாய் உத்தேசிக்கிறார்கள். ஜனங்களுக்கு அதிகாரம் கிடைத்துவிட்டால் சட்டங்களை இஷ்டப்படி திருத்தி யமைத்துக் கொள்ளலாம். இந்தியர் சட்ட சபைகளில் காங்கிரஸ் தீர்மானங்களை ஒன்று விடாமல் தற்கால நீதிக்கு ஒத்தபடி நிறை வேற்றிவைப்பார்கள். நீதி செலுத்தும் அதிகாரத்தை நிர்வாக அதிகாரிகளிடமிருந்து சுலபமாய் பிரித்துவிடுவார்கள். தேசத்தின் தேவையை அனுசரித்த கல்விச் சட்டங்களும் செய்து கொள்வது சாத்தியமாகும். ஜூரி விசாரணையை எங்கு பார்த்தாலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து விடலாம். வெளியேறும் இந்தியர்களைப் காப்பாற்றலாம். கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யலாம். ஜாதிமத வேற்றுமை பாராட்டி வருவது மறைந்து போகச் செய்யலாம். நாடெங்கும் ராணுவக் கலாசாலைகள் ஸ்தாபித்து ராணுவத்தில் இந்தியச் சிறுவர்களை உத்தியோகம் பெறச் செய்யலாம். சுய ஆட்சி கிடைத்து விடின், சட்ட திட்டங்களுக்கடங்கிய ராஜீயக் கலக்கத்தையும் குற்றங் குறையில்லாத பத்திரிகைகளையும் அடக்கு முறைகளைக்கொண்டு அடக்கப்பார்ப்பது அடியோடு ஒழிந்து போய்விடும். ஒரு நாகரீகம் வாய்ந்த தேசத்திற்கு அடக்கு முறைகள் ஏற்றதல்ல. இப்போதைப் போல் விசாரணையில்லாமல் சிறையில் அடைப்பதும் பந்தோபஸ்தில் வைப்பதும்தேசப் பிரஷ்டம் செய்வதும் சொத்துக்களைப்பறி முதல் செய்து ஆண்டியாக்குவதும் சுய ஆட்சி காலத்தில் நிர்வாக அதிகாரிகள் கையில் நிற்காது. ஒருவன் தான் செய்த குற்றம் இன்னதென்று தெரியாமல் சுயேச்சையை இழக்க நேரிடாது. சட்ட திட்டத்துக்கடங்கிய ராஜீய பிரசாரமும் கொடிகளும் மீட்டிங்குகளும் ஊர்கோலங்களும்

மாஜிஸ்ட்ரேட்டுகளால் தடுக்கப்பட மாட்டா. போலீஸ் உத்தியோகஸ்தர்களும் வரம்பு கடந்து நடக்கமாட்டார்கள், எனவே மகா சாஸனங்களிலும் ராஜவிளம்பரங்களிலும் எவ்வாறு கண்டிருக்கிறதோ, அப்படியே மனிதருடைய சுயேச்சை தக்கபடி பாதுகாக்கப்படும்.

ஒரு சுயேச்சை பெற்ற தேசத்தில் ஒருவன் சுயேச்சையாய் வாழுவதை நினைத்துப் பாருங்கள். மற்ற தேசத்தாரோடு சம அந்தஸ்து பெற்று, அடக்கு முறைகளை அறவே ஒழித்து, சொத்து சுதந்தரங்களையும் பாதுகாப்பதென்றால் இதைவிட வேறென்ன வேண்டும்? நமக்கு சுய ஆட்சியே இவற்றைக் கொடுத்தருளக் கூடும்.

முடிவுரை.

சகோதரப் பிரதிநிதிகளே, வெகுநேரம் ஆய்விட்டது; உங்களைக் காக்க வைத்ததற்காக மன்னியுங்கள். எனது ஆயுள் காலத்தில் இந்த ஒரு தடவை தான் காங்கிரஸ் மகாசபையின் தலைமையை வகிக்க நான் பாக்கியம் பெறக் கூடும். நம் அன்பார்ந்த தாய் நாட்டைப்பற்றி இச்சந்தர்ப்பத்தான் வாய்விட்டுப் பேசும் சமயம். நான் மறுமுறை வாய்விட்டுப் பேசவோ, உங்களுடைய தலைவியாக ஒத்துழைக்கவோ நிகழப்போகும் வருஷத்தில் சந்தர்ப்பம் ஏற்படுமோ, ஏற்படாதோ, யாருக்குத் தெரியும்? ஈசனருளால் எவ்வித சிரப்பத்தமும் இராவிடில் வரும் வருஷத்திலும் உங்களுடன் ஒத்துழைக்க வணக்கமாய் நாடுகிறேன். என்னிடத்தில் நம்பிக்கை வைத்து என்னைச் சபா நாயகியாக தெரிந்தெடுத்தீர்கள்; நம்பிக்கைத் துரோகம் நான் செய்யாதிருக்கும் வரையில் என்னிடத்தில் அந்த நம்பிக்கையை வைத்து ஆதரியுங்கள். நான் சொல்லுவதையெல்லாம் நீங்கள் ஒப்புக்கொள்ளாமலிருக்கலாம்; என்னுடைய நடத்தையைக் கண்டிக்கலாம்; எனது விரோதிகளால் சொல்லப்படுவதை மட்டும் அப்படியே நம்பிவிடாதீர்கள். அவர்களுடைய கண்டனத்துக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்க எனக்கு சாவகாசம் கிடையாது. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் இந்நாட்டுக்கு உழைப்பதாய் மட்டும் நான் உறுதி கூறுவேன், எப்போதும் நீங்கள் சொன்னபடியெல்லாம் நான் நடப்பதாய் உறுதி கூற முடியாது. ஒரு தலைவருடைய கடமை வழிகாட்டுவதேயாகும். எந்த விஷயத்திலும் தலைவரிடத்திலேயே பொறுப்புக் காட்டவேண்டும். தலைவரே பொது ஜனங்களுக்கு நூவரப்தாரியாகவேண்டும். தளகர்த்தர் தம்மிடமுள்ள சிப்பந்திகளைவிட அதிகம் முன்யோசனை யடைத்திருப்பாராகையால் மும்முரமான சண்டையினிடையில் தம்முடைய நடத்தைக்கு நியாயம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. முடிவைக்கண்ட பின்னரே அவருடைய யோசனையதை அறியவேண்டும். பிரஸ்தாப விஷயத்திற்கும் இந்த சித்தாந்தம் பொருந்தும். இந்நாட்டில் நான் பிறந்து வளர்ந்தவளில்லை; அபிமானத்தையுத்தேசித்தே இதை என் தாய்நாடாகக் கொண்டேன். இதுவரையில் தலைவி என்று மகுடம் சூட்டிக்கொண்டு நான் வந்ததில்லை. போர்முனையில் நின்று மட்டும் தீரமாய்ச் சண்டையிட்டேன். என்றால் கூடியவரையில் தேச சேவை

செய்து வந்தேன். என்னை இச்சபையின் தலைவியாகத் தெரிந்தெடுத்தீர்கள். அந்தப் பொறுப்பையும் அந்தஸ்துக்குரியபடி வகித்துப் பார்க்க பிரயாசைப் படுவேன்.

நம் தாயின் நிலைமையை கவனிப்போம். சுயேச்சை நாடுகளில் ஒன்றாக இந்தியா தலைக்கிளப்பவும், இந்நாட்டு மக்கள் எந்நாட்டிலும் மதிக்கப் பெற்றிருக்கவும், இழந்தபெருமையை மீட்டு இன்னும் கௌரவமாய் இந்தியா விளங்கவும் யார்தான் உழைக்கக்கூடாது? யார்தான் தம் உயிரைத் தியாகஞ் செய்யக் கூடாது? பரமார்த்திக சாஸ்திரத்தில் ஈடுபடவும், வீரதீரச் செயல்களைக் கண்டு ஆச்சரியப்படவும், மனிதரெவரும் இந்தியாவுக்கு வராமல் வேறெங்கு போவது? உலகத்தாருக்கு இப்போது வழிகாட்டிகளாய் நிற்கும் ஐரோப்பியரும் அமெரிக்கருமாகிய ஆரிய புத்திரர்கள் எங்கிருந்து உதித்தார்கள்? இந்தியாவைப் போல் வேறெந்த நாடாவது இவ்வளவு கஷ்டப்பட்டதுண்டோ? குருக்ஷேத்திர போர்க்களத்தில் கடைசியாய் ஆயுதத்தை எறிந்துவிட்டது முதல் இந்தியர் பட்டிருக்கும் பாட்டைச் சொல்ல வல்லவரும் உளரோ? இத்தாய்நாட்டின்மேல் படையெடுத்து வந்தவர்கள் பலரும் திரும்பிப் போக இஷ்டமில்லாமல் வந்தவிடத்திலேயே ஐக்கியப்பட்டனர். எல்லாம் கடந்து இந்தியா ஓர் உருப்பட்டு இப்போதுதான் வெளிவந்திருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தப்பிப் பிழைத்து வந்த இந்நாட்டுக்குப் பெருமையும் சுயேச்சையும் தழைத்து ஓங்குக.

THE SWADESAMITRAN POWER PRESS, MADRAS.

PRINTED AT
THE SWADESAMITRAN
POWER PRESS.
MADRAS